# முப்பெரு நண்பர்கள்

அல்லது

## நட்பின் மாட்சி

உ

K. சுப்பராவு

(Tamil Pandit, Raja's High School, Sivaganga)

எழுதியது.

SIVAGNANA MUNIVAR LIBRARY
சிவஞான முனிவர் நூல்நிலையம்
TINNEVELLY

69

பிரசுர கர்த்தர்:

இ. மா. கோபால கிருஷ்ணக் கோன்,

புத்தக வர்த்தகர், மதுரை.

பதிப்புரிமை] 1930 [விலை அணா, 8.

# முன்னுரை

மக்கள் மன நிலையை ஒழுங்குபடுத்தி, அவர்களை அறம் பொருளின்பம் வீடெனும் அந்நாற்பொருளையு மடைந்து இன்புற்று இருக்கச் செய்தற்குத் தோன்றாத் துணைக் கருவிகளா யமைந்துள்ளவை, முன்னாளிற் றிகழ்ந்து, செயற்கருஞ்செயல் பல செய்து, ஞாயிறுந் திங்களும் ஞாலத்துள்ள வரைக்கும் தம் புகழ் நிறுவிச் சென்ற தனிப் பெருமக்களின் வாழ்க்கைச் சரிதைகளே யாம் என்பது, கலை நலம் பெற்று வாழும் அறிஞர் பலரும் ஒப்பக் கூறும் உயரிய கருத்தாம்.

ஆதலின், இந்திய நாட்டின் இறவாப் பெருமை வாய்ந்த பேரிதிகாசமாகிய ‘இராமாயணம்’ என்னும் சீரிய நூலின்கண் காணப்படும் உத்தமப் பெருமக்களாகிய குகன், சுக்கிரீவன், விபீஷணன் என்போரது வாழ்க்கை வரலாற்றை நம்மிளைஞர் உணர்ந்து, நல்லறிவு பெற்றுத் திகழ வேண்டுமென்னு நோக்கத்துடன் இந்நூல் இனிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருத்தலின், அறிஞர் இதனை இளமாணவர்க்குப் பயன்படுமாறு செய்ய வேண்டுகிறோம்.

பிரசுர கர்த்தர்

| பொருள் | உள்ளுறை | பக்கம் |
| --- | --- | --- |
| குகன் | ... | 1 |
| சுக்கிரீவன் | ... | 29 |
| விபீஷணன் | ... | 81 |

ஸ்ரீ:

# குகன்

பூமிசைப் பொலிந்து, புண்ணிய பூமியென்று கொண்டாடுமாறு விளங்குவதும், தம்மில் மூழ்கினவரைப் புனித மாக்குவனவும் இடையறாத நீர் வளப்பத்தை யுடையனவுமான புண்ணிய நதிகள் பாய்ந்து வளந்தருவதற்கிடமானதும், கடவுளிடத்திலே மனத்தைச்செலுத்தி நற்கதிபெற்ற உத்தமர்கள் அவதரிப்பதற்கு இடமாயிருந்ததும், கல்வியறிவு ஒழுக்கங்களால் சிறப்புற்று விளங்குவதும், நாகரிகத்தில் மற்ற நாடுகளுக்குத் தலைமையாயிருப்பதும் நம் இந்திய தேசமேயாகும்.

இதில் கோசல நாடு என்னும் ஒரு நாடு உண்டு. அதில் சரயு என்னும் ஜீவ நதி பல கால்களாற் சென்று, மக்களுக்கு அமுதே போல உதவி வருகிறது. அதனால், அத்தேசத்திலுள்ள மக்களெல்லாம் நிறைந்த வளத்தைப் பெற்று மகிழ்ந்திருக்கின்றார்கள். இத்தகைய நாட்டிற்குத் தலை நகர் தேவ லோகத்தைக்காட்டிலும் அழகு பெற்று விளங்கும் அயோத்தி யென்பது.

இந்நகரின்கண் தசரதன் என்னும் பெயருடைய ஒரு மன்னன் அரசாண்டு வந்தான். அவன் அரசர்க்குரிய குணங்களெல்லாம் அமையப்பெற்றவன். எல்லோரும் அவனை அன்போடு கொண்டாடுவர். அவனும் தன் குடிகளுக்குத் தன்னாலும், தன் பரிஜனங்களாலும், விலங்குகளாலும் துன்பம் நேராதபடி பாதுகாத்து

வந்தான். அம்மன்னவன் ஆட்சியில் குடிகள் துன்பம் என்பதைக் கனவிலும் அறியாதவர்களாய் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

இத்தகைய மன்னர் மன்னனுக்குக் கோசலை, சுமித்திரை, கைகேயி என்ற மூன்று உத்தம மனைவியர் மூலமாக இராமன், பரதன், இலக்குவன், சத்துருக்கினன் என்ற நான்கு குமாரர்கள் தோன்றி, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, கலைகளையெல்லாம் உத்தம ஆசிரியர்களிடத்துக் கசிசறப் பயின்றார்கள்.

உரிய பருவம் வரப்பெற்றபின், விசுவாமித்திரரால் யாகத்தைப் பாதுகாக்கும்பொருட்டு அழைத்துச் செல்லப்பட்டு, இராமபிரானும் இளையோனும் அதைக்காத்த பின்னர், அம்முனிவர் குறிப்பின்படியே மிதிலைக்குச் சென்றனர். ஆங்கு ஒருவராலும் வளைக்க முடியாத ஒரு வில் இருந்தது. அதை இராம பிரான் ஒடிக்கவே, ஜனகன் மகிழ்ந்து, தசரதனுக்கு ஓலை போக்கி, அவனை வரவழைத்து, தன் மகளான சீதையை இராமபிரானுக்கும், தன் உடன் பிறந்தார் மக்களை மற்ற மூன்று சகோதரர்களுக்குமாக மணம் செய்து கொடுத்தான். திருமணக் கோலத்தோடு நகருக்குத் திரும்பி வந்த தசரதன், முன்னோர்கள் வழக்கப்படி இராம பிரானுக்கு முடி சூட்டிவிட்டுத் தவ மேற்கொள்ள எண்ணிச் சோதிடர்கள் குறித்த நாளில் மகுடம் புனைய ஏற்பாடு செய்தான்.

இஃதிவ்வாறிருக்க, கூனி யென்னும் கைகேயியின் தோழியானவள், அவளை நோக்கி, 'தலைவி, கேட்டனையா ஓர் ஆச்சரியத்தை! நாளைக்கு இராமனுக்குப் பட்டாபி

ஷேகம் செய்யப்போகிறார்களாம். உன் மகன் ஊரிலில்லை. அவன் வருவதற்குள் முடி சூட்ட வேண்டுமென்று எண்ணியிருக்கிறார்கள். நீ பேசாமல் இருக்கின்றாயே! இதுதான் தக்க சமயம். சம்பராசுர யுத்தத்தில் மன்னர் உனக்குத் தருவதாகக் கூறிய இரண்டு வரங்கள் இருக்கின்றன அல்லவா? அவற்றுள் ஒன்றால், உன் மகனுக்குப் பட்டம் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்; மற்றொன்றால், இராமன் பதினான்கு வருடம் காடு சென்றுறைந்து வரவேண்டுமென்று கேட்டுக்கொள்,' என்று கூறினாள். கைகேயியும், மன்னன் அந்தப்புரத்துக்கு வந்திருக்கும் சமயத்தில் அவ்விரண்டு வரங்களையும் பெற்றாள். அதனால், இராம பிரான் காடு செல்லவேண்டியதாயிற்று. இளையோனும் மரவுரிதரித்து உடன் செல்ல ஆயத்தமானான். கணவனைப் பிரிந்திருக்க மனம் பொறாதவளான சீதையும், உடன் செல்லத் துணிந்தாள். மந்திரியாராகிய சுமந்திரர் தேரோட்டிக்கொண்டு வர, எல்லாரும் காடு சென்றனர். சுமந்திரர் அவர்களையெல்லாம் காட்டில விட்டுவிட்டு, இராம பிரான் உத்தரவைப் பெற்று, நகரத்திற்குத் திரும்பினார்.

ஆண்டிருந்து இராம பிரான் முதலியவர் சிறிது தூரம் நடந்து சென்று, கங்கைக் கரையை யணுகினர். அங்கே தவம் செய்துகொண்டிருந்த முனிவர்களெல்லாம் அம்மூவரையும் வரவேற்று, வேண்டிய உபசாரங்கள் செய்து, வழியில் நடந்து வந்ததனால் அவர்களுக்கு ஏற்பட்டிருந்த வருத்தத்தை நீக்கினார்கள். ஆங்குச் சற்று இளைப்பாறியிருந்து, அனைவரும் கங்கையில் நீராடினர். இராம பிரான் தான் செய்ய வேண்டிய

காலைக் கடனைச் செய்து முடித்தான். அருந்தவர்களும் காய், கனி, கிழங்குகளைக் கொணர்ந்து கொடுத்தார்கள். மூவரும் உண்டு ஒருபால் இனிதிருந்தனர்.

அங்ஙன மிருந்துகொண் டிருக்கும்பொழுது, தோற் செருப்பணிந்துகொண்டிருக்கும் கால்களையுடையவனும், இருளே உருவமெடுத்து வந்தது போன்ற வடிவத்தை யுடையவனும், அரையில் தோலுடை யணிந்தவனும், இரத்தக் கறை பொருந்திய வாளாயுதத்தை உடையில் அணிந்தவனும், விஷம் பொருந்திய பாம்பு போன்ற பார்வையை யுடையவனும், வச்சிராயுதம் போன்ற இடையை யுடையவனும், களிறு போன்ற வேடர் கூட்டங்களாற் சூழப் பெற்றவனும், ஆயிரக் கணக்கான ஓடங்களை யுடையவனும், கங்கைக் கரையில் உள்ள சிருங்கிபேரம் என்னும் நகரத்திற்குத் தலைவனும் ஆகிய குகன் என்னும் பெயரையுடைய வேடர்தலைவன், அவர்கள் வந்திருப்பதைக் கேட்டான். அவர்களைக் காண வேண்டு மென்ற ஆசை அவனுக்குண்டாயிற்று. உடனே அவன் தேனையும் மீனையும் சேகரித்துக்கொண்டான்; சுற்றங்கள் புடை சூழ வள்ளலான இராமபிரான் தங்கியிருந்த தவப்பள்ளியின் வாயிலைச் சமீபித்தான்.

'உணவும் உறக்கமும் இல்லாமல் இவ்வாறு வனம் அடைய நேர்ந்ததே!' என்ற பெருங்கவலையோடு வாயிலில் நின்றுகொண்டு அண்ணனுக்கும் அவன் மனைவிக்கும் யாதொரு தீங்கும் நேரா வண்ணம் காவல் புரிந்து கொண்டிருக்கும் இளையோனைக் குகன் கண்ணுற்றான். அவனைப் பார்க்கும்போது ஏதோ வருத்தத்தோடு நிற்பதாகத் தோன்றிற்று. 'இம்மன்னனுக்கு எத்தகைய

துன்பம் நேர்ந்ததோ! தெரியவில்லையே!' என்று மயங்கி, குகன் அவனை நோக்கியவாறே நின்றுகொண்டிருந்தான். இளையோனும் வாயிலில் வந்து நின்ற குகனைப் பார்த்து, '' நீ யார்? எங்கு வந்தனை?' எனக் குகன், 'அண்ணலே, நான் சிருங்கிபேரம் என்னும் நகரில் வாழ்பவன்; அளவிறந்த தோணிகளை யுடையவன்; நின் நாய்போன்ற அடியவன், உங்களைக் கண்டு வணங்கி அருள் பெறவே ஈண்டு வந்தேன்,'' என்று கூறினன்.

இங்ஙனங் கூறக் கேட்ட இளையோன், அவன் முகத்தைப் பார்த்து, "இவன் முகத்தில் ஒளியும் அன்பும் ததும்பிக்கொண்டிருக்கின்றன. இவன் பேச்சும் மனத்தை யுருக்கும் தன்மையதா யிருக்கின்றது. இவன் தாயினும் அன்புடையனாகக் காணப்படுகிறான். ஆதலால், இவன் வரவை நம் முன்னவருக்கு அறிவித்தலே தக்கது,'' என்று எண்ணி, உள்ளே சென்று, இராமபிரான் அடிகளில் வீழ்ந்து வணங்கி, "அண்ணா, யாரோ ஒருவன் வாயிலில் வந்து நிற்கிறான். அவன் சிருங்கிபேரம் என்னும் நகரில் வாழ்பவனாம்; குகன் என்னும் பெயரை யுடையனாம்; 'அகத்தினழகு முகத்தில் தெரியும்,' என்பது போல, அவனுடைய முகத்தைப் பார்த்தாலே மிகவும் அன்புடையனாகவும் உத்தமக் குணமுள்ளவனாகவும் காணப்படுகிறான்; உங்களைப் பார்க்க வேண்டுமென்று விருப்பங் கொண்டு வந்திருக்கிறான்; தன் வருகையைத் தெரிவிக்குமாறு வேண்டுகிறான்,'' என்று அறிவித்தான்.

கருணைக் கடலாகிய இராமன், 'அழைத்து வருக,' என்று கூறவே, இளையோன் சென்று அழைத்து வந்

தான். குகன் உள்ளே வந்து, கீழே விழுந்து வணங்கி யெழுந்து, வாய் புதைத்து, நின்றுகொண் டிருந்தான். இராமன் கீழே உட்காரும்படி பல முறை சொல்லியும் கேளாமல் குகன் நின்றுகொண்டே தான் கொண்டு வந் திருக்கும் தேனையும் மீனையும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினன். அவன் அன்புடைமையையும், பணி வுடைமையையும் கண்டு வியந்த இராமன், "அன்ப, நீ மன விருப்பத்தோடு கொண்டு வந்தமையால், யான் இவற்றை ஏற்றுக்கொண்டேன். நாங்க ளெல்லோரும் நாளைக்கு இந்தக் கங்கைக் கரையைக் கடந்து செல்ல வேண்டும். ஆதலால், நீ உன் ஊர் சென்று, இன்றிருந்து நாளைக் காலையில் உன் தோணிகளோடும் இவ்விடம் வந்து சேர வேண்டும்," என்றனன்.

அளவிலாத அன்புடைய குகன் இராமனை நோக்கி, "அண்ணலே, அரசர்க் கரசரே, வான்மீகர் முதலிய உத் தமக் கவிகளால் புகழப் பெற்றதும், சரயு நதி பாய்ந்து நீங்காத வளந் தருவதும், பூமகளுக்குத் திலகம் போல விளங்குவதும், ஆணைக்கு அடங்கி நடக்கும் குடிகள் இருக்கப் பெற்றதுமான மேன்மை தங்கிய தல்லவா உம் நாடு? மேகங்கள் படிந்த பல சோலைகள் சூழ்ந்து பல நிறப் பூக்கள் மலர்ந்து விளங்குவதால் பூமி தேவிக்கு நவ ரத்தின ஆபரண மணிந்த மார்புபோல விளங்குவ தல்லவா உம்முடைய நகரம்? அன்றியும், எல்லாரும் தவஞ் செய்து அடைய வேண்டு மென்று விரும்புகிற தேவ லோகத்துள்ள தேவர்களும் இறங்கி வரவேண்டு மென்று எண்ணும்படியான சிறப்பு வாய்ந்ததல்லவா அது? தெய்வத் தச்சரும் கண்டு வெட்க மடையும்படி

யான சிறந்த வேலைப்பாடுகளமைந்து விளங்குவதல்லவா? அத்தகைய சிறப்பு வாய்ந்த நகரத்தின்கண் இந்திர சபையிலும் பதின்மடங்கு அழகு மிக்கு விளங்குகின்ற நவமணி மண்டபத்திட்ட சிம்மாசனத்தின் மீதிருந்து ஏழுலகினும் செங்கோல் செல்லுமாறு அரசாளுபவ ரல்லவோ உம் தந்தையார்? அவர் பத்துத் திக்கிலும் தேரைச் செலுத்தித் தசரதர் என்ற காரணப் பெயர் கொண்டவ ரல்லரோ? இந்திரனோடு எதிர்த்து வந்த சம்பராசுரனோடு போர் புரிந்து ஜயித்து, அவ்விந்திரனுக்கே அவனுலகத்தைக்கொடுத்து மகிழ்ந்த பெருங்கொடையாளரல்லரோ? அறனும் அருளும் சிறந்து விளங்குபவ ரல்லரோ? அரசர்கள் செய்ய வேண்டிய யாகங்களை யெல்லாம் செய்து புகழ் பெற்றவரல்லரோ? வறிஞர்க்கெல்லாம் வேண்டியவற்றைக் கொடுத்து இரப்பென்பதே தம்நாட்டில் இல்லையாம்படி செய்தவ ரல்லரோ? குடிகளுக்கு அன்பினால் தாயைப்போலவும் கல்வி அறிவு ஒழுக்கங்களைப் போதிப்பதனால் தந்தையைப் போலவும் விளங்குபவ ரல்லரோ! பசுவும் புலியும் ஒரு துறையில் நீர் குடிக்குமாறு பகையோட்டி அரசாளுபவ ரல்லரோ ? இத்தகைய மன்னர் மன்னரான தசரதருக்கு மைந்தராய்ப் பிறந்து, கல்வி யறிவு ஒழுக்கங்களும் அரச இலக்கணங்களும் அமையப் பெற்ற நீர், மந்திரிமார் பலர் சூழ்ந்திருக்கச் சிம்மாசனத்தின்மீது வீற்றிருந்து அரசாள வேண்டியவ ரல்லீரோ? இன்றே உமக்கு மகுடம் சூட்டுவிக்க நாள் குறிக்கப் பெற்றிருக்கிற தென்றும், அதற்காகப் பல தேச மன்னரும் வந்து சூழ்ந்து, நிற்பதற்கும் இடமின்றி நெருக்குண்டு நிற்கின்றார்களென்றும்

கேள்வியுற்றேனே! அங்ஙன மிருக்கச் சடையும் முடியும் தாங்கித் தம்பியாரோடும் மனைவியாரோடும் ஈண் டடைந்ததென்ன ஆச்சரியம்! இவ்வேடத்தோடு உம்மைக் காண என் மனம் பதைக்கின்றது! பேசுவதற்கும் நா எழவில்லை! நிற்பதற்கும் இயலாதபடி என் கால்கள் நிலை தடுமாறுகின்றன! என் கண்களும் இக்கோலம் பார்க்க அஞ்சுகின்றன! இங்ஙனம் பார்க்கநேர்ந்த கண் களை நான் உடனே தோண்டி வைத்திருப்பேன். நீர் படும் துன்பத்தைக் கண்டு உமக்கு ஏவல் புரிந்து உதவி செய்யலாமென் றெண்ணியே அவ்வாறு செய்யா தொழிந்தேன். அண்ணலே, அன்பரே, அரசரே," என்று கூறிப் பாதங்களில் சோர்ந்து விழுந்தான்.

சோர்ந்து விழுந்த குகனது மனப்பான்மையை நன் கறிந்த இராமன், அவனை யெடுத்து மார்போடு இறுகத் தழுவி, அவன் மனப் பான்மையை யெடுத்துக் கூறு வான்போல, சீதையையும் தம்பியையும் ஒரு முறை நோக்கிப் பின் குகனையும் நோக்கி, 'யாதினுமினிய நண்ப, எம்மோடு நீயும் ஈண்டிருக்க,' என்று அன்போடு கூறி னன். சிறிது நேரம் மன அமைதியுற்று ஆண்டிருந்த குகன் இளையோனை நோக்கி, 'அன்பரே, நீங்கள் நகரத் தை விட்டு அரச செல்வத்தைத் துறந்து இக்கோலத் தோடு ஈண்டு வர நேர்ந்த காரண மென்ன?' என்று கேட்டான்.

இளையோன், குகனை நோக்கி, 'அன்ப, சம்பராசுர யுத்தத்தில் என் அன்னையான கைகேயி இரண்டு வரங் கள் பெற்றிருந்தாள்; அவற்றுள் ஒன்றினால் தன் மக னுக்குப் பட்டம் வரவும், மற்றொன்றால் என் முன்னவ

யான இராமர் பதினான்கு வருடம் காடு சென்றுறைந்து வரவும் செய்துகொண்டாள். தந்தையாரின் வாக்கை நிறைவேற்றி வைக்குமாறு என் முன்னோர் காட்டுக்கு வந்தார். நாங்களும் அவரைப் பின் பற்றி வந்தோம்,' என்று நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறே கூறி முடித்தான். கேட்ட குகனும், ஒன்றும் கூறத் தோன்றாது, வாளா இருந்தான். இரவும் அடுத்தது. இளையோனும் படுக்கை யமைத்தான். இராமனும் சீதையும் படுத்து உறங்கி விட்டார்கள். இளையோனும் வாயிலில் நின்று கண்களை இமைக்காதவனாய், வில்லையூன்றிய கையோடும், அவர்க்கு யாதொரு தீங்கும் நேராத வண்ணம் காவல் புரிந்து நின்றான். இத்தன்மையை யெல்லாம் பார்த்துக்கொண்டு நீங்காக் கவலையோடும் நீர் அறாத கண்களோடும் குகனும் நின்றுகொண் டிருந்தான்.

இரவும்கழிந்தது. வெய்யோனும் உதயஞ் செய்தான். இராமனும் துயிலுணர்ந் தெழுந்தான்; காலைக் கடன்களை முடித்தான். குகனை நோக்கி, 'நண்ப, நாங்கள் இக் கங்கையைக் கடந்து செல்ல வேண்டும். நின் ஓடங்களை விரைவில் கொண்டுவா,' என்று கூறக் கேட்ட குகன், "தலைவீர், இவ்வனம் என் காவலில் உள்ளது. ஆயிரக் கணக்கான புலிபோன்ற வேட்டுவ வீரர்கள் நீர் ஏவிய குற்றேவல்களைச் செய்யக் காத்திருக்கிறார்கள்; அவர்கள் மிகவும் வலியமைந்தவர்கள். எத்தகைய பகைவர் வரினும் சிறிது நேரமேனும் அவர் நின்று போர் செய்ய இயலாதவாறு புறங்கொடுத் தோடச் செய்து விடுவார்கள்; எந்த லோகத்திலிருந்து எந்தப் பொருளை வேண்டுமென்று விரும்பினாலும் ஒரு நொடியில் கொண்டு வந்து

சேர்த்து விடுவார்கள். தேவரும் நுகரத் தகுந்த தேனும் தினைமாவும் ஈண்டே யிருக்கின்றன. வேண்டியமட்டும் அருந்தலாம். விளையாடத் தகுந்த நறுமணம் கமழும் சோலைகள் இருக்கின்றன. புனலாடக் கங்கை யிருக்கின் றது. துகில்போல உடுத்திக்கொள்ளத் தோலிருக்கின்றது. இனிதுறங்கப்பரண்கள் இருக்கின்றன. பகைவர் வரினும் விரைந்தோட்டிவிடச் சிலைபூண்ட கைகள் இருக்கின்றன. அரசரே, நீர் சொல்லியபடி யெல்லாம் கேட்டு நடக்க யான் உம் சமீபத்திலேயே எப்பொழுதும் காத்துக் கொண்டிருக்கிறேன். ஆதலால், நீங்கள் எல்லாரும் இங் கேயே வசித்திருக்கலாம். எங்கள் குடிலில் சிலநாள் தங்கி நீங்கள் வாழ்தலைப் பெரும்பாக்கியமென்று நினைக்கிறேன். இதற்குமேல் யான்அடையத் தகுந்தது எவ்வுலகத்தினும் இல்லை. திருவருள் புரிய வேண்டும்," என்று பல முறை இரந்து கேட்டுக்கொண்டான்.

இராமன் மனமிரங்கிக் குகனை நோக்கி, "அன்ப, நீ என் சிறந்த நண்பன் என்பதில் தடையில்லை. இனி என் சுற்றம் உன் சுற்றம்; என் பொருள் உன் பொருள்; நீயே எனக்கு உயிரினும் சிறந்த துணைவன். இதுகாறும் நால்வாயிருந்த நாங்கள் இனி ஐவர் துணைவராயினோம். காட்டுக்கு வந்ததனுல் ஒரு பெருத்த இலாபமேகிடைத் தது. வராமல் நான் பட்டம் பெற நேர்ந்திருந்தால், உன் னைத் துணைவனுகப் பெற்றிருக்க முடியாது. எல்லாம் நன் மைக்குத்தான் என்று ஆன்றோர் கூறும் பழமொழி மெய்யே யாயிற்று. நீ யென் துணைவன். ஆனதால், உன் சுற்றமும் என் சுற்றமாயிற்று. அதைக் காக்க வேண்டுவ தும் என் கடமையுள் ஒன்றல்லவா? அதற்கொரு துன்

பம் நேருமானால், அதை நான் எனக்கு நேர்ந்ததாகவே கருதுவேன். ஆதலின், அதற்கு ஒரு தீங்கும் நேராமல் நீ இங்கிருந்து காத்துக்கொண்டிரு. தலைவனைத் தெய்வ மென்றெண்ணி அவன் ஆணைக்கு அடங்கி நடப்பவர்க ளல்லவா நம் குடிகள்? அவர்களுக்கு உற்ற துன் பத்தை நீக்கிப் பாதுகாப்பதற் கல்லவா நின்னை யீண்டுத் தலைவனாய் அடைந்திருக்கிறார்கள்? அவர்களை வருந்தும் படி விட்டுவிட்டு நீ வருதல் கூடாது. நீ இப்பொழுது என்னோடு வருதலையொழி. உரிய காலம் கடந்து திரும் பும் பொழுது நான் உன்னைச் சந்திக்கிறேன். இப்பொ ழுது கங்கையைக் கடந்து செல்லுமாறு உன் ஓடங்களை வரவழைப்பாயாக," என்றனன்.

இந்த வார்த்தைகளை யெல்லாம் கேட்ட குகன், மறுமொழி யொன்றும் கூற இயலாது, தானே சென்று, சிறந்த ஓடங்களைக் கொண்டு வந்தான். இராமன் தம்பி யோடும் சீதையோடும் அங்கே ஐம்பொறிகளை அடக்கி அருந்தவம் செய்துகொண்டிருந்த முனிவர்களிடம்விடை பெற்றுக்கொண்டு, அவர்கள் மனம் பின் தொடர்ந்து வர, ஓடத்தில் ஏறி அமர்ந்தான். குகன் தானே ஓடத்தை மெல்லச் செலுத்தி, அக்கரையிற் கொண்டு போய்ச் சேர்த்தான். இராமனைப் பிரிந்திருக்க ஒரு சிறி தும் அவன் மனம் பொறுக்கவில்லை. நண்பருக்காகத் தம் உயிரையும் ஒரு பொருட்டா யெண்ணாத எத்தனையோ உத்தமர்களைப்பற்றி நாம் கேட்டிருக்கிறோ மல்லவா? குகன் எங்ஙனம் பிரிந்திருக்க மனம் சகிப்பான்? இராம பிரான் காலில் விழுந்தான். "இராமச்சந்திரரே, நாயடி யேன் ஒன்று கூறுகின்றேன். அதை நீர் கேட்டருளல்

வேண்டும்: நீர் முன்பின் நடந்தறியாத சீதையை அழைத்துக்கொண்டு, தம்பியோடும் காட்டில் வழிநடந்து செல்லப்போகிறீர்; முன்பின் இவ்வழியே நடந்தறியாதவர்கள் செல்வது மிகவும் வருத்தம் தரும்; பிளவுபட்டுப் பிரிந்து செல்லும் வழிகள் அநேகம் இருப்பதால், அவற்றைக் கண்டுணர்தலும் அரிது. நானும் பின்தொடர்ந்துவரின், அவ்வழிகளை யெல்லாம் தெரிந்து, நல்வழியில் உங்களை அழைத்துச் செல்வேன்; நல்ல காய் கனிகளை வேண்டும்போதெல்லாம் கொண்டு வந்து தருவேன்; இளைப்பாற வேண்டிய இடங்களிலெல்லாம் தகுந்த உறைவிடம் அமைப்பேன்; ஒரு நொடியும் உங்களைப் பிரியாமல் பின் தொடர்ந்து வருவேன்; காட்டிலுறையும் தீய விலங்குகள் வரினும், அவற்றால் யாதொரு தீங்கும் நேராதபடி பாதுகாப்பேன்; எவ்வளவு பெரிய மலையினுச்சியிலுள்ள பொருள்களை விரும்பினாலும், நினைத்த போதே கொண்டுவந்து சேர்ப்பேன்; அநேகம் விற்களை என் கையில் கொண்டுவந்திருக்கிறேன். நான் ஒன்றுக்கும் பயப்படமாட்டேன். பகைவர் யாரேனும் வரினும், அவரைப் பெருங்காற்றிற் பட்ட பஞ்சுபோற் பறக்கும்படி வெருட்டிவிடுவேன்; என் உயிரைக் கொடுத்தேனும் உங்கள் உயிரைக் காப்பேன். ஆதலால், திருவுளமிரங்கி உடன்வரப் பணித்தல்வேண்டும்,'' என்றனன்.

கருணைக் கடலாகிய இராமன் சிறிது நேரம் ஒன்றும் கூறாதிருந்து, பிறகு குகனை நோக்கி, 'அன்ப, என்னுயிரனையாய், நீ என் தம்பி. இதோ நிற்கும் இளையோன் உன் இளையோன். சீதை உன் சுற்றத்தவள். கடலாற் சூழப்பெற்ற இவ்வுலகமெல்லாம் உன்னுடையதே.

நான் உன் மனப் போக்குக்கு மாருகக் கூறுகின்றேன் என்று நினைக்க வேண்டா. இவ்விளையோன் பின்ருெடர்ந்து வந்து யாதொரு குறையும் நேரா வண்ணம் பாதுகாப்பான். இவ்வுலகில் பகையென்பதே எனக்கு இல்லை. அஞ்சாதே. ஆண்டுள்ள சுற்றத்தை யெல்லாம் காக்கப் பரதன் இருக்கின்ருன். ஈண்டுள்ள சுற்றத்தை யெல்லாம் காக்க நீ அவசியம் இருக்க வேண்டும். என் சொல்லைக் கடவாதே. நான் திரும்பி வரும்பொழுது நின்னிடத்திற்கு வருகின்றேன்," என்று எடுத்துக் கூறி, விடைகொண்டு, காடு நோக்கிச் செல்ல, குகனும் தாயைப் பிரிந்த இளங்கன்றெனவாடித் தயங்கியிருந்தான்.

இராமன் முதலியவர்களைக் காட்டில் கொண்டு வந்து விட்டுத் திரும்பிச் சென்ற சுமந்திரர் வருகையை யறிந்த மன்னனுகிய தசரதன், புத்திர சோகத்தால் உயிர் நீத்தான். மந்திரிமார்கள், தன் மாமன் வீடு சென்றிருந்த பரதனுக்கு ஓலை போக்கினுர்கள். அவன் உடனே வந்து, நிகழ்ந்தவற்றை யெல்லாம் ஆண்டுள்ளார் கூறக் கேட்டுப் பெருந்துன்ப முற்ருன்; தன் தாய் செய்த கொடுமையை யறிந்து செய்வதறியாது திகைத்தான்; அண்ணனைக் காண வேண்டுமே யென்று தவித்தான். 'நான் பிறந்ததனுலல்லவோ என் முன்னேர் காடு செல்லவும், தந்தை யிவ்வாறு விண்ணுலகடையவும் நேர்ந்தன? ஆதலால், நான் இறந்து படுதலே மேல்,' என்று இறக்கவும் துணிந்து விட்டான். பின்பு மதி வல்ல மந்திரிமார்கள் தேற்றினுர்கள். ஒருவாறு தெளிந்து, தந்தைக்குச் செய்ய வேண்டிய கடமைகளையெல்லாம் செய்து முடித்துவிட்டு, 'இராமனிருக்குமிடம் தேடிச் சென்று

இப்பொழுதே சண்டையழைத்து வந்து முடி சூட்டுவிப்பேன்,' என்று கூறிச் சதுரங்க சேனைகள் சூழ்ந்து வரப் புறப்பட்டு, வனம் நோக்கிச் செல்வா ளுயினன்.

சூரியனுடைய தேரே பூமியில் வந்திறங்கிவிட்டதோ என்று பார்த்தவர்கள் ஐயுறும்படியாக ஒளி விளங்குகிற தேர்களிற் பூட்டப்பட்ட குதிரைகள் செல்லும் ஓசையும், கடல் நீரே பூமியிற் பரந்து செல்வது போன்ற யானைக் கூட்டங்களின் முழக்கமும், விண்ணோர்கள் செவிகளையும் செவிடுபடச் செய்தன. இவற்றில் நின்றும் எழுந்த தூசி, விண்ணுலகையும் மண்ணுலகாக்கிற்று. தாரை, சங்கு, கொம்பு, பம்பை, துடி, தாளம் முதலிய வாத்தியங்களெல்லாம் முழங்காமலே சென்று கொண்டிருந்தன. பரதனும் தம்பியோடும் மரவுரி யணிந்து, தாயர்களும் அறிவிற் சிறந்த மந்திரிமார்களும் பின் பற்றி வரக் கங்கைக் கரையை யணுகினன்.

கங்கைக் கரையில் இராமனைப் பிரிந்து ஒன்றும் தோன்றாது மயக்கங்கொண்டிருந்த குகன், இவ்வோசையைக் கேட்டான்; திரும்பிப் பார்த்தான். படை வந்து கொண்டிருந்தது. இராமனோடு சண்டை செய்து அடியோடு தொலைத்து விடுவதற்காகவே பரதன் வருகிறான் என்று நினைத்துக்கொண்டான். உடனே வேடர்களை நோக்கி, "வேடர்களே, இங்கு வரும் இச்சேனையைப் பார்த்தீர்களா? யுக முடிவில் கடல் பொங்கி வருவதைப் போல வந்துகொண்டிருக்கிறது. இதன் பரப்பு எத்தனை காதம் இருக்குமென்று நினைக்கவும் இயலாது. தீக் குணத்தனாகிய பரதன், தன் தாய் செய்தது போதாதென்று எண்ணி, இராமரைக் கொல்லவும் முன் வந்து

விட்டான் ! தீத்தொழிலில் தாயைக்காட்டிலும் புத்திரன் மேலாகத்தான் இருக்கிறான் ! பதினான்கு வருஷமும் கழித்து இராமர் திரும்பி வந்துவிட்டால், தனக்கு ராஜ்யம் கிடைக்காதென்று நினைத்தே இவ்வாறு செய்யத் துணிந்தான் போலும் ! (அரசன், உபாத்தியாயர், தாய், தந்தை, அண்ணன்) இவ்வைவரையும் கடவுளாகவே நினைக்க வேண்டுமென்று தரும சாஸ்திரங்கள் விதிக்கின்றனவே! இவன் படித்திருந்து என்ன பயன்? மூத்த மகனுக்கே பட்டம் உரியது என்ற உத்தமமான சூரிய குலத்து முறைமையை இவன் தாய் மாற்றி விட்டாள். இவன் அதற்குமேலும் வந்துவிட்டான். கலி காலத்தி லல்லவோ இத்தகைய கொடுமைகளெல்லாம் நடக்கு மென்று சொல்வார்கள்? இப்பொழுதே இவ்வாறு வந்துவிட்டதே !" என்று கூறி, ஊழித் தீயெனக் கண்களில் தீப்பொறி பறக்க வெகுண்டான் ; புருவம் நெற்றியிலேறக் கோபத்தோடு சிரித்தான் ; சேனைகளெல்லாம் ஒரு நொடியில் வரவேண்டு மென்று ஆணையிட்டான். அவைகளும் குறிப்பிட்ட நேரத்திற்குள் வந்து நாநா பக்கமும் சூழ்ந்துகொண்டன.

"படை வீரர்களே, அஞ்சாதீர்கள் ; தைரியத்தைக் கைவிடாதீர்கள். இப்படைகளெல்லாம் எலிகள் ; நாம் அரவம். இவைகள் ஒருநாள் போருக்கும் ஆற்ற. ஒரு நொடிப்பொழுதில் இவைகளை விண்ணுலகேற்றி விடலாம். கங்கைக் கரையை நன்கு காத்திருங்கள். ஓடங்களை யெல்லாம் அப்புறம் செலுத்திக்கொண்டு செல்லுங்கள். ஒவ்வோர் ஓடத்திலும் ஆயிரம் வீரர்கள் ஆயுத பாணிகளாய் நின்றுகொண்டிருங்கள். பகைவர்கள் யாரே

னும் வரின், அவர்களை யுடனே எமனுக்கு விருந்தாக்குங்கள்,'' என்று வீரர்களை நோக்கிக் கூறிப் பின்னரும் கூறுவான் :

"மேக வண்ணரான என் ஆருயிர் நண்பர் முடிசூட்டிக்கொள்ள வேண்டியதைத் தன் தாயின் மூலமாகத் தடுத்து, இவன் வஞ்சனையால் தன் காரியத்தை முடித்துக்கொண்டான். அம்மட்டோ? என் காட்டிலும் அவர்கள் வசிக்கக் கூடாதென்று நினைத்து விட்டான் போலும்! இவன் கங்கையைக் கடந்தல்லவோ அப்பாற் செல்ல வேண்டும்? அவ்வாறு கடக்க வேண்டுமானால், என்னைக் கேட்டு என் ஓடங்களின் மூலமாக வல்லவோ கடந்து செல்ல வேண்டும்? ஆசை அறிவை மறைத்தலால், அதையும் நினைக்கவில்லை போலும்! இவன் இதை விட்டுத் தப்பிப் போய்விடுவானேயானால், நான் இராமரிடத்துக் கொண்ட நண்பு யாதாகும்? தன் உயிரைக் கொடுத்தேனும் தன் நண்பனுக்கு நேர்ந்த ஆபத்தைப் போக்குபவ னல்லவோ உத்தம நண்பன்? தோழன் என்று இராமர் சொல்லிய சொல் ஒரு சொல் அல்லவா? இவன் யானைப் படைகளைப் பார்த்தால் ஏழு கடல்களும் திரண்டு வருவதுபோலத் தோன்றுகின்றன. இத்தகைய படைகளைக் கண்டு நான் விலகிச் சென்று விடுவேனா? ஒருவராலும் வளைக்க முடியாத வில்லை யொடித்த தன் முன்னோர் வலியையும் கவனிக்கவில்லை. பின் தொடர்ந்து செல்லும் இளையான் மிக்க வலியுள்ளான் என்பதையும் கருதவில்லை. நான் ஒருவன் இவ்விடத்தில் இருக்கிறேன் என்பதையும் நினைக்கவில்லை. மன்னவருடைய மார்பில் வேடனாகிய யான்விடும் அம்பு

கள் பரியாவென்று நினைத்தான்போலும்! அரசராவார்க்கு மட்டும் அறம் இவை மறம் இவை என்ற நிபந்தனைகள் இல்லையோ? என்னுருயிர்த்துணைவரோடு அன்று போக வேண்டுமென்று முயன்றேன். அவர் கூறிய இன்மொழி களால் சண்டே யிருக்க நேர்ந்தது. 'எல்லாம் ஒரு நன் மைக்குத்தான்,' என்று ஆன்றோர் கூறுவதுபோல, அது வும் நன்மையாகவே முடிந்தது. என் துணைவர் தமக்கு நியாயமாய்க் கிடைத்த நாட்டையும் வேண்டாவென்று கொடுத்துவிட்டு வந்தார். அத்தகைய நற்குணம் அமைந்த அவருக்கு இவன் நான் ஆண்டுகொண்டிருக் கும் காட்டையும் கொடுக்க மனமிசையானுய்ப் படை யெடுத்து வந்துவிட்டான். இவனுடைய தேர், யானை, குதிரை, காலாள் முதலிய படை வலிமைக ளெல்லாம் இக்கங்கைக் கரையைக் கடந்தபின்ன ரல்லவோ காட்ட வேண்டும்? இங்கு வந்திருக்கும் சேனைத் திரள்கள் என்படைக்கு ஒருநாளைக்குக் கூடப் போதா. இனி இவ னுக்காகத் தேவர்களே திரண்டு வரினும், என் சிலை சர மாரி பெய்ய அவர்களை யெல்லாம் தொலைத்து பிணங் களைச் சூறையிடுவேன். பேய்களும் கழுகுகளும் தின்றது போக மீதியுள்ளதைக் கங்கையில் தள்ளி அது கடலிற் கொண்டு போய்ச் சேர்ப்பதால் கடல் தூர்ந்தது என்று கூறுமாறு செய்வேன். வேடர்களே, விரைந்து வாருங் கள். இன்றே நாம் இப்பிறவியின் பயனை யடையப் போகிறோம். நண்பருக்காக நமது உயிரையும் கொடுக்கத் தயாராய் இருக்க வேண்டும். ஒன்றுக்கும் அஞ்சா தீர்கள். இப்படைகளை யெல்லாம் பசுக் கூட்டத்தின் முன்னர்ப் பட்ட பசுமையான பயிரைப் போல, ஒரு

கணப் பொழுதில் அழித்து விடுவோம்,'' என்று கூறிப் பரதனது சேனையை நோக்கிய வண்ணமாகவே நின்று கொண்டிருந்தான்.

முன்னவனை யழைத்து வந்து மகுடஞ் சூட்ட வேண்டு மென்ற நல்ல எண்ணத்துடன் நால்வகைச் சேனைகளோடும் கங்கையைச் சமீபித்தான் பரதன்; குகன் நின்றுகொண்டிருப்பதையும் தூரத்தி லிருந்த வாறே நோக்கினான். உடனே சுமந்திரர் பரதனை நோக்கி, "பரதா, அதோ கங்கைக் கரையில் நிற்கும் அவனைப் பார்த்தாயா? அவன் இரு கங்கைக் கரைகளை யும் தனக்குச் சொந்தமாக வுடையவன்; ஆயிரக் கணக் கான ஓடங்களை யுடையவன்; ஆயிரம் யானை வலி யமையப் பெற்றவன்; வில்லைக் கையிலே கொண்ட சேனைக் கடலை யுடையவன்; மற்போரின் எல்லையைக் கண்ட தோள்களை யுடையவன்; மேகம் போலும் நிற முடையவன்; உங்கள் குலத் தனி நாதனான இராம னுக்கு உயிர்த் துணைவன்; அன்பர்களுக்காகத் தன்னுயி ரையும் கொடுத்துதவும் வள்ளல்; குகன் என்னும் பெய ரினன்; நின்னைக் காண வேண்டு மென்ற உள்ளத்தனாய் வழியில் நின்றுகொண்டிருக்கிறான்,'' என்று கூறினர்.

அதைக் கேட்ட பரதன், 'என் முன்னோரால் இனிய நண்பனென்று கொள்ளப்பட்டவன், எனக்கும் முன்னோன். ஆதலால், நானே விரைவிற் சென்று அவனைக் காண வேண்டும்,' என்று கூறித் தன் தம்பி யோடும், இரு குன்றுகள் நடந்து செல்வதுபோலச் சென்று, அவனைச் சமீபித்தான்.

ஓடங்களோடும் கரையை விட்டுச் சிறிது விலகி யிருந்த குகன், மரவுரி யுடுத்து, மாசடைந்த மெய்யோ டும், கலையில்லாத சந்திரனைப்போல் ஒளியிழந்த முகத் தோடும், கல்லும் கனியக் கனிகின்ற துயரோடும், பரத னும் இளவலும் நிற்றலை நோக்கித் திடுக்கிட்டான். வில் லும் அவன் கையினின்றும் நழுவிக் கீழே விழுந்தது. அவன் இத்தகைய நிலையோடு ஒருவாறு தெளிந்து, ஒரு படகைச் செலுத்திக்கொண்டு, கரைக்கு வந்தான்; பரதன் நிலையை முற்றும் கண்டான். 'இவன் என் துணைவரான இராமரைப் போலவே காணப்படுகிறான். அயல் நிற்போ னும் இவனுக் கிளையோன் போலவே காணப்படுகிறான். இவர்கள் கொண்டிருக்கும் துன்பமோ, கரையிலதாய்க் காணப்படுகிறது. என் துணைவர் சென்ற திசையை நோக்கித் தொழுதுகொண்டு மிருக்கிறான். எம்பெருமா னுக்குப் பின் பிறந்தார் எந்நாளும் தீ நெறியில் நடக்க முன் வரமாட்டார்கள். நானே என் இழி குணத்தால் தவறுதலாய் நினைத்துவிட்டேன். ஆஹா! என்ன பிழை செய்தேன்! இத்தகைய உத்தமனைப்பற்றி நான் வேறு விதமாக வல்லவா நினைத்து விட்டேன்! வீண் பாவத்தைத் தேடிக் கொண்டேனே! 'ஆத்திரக்காரனுக் குப் புத்தி மட்டு,' என்னும் பழமொழி என்னிடத்தில் மெய்யாயிற்று,'' என்றெண்ணி வருந்திச் சென்று, அவ னடியில் அடியற்ற மரம்போல வீழ்ந்து வணங்கினான்.

பரதனும் தன்னடியில் வீழ்ந்து வணங்குபவனைப் பேரன்போடு தழுவிக்கொண்டான். பின்பு குகன் அவனை நோக்கி, 'அன்ப, நீ இக்கோலத்தோடு ஈண்டெய்த நேர்ந்த காரணம் யாது?' என்றான்.

பரதன் குகனை நோக்கி, 'அன்ப, இவ்வுலகம முழு வதையும் அறுபதினாயிரம் வருஷம் யாதொரு குறைவு மின்றி அரசாண்ட என் தந்தையார் மூத்தவர்க்கே அரசு உரியதென்னும் முறையைக் கடந்தனர். அக் குற்றம் நீங்குமாறு யான் மன்னரான இராமரை யழைத்துச் செல்லவே வந்தேன்,' என்றான்.

அது கேட்ட வேடர் தலைவன், அகமிக மகிழ்ந்து, உடல் பூரித்து, மீட்டு மண்ணிடை விழுந்து வணங்கி, "என்னுயிரினும் இனிய நண்ப, நின் தாய் சொல்லைக் கேட்டு நின் தந்தையார் உனக்கு இவ்விராஜ்யத்தைக் கொடுத்தார். சான்றோர் தீ வினையை நீக்குதல் போல, நீ அதை வேண்டாவென்று வெறுத்து, துன்பக் குறி யோடு மரவுரி தரித்துக் காட்டுக்கு வந்திருக்கிறாய்; இத் தன்மை யெல்லாம் நோக்குமிடத்து, இராமர் ஒருவ ரென்று நான் நினைத்திருந்தது தவறென்று நினைக்கிறேன். அவர் கேளிரெல்லாரும் இராமராகவே விளங்குகின்ற னர். ஏழையாகிய நான் இன்னம் என்ன சொல்லப் போகிறேன்! உன் முன்னோர்களுடைய புகழை யெல் லாம் நீ உன் புகழாகக் கொண்டாய்," என்றான்.

அமைதியோடு தன் முன்னவனிடத்திலே முழு மனத்தையும் செலுத்தி நின்ற பரதன், தென் திசையை நோக்கித் தொழுத கையனாய், 'அன்ப, என் முன்னோர் எவ்விடத் துறைந்தார்?' எனக் குகன், 'அவ்விடத்தை யடைய இவ்வழியிலேதான் செல்ல வேண்டும். நானே காட்டுகிறேன்,' என்று கூறிக்கொண்டே விரைந்து செல் லப் பரதனும் பின் தொடர்ந்தான்.

சிறிது தூரஞ் சென்று,குகன், 'பரத, இராமர் இரவு தங்கியிருந்த இடம் இதுதான். பருக்கைக் கற்கள் நிறைந்து முள்ளைப்போன்ற புற்கள் மலிந்து கிடப்பதைப் பார்த்தனையா? நான் இலக்குவனை நோக்கி, 'வீர, இராமரை இரவு முழுதும் பாதுகாக்க நான் இருக்கிறேன். நீயும் உறங்குவாயாக. அச்ச மென்பதே வேண்டா. என்னைச் சேர்ந்தவர்களான வேட்டுவர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் ஈண்டுக் காத்திருக்கின்றார்கள். இவ்வுலகில் இராமரைத் தவிர வேறு நண்பர் எனக்கு இல்லை. நான் உண்மையைச் சொல்லுகிறேன். இருமையும் தரும் இராமர் இணையடிகளையே துணையெனப் பற்றியிருக்கிறேன். அதனாலேயே நான் எல்லா நன்மைகளையும் அடைவேன். எனக்குப் பயமே இல்லை. நான் எப்பொழுதும் காட்டிலேயே சஞ்சரித்துக்கொண்டிருப்பவன் என்பது உனக்குத் தெரியாதா? எத்தகைய கொடிய விலங்குகள் ஊறு செய்ய வரினும், அவற்றைத் தொலைப்பேன்.நால்வகைப் படையொடு பகைவர்வரினும், அவர்களை சமனுலகுக் கனுப்பி விடுவேன். நீயோ, கதிரொளி பரவாது மேக மண்டலம் வரை அளாவிய சோலைகள் சூழ்ந்ததும், மலையென விளங்கும் மாடங்கள் மிக்கதுமான அயோத்தி நகரின்கண் அரச மாளிகையில் பலவகைக் கீதங்களைக் கேட்டுக்கொண்டு இனிது உறங்கினவன். இரவு முழுதும் விழித்திருக்க உன்னாலியலாது. நீ கண்ணுறங்குவாயாக,' என்று பன்முறையும் வேண்டிக் கொண்டேன். அவன் ஒன்றையும் கேளாது வருந்தி நின்று 'அன்ப, இத்தகைய இன்னலுக்குள்ளாய் இராமர் வருந்துவதைக் கண்டவுடன், என் பிராண னிருப்பதே

எனக்குப் பெருஞ்சுமையாக இருக்கிறது. விசாரமில்லாதவனுக்கல்லவோ உறக்கம் வரும்?' என்று மறுமொழி கூறிவிட்டு, இரவு முழுதுங் கண்ணிமைத்தலும் செய்யாது, வில்லை யூன்றிய கையோடும் நின்று, பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தான்,'' என்று கூறினன்.

உடனே பரதன், மனம் பதைத்து, தன்னை நெருப்பிலே தோய்த்தாலொத்த துன்பத்தினனாய் வருந்தி, "அன்ப, இக் கங்கையாற்றைக் கடந்து அக்கரை யடையுமாறு செய்தனையேல், துன்பக் கடலினின்று என்னைக் கரையேற்றியதாகவே நினைப்பேன். விரைந்து ஓடங்களைக் கொண்டு வருக. காலம் தாழ்த்தலாகாது,'' என்று வேண்டிக்கொள்ளக் குகன் தன் ஓடங்களை யெல்லாம் வரவழைத்துச் சேனைக்கடலை அவற்றிலேற்றி, அக்கரை சேர்ப்பித்தான்; கடைசியாகப் பரதன், சத்துருக்கினன், கோசலை, சுமித்திரை, கைகேயி முதலியவர்களையும் ஓர் ஓடத்திலிருக்கச் செய்து, தானே அதனைச் செலுத்திக் கொண்டு சென்றான்; சென்றுகொண்டிருக்கும்பொழுது கோசலை முதலிய மூவரையும் வணங்கி, அவர்கள் யாரென்று தெரிந்துகொள்ளும் விருப்புடையவனாய் நின்றான்.

அதை யறிந்த பரதன், குகனுக்குக் கோசலையைக் காட்டி, "இவரே சக்கரவர்த்தியாரின் முதல் மனைவியார்; என் முன்னோரைப் பெற்றதால், தாமடைந்த பெருஞ்செல்வத்தை நான் பிறந்ததால் இப்பொழுது இழந்து நிற்கும் பெரியார்,'' என்றான். சுமித்திரையைக் காட்டி, "இவரே மண்ணுலகில் தம் புகழ் நிற்கச் செய்து விண்ணுலக மடைந்த மன்னரின் இளந்தேவியார். முன்

ஞானை விட்டுப் பிரியாமல் பின் தொடர்ந்துவரும் உத் தமரான இளையோரைப் பயந்த பெரியார்,'' என்றான். பின் கைகேயியைக் காட்டி, “ இவரை நீயே தெரிந்து கொண்டிருக்கலாம். தெரிந்துகொள்ளாவிட்டால், கூறு கிறேன்; கேள்: தம் கணவர் வானேகவும், கருணைக்கட லான இராமர் நாடு துறந்து காடு செல்லவும் செய்தவ ரும், என்னைப் பயந்தவருமாகிய கொடியார்,'' என்று கூறி முடித்தான். மூவரைப் பற்றியும் கூறக் கேட்ட குகன், 'இவரை இத்தகைய கோலத்தோடு பார்க்க நேர்ந்ததே!' என்று வருந்தி யிருந்தான்.

பின்பு அவன் மனந்தெளிந்து, பரதன் முதலியவர் களுக்கெல்லாம் வேண்டிய உதவிகளைச் செய்து, அவர் களைச் சித்திர கூடம் அனுப்பினான். "உயிர் நண்பரா கிய இராமபிரான் நம்மையீண்டே இருக்கச் செய்துவிட் டாரே! 'ஈண்டுள்ள கிளைக்கெல்லாம் நீயே காவல்,' என்றும் கூறிவிட்டுப் போய்விட்டார். இல்லாவிடில், இருக்குமிடத்தைத் தேடிக்கொண்டு நாமாவது சென்று காணலாம். நண்பர் சொன்ன வார்த்தையின்படி நடக்க வேண்டும்,'' என்று பல்வாறு தனக்குள்ளேயே சொல் லித் துன்புற்று, நாட்களை எண்ணிக் கழித்துக்கொண் டிருந்தான்.

பரதன் முதலியவர்கள் கங்கையைக் கடந்து சித்திர கூட பர்வத மடைந்தார்கள். படைகள் வருவதைக் கண்ட இலக்குவன், பரதன் போர் செய்து துரத்தவே வருகிறானென்று நினைத்துப் போருக் கெழுந்தான். கருணைக் கடலாகிய இராமபிரான் அவனைத் தடுத்து, "இளையோய், நீ நினைப்பது தவறு. அவன் நம்மைப்

பார்க்கவே வருகின்றான். அரண்மனையில் ஏதாவது விசேஷம் நடந்திருக்கும். அதைத் தெரியப்படுத்த வந்தாலும் வருவான். அவசரப்பட்டு ஒன்றையும் விரைந்து செய்ய நினைத்தல் கூடாது,'' என்று சமாதானப் படுத்தினார். இதற்குள் பரதனும் சமீபத்தில் நெருங்கினான்; இராமபிரான் கால்களில் விழுந்து வணங்கினான். இராமபிரானும் அவனைத் தழுவி, "பரத, நம் தந்தையார் சவுக்கியமாக இருக்கின்றாரா?'' என்றான். பரதன், "அண்ணா, உம் பிரிவென்னும் பெரு நோயினாலும், என்னை யீன்ற கொடியவளாகிய அன்னையின் வரமென்னும் எமனாலும் இம்மண்ணுலகை நீத்து விண்ணுலகடைந்தார்!'' என்று கூற, இராமபிரான் ஒன்றும் தோன்றாமல், புண்ணிடை வேல் நுழைந்தது போன்ற வருத்தமுடையவனாய், கண் சுழல மனஞ் சுழல அடியற்ற மரம் போல மண்ணிடை வீழ்ந்தான். பக்கத்தில் நின்றுகொண்டிருந்த பரதனும், மந்திரிமார்களும், வசிட்டரும், உணர்வு வரச் செய்து தேற்றினார்கள். தெளிந்த இராம பிரான், ஆண்டே யிருந்து தந்தைக்குச் செய்ய வேண்டிய நீர்க் கடனை யெல்லாம் செய்து முடித்தான்.

மறை விதிப்படி செய்ய வேண்டிய காரியங்களெல்லாம் நிறைவேறியபின், பரதன் சென்று, ஜானகி தங்கியிருக்கும் இடத்தையும், இராமபிரான் அமர்ந்திருக்கும் இருக்கையையும் நோக்கி, அடங்காத் துன்பத்தையுடையவனாய்க் கண்களிலும் முகத்திலும் அறைந்து கொண்டழுது, இராம பிரான் கால்களில் விழுந்து பணிந்து, "அண்ணலே, நீர் இப்பொழுதே திரும்பி

வந்து, "ஆரியணை வீற்றிருந்து, அரசு புரிய வேண்டும்," என்றனன்.

இராம பிரான், "பரத, தந்தையார் ஒரு வரங் கொடுத்திருக்க, நான் அதற்கு மாறுபாடாக நடத்தல் கூடாது; அவருடைய வார்த்தையை வேதமெனக் கொண்டு நடத்தல் வேண்டும். நன்கு கற்ற உனக்குச் சொல்ல வேண்டுமா? ஆண்டுள்ளாரெல்லாம் அரசனில் லாது வருந்துவர். நீ விரைந்து சென்று, முடி சூட்டிக் கொண்டு, குடிகளை அன்போடு பாதுகாத்துக்கொண்டிரு. நான் பதினன்கு வருடமும் கழிந்த பின்னர்ச் சிறிதும் தாமதிக்காமல் வந்து விடுகின்றேன்," என்ன, பரதன், 'பாதுகையையாவது தர வேண்டும்,' என்று கேட்டுப் பெற்றுக்கொண்டு, நகருக்குள் செல்லாது அயலிலுள்ள நந்திக் கிராமத்தில் அவற்றை வைத்துப் பூஜை செய்து கொண்டு, அரசாண்டுகொண்டிருந்தான்.

'இனி ஈண்டிருந்தால் நம்மைப் பார்க்க வேண்டு மென ஜனங்கள் அடிக்கடி வந்துகொண்டிருப்பார்கள்,' என்றெண்ணிய இராம பிரான், புறப்பட்டுச் சென்று, அகத்தியர் முதலிய முனிசிரேஷ்டர்களைக்கண்டு வணங்கி, அவர்களால் உபசரிக்கப்பெற்று, தண்டகாரணியத்தில் தங்கியிருந்தான். சில நாட் கழித்து, அவ்வழியே வந்த சூர்ப்பநகை இராமனழகில் ஈடுபட்டு, தன்னை மணஞ் செய்துகொள்ள வேண்டு மென்று வற்புறுத்த, இளை யோன் அவளுடைய மூக்கை யரிந்து அனுப்பினன். அவள் சென்று கர தூஷணர்களிடம் சொல்ல, அவர்கள் இராம இலக்குமணர்களோடு போருக்கு வந்து மடிந்தார் கள். பின்பு சூர்ப்பநகை சீதையின் அழகைப்பற்றி இரா

வணனிடம் கூறினள். அதுகேட்ட இராவணன் மயங்கி, மாரீசனை மாய மானாக்கி, அவள் முன் ஏகச் செய்தனன். பொன்னிறத் தொருமான் புவியில் இருக்குமா என்று கருதாத சீதை, அது வேண்டு மென்று விரும்ப, இராமபிரான் அதைப் பிடிக்கச் சென்றான். இலக்குவனும் பின் செல்ல வேண்டியதாயிற்று. மறைந்து மாறு வேடங் கொண்டிருந்த இராவணன் சீதையையெடுத்துக்கொண்டு இலங்கை சென்றான். மாய மானைக் கொன்று திரும்பிய இருவரும் பர்ன சாலையில் வந்து நோக்கச் சீதையைக் காணவில்லை. அதையறிந்து அழுதார்கள்; விழுந்தார்கள்; புலம்பினார்கள்; ஒருவாறு தெளிந்து நாநா பக்கங்களிலும் தேடிக்கொண்டு சென்றார்கள்; மதங்க முனிவர் ஆச்சிரமத்தை யடைந்து, சுக்கிரீவனோடு நட்புக் கொண்டார்கள்; அவன் குறையைத் தீர்க்கத் தீக்குண வாலியை வதைத்தார்கள்; சீதை யிருக்குமிடத்தை அநுமான் மூலமாகத் தெரிந்துகொண்டார்கள்; வானரப் படைகளை யெல்லாம் திரட்டினார்கள் ; இலங்கையை யடைந்து, சரணடைந்த விபீஷணனைக் காப்பாற்றி இராவணனைப் போரில் தொலைத்து விபீஷணனுக்குப் பட்டம் கட்டிச் சீதையை மீட்டுக்கொண்டார்கள்.

யோசித்தான் இராம பிரான். அழைத்தான் இளையோனை. "இளையோய், சிருங்கிபேர நகரத்தில் நம்முயிர் நண்பனான குகன் நாட்களை யெண்ணிக்கொண்டு நம் வருகைக்காக எதிர் பார்த்துக்கொண்டிருப்பான். ஒரு கணமேனும் இனித் தாமதிக்கக் கூடாது. நம்முடைய வேண்டுகோளுக்காகவே அவன் நம்மோடு வராது ஆண்டிருந்தான். இல்லாவிட்டால், அவனும் நம்மோடு வந்

திருப்பான். நீ உடனே சென்று, நாம் வந்த வரலாற்றைச் சொல்லி, அவனை அயோத்திக்கு வரச் செய்க," என்றனன்.

உடனே இளையோன் இராமனை வணங்கி, விடை பெற்றுக்கொண்டு, மனோ வேகமும் பின்னிடும்படி சென்று, குகனிருக்கு மிடத்தை யடைந்து, இராவணன் சீதையை யபகரித்துச் சென்றது முதல் மீட்ட வரையும் உள்ள செய்திகளுள் ஒன்றையும் விடாது கூறினன். அதைக் கேட்ட குகன், துன்பக்கடலில் ஆழ்ந்து, சீதையோடு திரும்பி வர நேர்ந்தமைக்கு மகிழ்ந்திருந்தான்.

குறிப்பிட்ட காலம் கடந்த பின் இராமபிரான் சீதையோடும் இளையோனோடும் அயோத்திக்குத் திரும்பி வரும்பொழுது முன் குகனிடம் சொல்லிச் சென்றபடி சிருங்கி பேரத்துக்கு வந்து, அவனையும் அழைத்துக் கொண்டு, அயோத்தியை யடைந்தான்.

குகனும், பட்டாபிஷேகம் தனக்கு நடந்தால் எவ்வளவு சந்தோஷமிருக்குமோ, அவ்வளவு சந்தோஷத்தை யுடையவனாய்த் தோள்கள் பூரிக்கப் பெற்றான்; பல கறை ஆபரணங்களை யெல்லாம் அணிந்தான்; புலித் தோலை யுடுத்தான்; படைகளை யெல்லாம் சேர்த்துக் கொண்டான்; அரசனுக்குரிய காணிக்கைகளையும் எடுத்துக்கொண்டான்; அயோத்தியில் சிம்மாசனத்திலிருந்த வசிஷ்டர் மகுடம் புனைதலையும் கண்ணாரக் கண்டு களித்தான்; 'இன்றே நான் கண் படைத்த பயன் பெற்றேன்!' என்று கூறி மகிழ்ந்தான்.

விதிப்படி மகுடாபிஷேகம் நடந்தேறிய பின்னர் இராமபிரான் குகனை யழைத்து, இருக்கச் செய்து, உப

சாரமொழிகள் கூறி அனுப்பினன். குகனும், உத்தரவு பெற்றுத் தன்னுடைந்து, தன்னைச் சேர்ந்த வேடர்களை யெல்லாம் அன்போடு பாதுகாத்துக்கொண்டிருந்தான். அவன் வேட்டையாடித் திரியும் வேடனயிருந்தும், உயர் குணத்தனயிருந்து, உத்தமனேடு உறவு கொண்டதால், உயர் பதவி யடைந்தான்.

# சுக்கிரீவன்

உமையவள் சாபத்தால் பெண்ணுருவடைந்த ருக்ஷ ரஜஸ் என்ற வானர ராஜன் ஒரு நாள் ஒரு சோலையில் மனமகிழ்ச்சியோடு குயில் கூவுவதையும், மயில் ஆடுவதையும்,கண்கவரும் அழகுடைய பலநிறப் பறவைகள் கனிமரங்களின்மீது கூடிக் குலாவுவதையும், பளிங்குக் கற்களா லமைத்த படிக்கட்டுக ளமைந்த தடாகத்தில் மலர்ந்து விளங்கும் தாமரைப் பூக்களின்மீது அன்னப் பறவைகள் அமர்ந்து விளங்குவதையும் கண்டு விளையாடிக்கொண்டிருந்தான்.

இவ்வாறு விளையாடும்பொழுது அவனழகைக் கண்டு இரவி காதல் கொள்ள, உயர்ந்த குணத்தோடு கூடியவனான சுக்கிரீவன் என்னும் ஒரு குரக்கரசன் * தோன்றினான். இதற்கு முன்னரே இந்திரன் காதல் கொண்டதால், பெருவலி படைத்த வாலி யென்பவன் பிறந்திருந்தான். இருவரும் உடன் பிறந்தோ ராதலின், ஒற்றுமையோடும் உள்ளன்போடும் கூடி வாழ்ந்து கொண்டிருந்தனர்; உரிய பருவத்தில் நன்கு கற்றுத் தேர்ந்தனர்.

இருவரும் அரசாட்சி யடைந்து வாழத் தக்கவர்களாய்க் காணப்பட்டமையின், வானரர்கள் சந்தோஷத்தோடு முன் பிறந்த வாலியை அரசனாகவும், பின் பிறந்த

---

* குரங்கு + அரசன் = குரக்கரசன்

உத்தமனை சுக்கிரீவனை இளவரசனாகவும் இருக்க வேண்டினார்கள். அவர்களும் அதற்கு இணங்கவே, மிகுந்த ஆடம்பரத்தோடு முடி சூட்டுக் கொண்டாட்டம் நிறைவேறியது. இத்தகைய அரசர்கள் தங்களுக்குப் பூர்வ புண்ணிய விசேஷத்தாலேயே கிடைத்தனர் என வானரர்களெல்லாம் சந்தோஷக் கடலில் ஆழ்ந்து, கவலையில்லாதவர்களாக வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அரசனிடத்து அன்போடு வாழும் குடிகளும், குடிகளிடத்து அன்போடு அவர்களுக்கு நேரும் துன்பங்களைப் போக்கிக் காக்கும் அரசனும் உள்ள நாட்டில் கவலையென்பது எவ்வாறிருக்கும்? இராது. இது நிற்க.

சுக்கிரீவன் மிக்க உத்தமன்; கலைகளெல்லாம் கற்றவன்; அடைந்தோரை ஆதரிப்பவன்; நற்குண நற்செயல்களுக்கு உறைவிடமானவன்; அரசனுக்கு வேண்டிய அருங்குணங்களெல்லாம் அமையப் பெற்றவன்; அருளே உருக்கொண்டு வந்ததென்று சொல்லுமாறு விளங்குபவன்; தன் முன் . பிறந்தவனான வாலியைத் தந்தையாகவே எண்ணி, அவன் சொல்லைத் தலைமேற் கொண்டு நடந்துகொண்டிருந்தான்.

இங்ஙன மிருக்கும் நாளில், எருமை வடிவம் கொண்ட துந்துபி என்ற ஓர் அரச னிருந்தான். அவன் மந்தர மலைபோல உயர்ந்து விளங்கும் தோள்களையுடையவன்; வானத்தை யளாவிய கொம்புகள் பொருந்தியவன்; காண்பவர்க்கு அச்சம் தோன்றுமாறு விழிக்கும் விழிக ளமைந்தவன். அவன் ஒரு நாள் சமுத்திர ராஜனை அணுகி, "அண்ணலே, நெடு நாளாக எனக்குப் போர் ஒன்றும் கிடைக்கவில்லை.

மலை போன்று உயர்ந்த என் தோள்கள் தினவு மிக்கனவாய் இருக்கின்றன. உன்னோடு போர் செய்யலாமென்று ஈண்டு வந்திருக்கிறேன். நீ என்ன சொல்லுகிறாய்? விரைவாய்ச் சொல்," என்றனர். அது கேட்ட சமுத்திர ராஜன், "அண்ணலே, நீ பெருவலி படைத்தவன். உன்னோடு சண்டை செய்யும் ஆற்றல் எனக்கு இல்லை. முப்புரங்களையும் புன் சிரிப்பால் எரித்தவரான சிவபெருமானைத் தாங்கிக்கொண்டிருக்கிற மலையரசனிடம் செல்வாயானால், தகுந்த போர் கிடைக்கும்," என்று கூறினன். மதமயக்கத்தாலும், தினவின் மிகுதியாலும், கண் தலை தெரியாது மயங்கி நிற்கும் அவ்வசுரன், சமுத்திர ராஜன் வார்த்தையைக்கேட்டு,'இவன் நம்மிடத்தில் பயங் கொண்டு இவ்வாறு சொல்லுகிறான்,' என்று எண்ணினான்; அவனை அலக்ஷியம் செய்து, வில்லிலிருந்து விடுபட்டுச் செல்லும் அம்பைப்போல விரைந்து சென்றான்; இமய மலையை யடைந்தான்; ஆண்டுள்ள பாறைகளை யெல்லாம் கொம்புகளாற் குத்தித் தள்ளினான்; மதம் கொண்ட யானையைப்போலக் கர்ஜனை செய்தான். அப்பொழுது பருவத ராஜன் வெளியில் வந்து, "ஏ! துந்துபி, நீ சகல தருமங்களையும் அறிந்தவனல்லவா? என்னை இவ்வாறு வருத்தப்படுத்தலாமா? நானோ, யுத்தப் பயிற்சி யில்லாதவன்; ஐம்பொறிகளையும் அடக்கிக் காய்கனி கிழங்குகளைத் தின்று, யோகு செய்கின்ற தவசிகளுடன் இருந்து காலத்தைக் கழிப்பவன். நீ என்னோடு போர்புரிய வேண்டுமென்ற எண்ணத்தைத் தவிர்க்க," என்று கேட்டுக்கொண்டான்.

பருவத ராஜனுடைய வார்த்தைகளைக் கேட்ட துந்துபியின் கண்கள் சிவந்தன. "ஏ! மலையரசனே, உன்னைப்போல் ஒரு வீரனை நான் எங்கும் கண்டதில்லை. உன்னை யொரு வீரனாக எண்ணி யுத்தத்திற்கு வந்த என் புத்தியைத்தான் நிந்தித்துக்கொள்ள வேண்டும்," என்று கூறிவிட்டு, "போகட்டும். உனக்கு யுத்தத்தில் பழக்கமில்லையென்று ஒத்துக்கொள்கிறேன்; அல்லது என்னைக் கண்டு பயந்து யுத்தம் செய்ய இஷ்டமில்லை யென்றாவது ஒத்துக்கொள்கிறேன். எனக்கு நிகராக என்னோடு யுத்தம் செய்யத்தகுந்தவன் இருக்குமிடத்தை யாவது கூறுவாயாக," என்று கர்ஜித்தான்.

அன்று வரையிலும் அப்பேர்ப்பட்ட வார்த்தைகளைக் கேட்டறியாத மலையரசன், தனக்கு வந்த கோபத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு, "அசுர உத்தமனே, கிஷ்கிந்தையில் வாலி யென்றொரு வானர ராஜன் இருக்கிறான். அவன் மிகுந்த வலி யமைந்தவன்; யுத்தத்திலும் நன்கு தேர்ச்சி பெற்றவன். உனக்கு யுத்தம் செய்ய விருப்பமிருந்தால், அவனோடு யுத்தம் செய்யப் போ. இன்றுவரை அவனோடு யுத்தம் செய்து வென்றவர்கள் யாருமே இல்லை. உன் தினவு நீங்கும் வரை நீ அவனுடன் யுத்தம் செய்யலாம்," என்று கூறினான்.

இவ்வார்த்தையைக் கேட்டவுடன் துந்துபி சந்தோஷம் கொண்டவனாய்க் கிஷ்கிந்தையை யடைந்தான்; கோட்டையின் வாயிலில் நின்றுகொண்டு, உலகங்களெல்லாம் நடுங்குமாறு ஆரவாரித்தான்; நாற்புறங்களிலும் ஓடிச் சுற்றினான்; கண்ணெதிரிற் பட்ட மரங்களை யெல்லாம் ஒடித்தெறிந்தான்; பூமியைக் குளம்புகளால்

தோண்டினன்; கதவுகளை யெல்லாம் முட்டித் தள்ளினன்; ஆண்டுள்ளார் காதுகள் செவிடு படும்படி சிரித்தான். இவ்வோசையைக் கேட்டு, எட்டுத் திக்கிலுமுள்ள யானைகளும் நிலை கலங்கின; கடலும் தன்னிலை தவறிப் பொங்கத் தொடங்கியது.

சிம்மாசனத்திலிருந்த வாலி இப்பெருமுழக்கத்தைக் கேட்டான்; தன்னிருக்கைவிட் டெழுந்தான்; கோட்டை வாயிலை யடைந்து நோக்கினன்; துந்துபி நிற்கக் கண்டான்; கண்களில் தீப்பொறி பறக்க வெகுண்டான்; அவனோடு போர் செய்யத் தொடங்கினன். இடைவிடாது சில நாள் போர் நடந்தது. கண்டவரெல்லாம், 'என்ன நிகழுமோ!' என்று பயந்தார்கள். இங்ஙனம் உலகிலுள்ளார் கவலையடையுமாறு போர் செய்து, வாலியே துந்துபியை வென்று ஜயம் பெற்றான். துந்துபி தோற்று மடிந்தான்.

(உடனே வாலி அகமகிழ்ந்து, இறந்த துந்துபியின் உடலைத் தன் காலால் எற்றினன். அவ்வுடலம் ரிசிய முகப் பருவதத்தில் ஐம்பொறிகளையும் அடக்கித் தவம் செய்துகொண்டிருந்த மதங்க முனிவர் ஆச்சிரமத்தில் விழுந்தது. அருந்தவ முனிவர், இடி விழுவது போலத் தம் ஆச்சிரமத்தின் அருகில் ஓசை கேட்டதால், கண் விழித்து நோக்கினர்; இறந்த துந்துபியின் உடலம் விழுந்து கிடப்பதைக் கண்டார்; அடங்காக் கோபம் கொண்டார்; நாற்புறமும் சுற்றி நோக்கினர். ஒருவரையும் காணவில்லை. 'இந்தத் தீச்செயலைச் செய்தவர்கள் யாராக இருக்கலாம்?' என்று அகக்கண்ணால் ஆய்ந்து அறிந்தார்; வாலியே செய்தனன்

என்று தெரிந்தார். 'இனி இந்தத் தீச்செய்கையைச் செய்தோன் இம்மலையை யணுகுவானாயின், கல்லாகக் கடவன்,' என்று சாபமிட்டுத் தவம் செய்ய அமர்ந்தார்.

வாலி, முனிவர் இட்ட சாபம் அறிந்து, மனம் வருந்தினன்; தன்னகரம் அடைந்து, தன்னறியாமை யால் நேர்ந்த சாபத்துக்கு மனம் வருந்தி யிருந்தான். இளையோனை சுக்கிரீவன், வாலி கட்டளையின்படியே அரச காரியங்களைக் கவனித்து நடத்தி வந்தான். வானரர் கள் எல்லாரும் அமைதியுற்றிருந்தார்கள்.

இங்ஙனம் நடந்து வரும் காலத்தில், ஒரு நாள் துந்துபியின் சகோதரனை மாயாவி யென்பவன், தன் னுடன் பிறந்தவனைக் கொன்று விட்டானே யென்ற கோபத்தாலும், வருத்தத்தாலும், 'இவ்வாலியை நாமும் கொன்று பழிக்குப் பழி வாங்க வேண்டும்,' என்று நினைத்தான்; வாலி யிருக்கு மிடத்திற்கு வந்தான்; கோட்டையின் புறத்தே நின்று போர் புரிய வருமாறு வாலியை அழைத்தான். இக்குரலைக் கேட்டவுடன் வாலி, 'இவனையும் தொலைத்துவிட வேண்டும்,' என்று எண்ணிப் போர்க் கோலம் பூண்டு வந்தான். பார்த்த சுக்கிரீவன், "அண்ணா, இவன் அற்பனிலும் அற்பன். தங்கள் வலியையும் வரத்தையும் நோக்கும் பொழுது இவன் எம்மாத்திரம்? இவனோடு தாங்கள் போருக்குச் செல்ல வேண்டா. ஏதோ கள்ளுண்ட மயக்கத்தால் வந்து கத்துகிறான். சிறிது நேரம் சென்றால், மயக்கம் தீர்ந்துவிடும். தானே திரும்பிச் சென்று விடுவான். ஆதலால், தாங்கள் அவசரப்பட்டுச் செல்ல வேண்டுவ தில்லை," என்று பலவாறு கூறித் தடுத்தான். அவன்

மனைவியான தாரை முதலியவர்களும் அவ்வாறே கூறித் தடுத்தார்கள்.

அது கேட்ட வாலி, சுக்கிரீவனை நோக்கி, "தம்பி, நீ கூறுவது சரியன்று. இவன் போருக்கு வர வேண்டுமென்று அறை கூவுகிறான்; ஆகையால், தகுந்த பலமில்லாமல் வந்திருக்க மாட்டான். இவனை இப்பொழுது சும்மா விட்டு விடுவோமானால், அடிக்கடி வந்து தொந்தரவு செய்வான். பகைவரென்று தெரிந்தால், தொடக்கத்திலேயே தொலைத்துவிட வேண்டுமென்பது இராஜ நீதி யல்லவா? இப்பொழுது விட்டு விட்டால், நகத்தால் கிள்ளி யெறிவதைக் கோடாலி கொண்டு வெட்டுவது போல ஆய் விடும். ஆதலால், இவனை இப்பொழுதே விண்ணுலகிற்கு விருந்தாக்குகிறேன். நீ பயப்படவேண்டா," என்று கூறிக்கொண்டே, போர்க்கோலம் பூண்டு சென்றான். சுக்கிரீவனும், 'அண்ணனுக்கு என்ன நேருமோ!' என்று பயந்து, பின் தொடர்ந்து சென்றான்.

மதிற்புறத் திருந்த மாயாவி, வாலி போர்க்கோலம் பூண்டு வருதலையும், சுக்கிரீவன் பின்தொடர்ந்து வருதலையும் கண்டான். 'யுகாந்த காலத்தில் எழுந்து உலகை அழிக்க வருகின்ற வடவைத் தீயே இரண்டுருவோடு தோன்றியதோ!' என்று மருண்டான். செய்வ தின்னதென்று தோன்றவில்லை. பயம் மேலிட்டது. ஓடவும் கால் எழவில்லை. அறிவு சோர்ந்தான்; அலறினான்; இரண்டு சிங்கங்களைக் கண்ட யானை போலத் துடித்தான்.

'வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.'

என்ற பொய்யா மொழியை மெய்யாக எண்ணாது வந்து விட்டேனே!' என்று மயங்கினான். 'இனி உய்யும் வகை யாது!' என்று ஆராய்ந்தான். ஒன்றும் தோன்றவில்லை. நாற்புறமும் தனக்கு மரண வாயில் திறக்கப்பட்டிருப்ப தாகவும், உய்யும் வழி அடைக்கப்பட்டிருப்பதாகவும் நினைத்தான். இவ்வளவிற்குள் அவ்விருவரும் சமீபத் தில் நெருங்கி வந்துவிட்டனர். சந்திரன் நன்றாய்ப்பிரகா சித்துக்கொண்டு இருந்தபடியால், வருவதை நன்றாகக் கண்டான். தன்னை யறியாமலே ஒரு கிளர்ச்சி யுண்டா யிற்று. சிறிது தூரம் வேகமாக ஓடினான். ஆண்டொரு பிலம் இருந்தது. 'இதில் புகுந்து மறைந்து கொண்டா லொழிய, நம்மைக் காத்துக்கொள்ள முடியாது,' என் றெண்ணி, அதில் புகுந்து விட்டான்.

பின்தொடர்ந்து சென்ற வாலி, சுக்கிரீவனை நோக்கி, "தம்பி, நீ இவ்விடத்திலேயே இரு; நம் சேனைகளையும் ஈண்டே நிற்கச் செய்; பிலவாயிலை நன்கு காத்துக்கொள். இவனை இப்பொழுது நாம் சும்மா விட்டு விடுவோ மானால், மேலும் மேலும் வந்து வருத்தத் தொடங்கு வான். விடக் கூடாது. இப்பொழுதே இப்பிலத்தில் நானும் நுழைந்து சென்று, இவனோடு போர் செய்து, இவனை எம புரத்திற்கு அனுப்பித் திரும்புகிறேன்," என்று கூறிப் பிலத்துள் நுழைந்தான். மாயாவி யிருக்கு மிடம் தெரிந்துகொள்ளவே சில மாதங்கள் ஆய்விட்டன. ஒருவாறு தேடித் திரிந்து கண்டு, அவனோடு போர் செய்து கொன்று வெற்றி யடைந்தான். இறந்த மாயாவி யின் குருதிநீர் பொங்கிப் பிலவாயிலின் வழியாக வந்து கொண்டிருந்தது. இரத்த வெள்ளத்தைக் கண்டான்

சுக்கிரீவன்; வானரர்களை நோக்கினான்; "அன்பர்களே, என் ஆருயி ரனைய அண்ணன் போருக்கென்று சென்று பதினான்கு ருதுக்கள்* ஆகின்றன. இன்றுவரை வரவில்லை. இரத்த வெள்ளமோ, மேலெழுந்து வந்து கொண்டிருக்கிறது. இதைப் பார்த்தால், அந்த மாயாவி யான கொடும்பாவியே என் அருமை யண்ணனைக் கொன்றிருப்பானென்று நினைக்கிறேன்," என்று கூறிப் புலம்பி, துயர்க் கடலுள் ஆழ்ந்து மயங்கினான்; அலறி னான்; ஒருவாறு தெளிந்தான்; 'நானும் இப்பிலத்துள் புகுந்து, என் முன்னவனைக் கொன்றவனைக் கொன்று திரும்புவேன். இல்லாவிட்டால், என் அண்ணன் அடைந்த இடத்தை நானும் அடைவேன்," என்று கூறிப் பில வாயிலுள் புகுந்தான்.

பில வாயிலில் சுக்கிரீவனோடு நின்றுகொண்டிருந்த மந்திரி சேனைத் தலைவர்கள் முதலிய எல்லாரும் அவனை நோக்கி, "எம் மரசரே, நீங்களும் இப்பிலத்துள் செல்ல லாமா? தன்னோடு எதிர்ந்தவர்கள் வலியில் பாதியைப் பெற்றுக்கொள்ளும் மேன்மை பொருந்திய வாலியே இறந்தார் என்றால், மற்றவர்கள் எம்மாத்திரம்? நீங் களே சற்று யோசித்துப் பாருங்கள். அங்கதன் ஒன்று மறியாத சிறுவன். அவனுக்கு உறுதி கூறுவார் எவரு மிலர். அரசனில்லாத நாடு காடாகு மல்லவோ? நாங்கள் அரசனில்லாமல் எவ்வாறு வாழ்ந்திருப்போம்? வாலிக் குப் பிறகு அரசை ஏற்றுக்கொள்ளத் தகுந்தவர்கள் தாங்களே யாவீர்கள். தமையனார் இறந்த வருத்தத்தால்

* ஒரு மாதம் என்று ஆநந்த ராமாயணமும், ஒரு வருஷம் என்று வான்மீகி ராமாயணமும் கூறும்.

தாங்கள் போருக்கு எழ நினைப்பது மிகவும் பொருத்த மானதுதான். கதியில்லாமல் இருக்கிற எங்களைப் பாது காப்பதும் தங்களைச் சேர்ந்த தருமம் என்பதை மறந்து விட்டீர்களா? 'துன்பம் மேலிட்டால் ஒன்றும் தோன்ருது,' என்பது உண்மையாயிற்று. நன்ருய் எண்ணிப் பாருங்கள். எங்களைப் பாதுகாக்க முன் வாருங்கள்," என்று பலவாறு வணங்கிக் கேட்டுக்கொண்டார்கள்.

வானரர்கள் வேண்டுகோளை மறுக்க மாட்டாத சுக்கிரீவன், மன வருத்தத்தோடு அரசுரிமையை யேற்று, அரசு செலுத்தி வந்தான். வாலியை யிழந்து மனம் வருந்தி யிருந்த வானரர்கள், 'சுக்கிரீவனுவது அரசனுக இருக்க உடன் பட்டானே!' என்று ஒருவாறு மகிழ்ந்து, அவன் ஆணைக்கு அடங்கி வாழ்ந்து வந்தார்கள். பில வாயிலிலிருந்து கிஷ்கிந்தைக்கு வரும்பொழுது, மாயாவி திரும்பி வந்து நம்மையும் வருத்திஞல் என்ன செய்வ தென்று யோசித்த சில வானரர்கள் ஒன்று கூடி, மகா மேரு மலையொன்று நீங்கலாக மற்ற மலைகளை யெல்லாம் கொண்டு வந்து பிலத்தின் வாயிலில் இட்டு அடைத்து விட்டார்கள். இச்செய்தி சுக்கிரீவனுக்குத் தெரியாது.

இங்ஙன மிருக்கும் நாளில், வாலியே மாயாவியைக் கொன்று திரும்பிஞன்; பிலவழி அடைக்கப்பட் டிருத் தலைக் கண்டான்; 'என் தம்பியான சுக்கிரீவனே இராஜ் யத்தைக் கைப்பற்றிக்கொள்ள வேண்டி இவ்வுபாயம் செய்திருப்பான்,' என்று எண்ணி, அதிக கோபம் கொண்டான். வழியில் கொண்டு வந்து குவிக்கப்பட் டிருந்த மலைகளை யெல்லாம் ஒரே எற்ருய் எற்றிஞன். அவைகளெல்லாம் நாநா பக்கமும் சிதறி வீழ்ந்தன

உடனே நகரத்தை யடைந்தான்; கொலு மண்டபத்துள் நுழைந்தான்; சுக்கிரீவன் அரியணையில் அமர்ந்திருத்தலை நோக்கினான்; அடங்காக் கோபத்தோடும் ஆரவாரித்து நின்றான்.

அரியணையில் வீற்றிருந்த சுக்கிரீவன், வாலி உயிர் பிழைத்து வந்தமைக்கு அளவிலா மகிழ்ச்சி கொண்டான் அவன் அடிகளில் வீழ்ந்தான்; "அண்ணலே, என் அறியாமையாலும் குறித்த நாள் கடந்தமையாலும் மாயாவியே ஜயித்திருப்பானென்று நினைத்து விட்டேன். நானும் அடங்காக் கவலையோடும் பிலத்துள் வந்து போர் செய்யத் துணிந்தேன். மந்திரி முதலியவர்களெல்லாம், "பெருவலி பெற்ற வாலியே தோற்றாரென்றால், மற்றவர்களால் அவனை வெல்ல முடியுமா? முடியாது. அங்கதனோ, ஒன்று மறியாத சிறுவன். நீங்களும் இல்லாவிட்டால், நம் நாடு தலைவனில்லாத நாடாய்த் தவிக்காதா? ஆதலால், நீங்களே இவ்வரசையேற்று அனைவரையும் பாதுகாக்க வேண்டும்,'' என்று கேட்டுக்கொண்டார்கள். அதனாலேயே நான் இச்சுமையை யேற்றுக்கொள்ள நேர்ந்தது. தாங்கள் இப்பொழுதே அரியணை யடைந்து, மணி முடி புனைந்து, இருக்க வேண்டுகிறேன். அடியேன் குற்றேவல் செய்துகொண்டிருக்கிறேன்,'' என்று கூறினான்.

அப்பொழுது வாலிக்கு முன்னினும் பதின்மடங்கு கோபம் பொங்கியது. கோபக் குறி தோன்றக் கூற்றுவனும் அஞ்சுமாறு கர்ச்சித்தான். இவ்வோசையைக் கேட்டுக் கடல்களெல்லாம் நடுக்கங் கொண்டு நம்மையென் செய்வானோ வென்று அலையும் அரவமும் இன்றி

அடங்கி யிருந்தன. காற்றும் சஞ்சாரமின்றி ஒருபால் ஒளித்துக்கொண்டது. எழுபது வெள்ளம் சேனைகளும் செய்வதறியாது திகைத்தன. இராவணனும் முன் அகப் பட்டதை நினைத்து நடுங்கி யிருந்தான். இவற்றை யெல் லாம் பார்த்த சுக்கிரீவன் பணிந்துகொண்டே பல முறை யும் மன்னிக்கும்படி வேண்டினான். வாலி ஒன்றையும் பொருட்படுத்தவில்லை. உருத்து நோக்கினான்; பல்லை நறநற வென்று கடித்தான். அடே சுக்கிரீவா, நீ துரோகி யும் துஷ்டனுமாவா யென்பதை இப்பொழுது நன்றாய்த் தெரிந்துகொண்டேன். 'கேடு வரும் பின்னே; மதிகெட்டு வரும் முன்னே,' என்னும் பழமொழியைப் புதுமொழி யாக்கினாய். இன்றைக்கு மாயாவி சென்ற விடத்திற்கு நீயும் செல்ல வேண்டுவதுதான். கணப்பொழுதில் விண் ணுல கேற்றிவிடுகிறேன். பகைவன் என்று வந்த பின் தாய் என்றும் பிள்ளை யென்றும் தம்பியென்றும் பார்க்கப் போகிறதில்லை. தன்னைக் கொல்ல வந்த பசுவையும் குத் திக் கொல்லலாம் என்று சாஸ்திரம் கூறுகிறது," என்று சொல்லிக்கொண்டே போர் செய்யத் தொடங்கினான்.

பிரஜைகளெல்லாம்சுக்கிரீவனுக்கு அநுகூலமாகவே இருந்தார்கள். மந்திரிகளும் வாலிக்கு வேண்டிய மட்டும் சமாதானம் கூறித் தேற்றினார்கள். அவை யெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காய் முடிந்தனவே யன்றிப் பிரயோஜனப் படவில்லை. இவற்றை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சுக்கிரீவன், "அண்ணன் தந்தைக்குச் சமானமானவன் என்றுசாஸ்திரங்கள் கூறுகின்றனவே! ஆகையால், நாம் இவனோடு போர் செய்ய லாகாது," என்று நினைத்தான்; எங்கேனும் சென்றொளிந்து தப்

பிக்க முயன்றான்; உடுத்த ஆடையோடும் அப்பொழுதே ஓடினான்; மலைகளை யெல்லாம் தாவிச் சென்றான்; எழு கடல்களையும் தாண்டி அண்டச் சுவரையும் பெரும்புறக் கடலையும் கடந்து சென்றான். "சுக்கிரீவன் எனக்குப் பகைவன். ஆதலால், அவனைக் காப்பாற்றுகிறவனையும் நான் பகைவனாக நினைத்துக் கொன்று விடுவேன்," என்று வாலி தேச மெங்கும் பறை யடிக்கும்படி செய்திருந்தமையால், சுக்கிரீவனைக் காப்பாற்றுவார் எவருமில ராயினர். கடைசியாக மந்திரிகள் கூறியவாறு மதங்க முனிவர் ஆச்சிரமத்தை யடைந்திருத்தலே தக்கதென்று நினைத்து, ஆண்டடைந்து, இறகிழந்த பறவைபோல ஓர் இடத்தில் ஒடுங்கி, மனம் வருந்தி யிருந்தான். ஆண்டுச் செல்ல மாட்டாத வாலி, அவன் மனைவியையும் தன் மனைவியாக்கிக்கொண்டான்.

இவ்வாறு சுக்கிரீவன் தன் மனைவியையும் இடத்தையும் இழந்து, துன்பக் கடலில் மூழ்கி யிருக்கும் காலத்தில், சக்கரவர்த்தி திருக்குமாரர்களாகிய இராம லக்குமண ரிருவரும் பெருமணி யனைய சீதையைத் தேடிக் கொண்டு மதங்க முனிவர் இருந்த மலையை நோக்கி வருவாராயினர். அதைக் கண்ட சுக்கிரீவன், பெரும்புண்ணில் காய்ந்த இரும்பு நுழைந்தது போல மனம் வருந்தி, அம்மலையில் உள்ள குகையில் சென்று ஒளிந்துகொண்டு, வாயு புத்திரனும் தன் மந்திரியுமான அநுமானை நோக்கி, "வரும் பொருளறிந்துரைத்து அரசர்க்கு உறுதி பயக்கும் அமைச்சனே, இதோ வரும் இவர்கள் வாலி யேவலால் வருகிறார்களென நினைக்கிறேன். இவர்கள் ஆயுதம் தரித்தவர்களாயும் மகா வீரர்களாயும் காணப்படுகிறார்

கள்; வில்லேந்திய இரண்டு மலைகள் நடந்து வருவதுபோல வந்துகொண்டிருக்கிறார்கள் ; தபோதனர் வேடம் தரித்து நம்மையே கொல்ல வருகிறார்கள். இதில் சிறிதும் ஐயமின்று. நாம் இத்துன்பத்திலிருந்து எப்படித் தப்புவது ?'' என்று கேட்டனன்.

இது கேட்ட அநுமான், "சுவாமி, தாங்களே இவ்வாறு மயங்கினால், நம் மித்திரர்களான மற்றவர்கள் என்ன பாடு படமாட்டார்கள் ? இது மதங்க முனிவர் ஆச்சிரமம் என்பதை மறந்துவிட்டீர்களா ? இவ்விடத்திற்கு வாலியும், அவரைச் சேர்ந்தவர்களும் வரமாட்டார்க ளென்பது தங்களுக்குத் தெரியுமே! இப்படிக் கண்ட கண்ட இடங்களுக்கெல்லாம் ஓடித் திரியலாமா? அன்றியும், தாங்கள் வாலிக்குத்தானே பயப்பட வேண்டும் ? மற்றவர்களுக்குமா பயப்பட வேண்டும் ? பொறுமையோடு ஆலோசிக்காமல் புத்தியைச் சிதற விட்டபடியால், பல விதமாக மனச் சஞ்சலம் கொண்டு தவிக்கிறீர்கள். தைரியத்தைக் கை விடாதீர்கள். தைரியம் புருஷ லக்ஷண மல்லவா ? எவனிடத்தில் தைரியமில்லையோ, அவனிடத்தில் உள்ள செல்வங்க ளெல்லாம் சூரியன் முன் பனி போலப் பறந்து விடும். சிறந்த அறிவுடைய தாங்கள், பிறருடைய நடை, உடை, பேச்சு முதலியவைகளால் அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டுதான் மேல் நடக்க வேண்டுவதை ஆலோசிக்க வேண்டு மென்பதை மறக்கக் கூடாது. ஆராயாமல் ஒன்றையும் செய்யற்க,'' என்று கூறினன்.

உடனே சுக்கிரீவன் அநுமானை நோக்கி, "இவர்கள் தேவர்களைப் போல இருக்கிறார்கள் ; முழங்கால்

வரை நீண்ட கைகளையும் விசாலமான கண்களையும் உடையவர்களாய் இருக்கிறார்கள்; உத்தமமான ஆயுதங்களைத் தரித்தவர்களாகவும் காணப்படுகிறார்கள். சிறந்த வீரத் தன்மை இவர்கள் முகத்திற் பொலிந்து விளங்குகிறது. இப்படிப்பட்டவர்களைக் கண்டால், யாருக்குத் தான் பயமுண்டாகாது? இவ்வீரர்கள் வாலியினால் அனுப்பப்பட்டே ஈண்டு வருகிறார்க ளென்பதற் கையமின்று. வாலியே நேரில் வந்திருப்பதாக நான் பயப்படவில்லை. அரசர்களுக்கு அநேக நண்பர்கள் இருப்பார்கள். அவர்களை நாம் நம்பக் கூடாது. எவனுக்கு இவ்வுலகில் பகைவர்கள் இருக்கிறார்களோ, அவன் மாறு வேஷம் பூண்டவர்களைக் கண்டால் தன் விரோதிகளென்றே நினைத்துக்கொள்ள வேண்டும். நாம் அவர்களை நம்பினாலும், அவர்கள் நம்மை நம்ப மாட்டார்கள். நாம் சோர்ந்திருக்கும் சமயத்தை யெதிர்பார்த்துக்கொண்டிருப்பார்கள். எப்பொழுதாவது தீங்கியற்றாமல் விட மாட்டார்கள்; வாலியோ, தீர்க்க ஆலோசனை யுள்ளவர் என்பது உனக்கு நன்றாய்த் தெரியும். இராஜாக்கள் அநேக உபாயங்களைக் கொண்டு சத்துருக்களைக் கொல்லும் சுபாவ முள்ளவர்க ளென்பதும் நீ யறியாததா? இது நிற்க. இவர்களை இன்னாரென்று நாம் எப்படித் தெரிந்து கொள்வது? சாதாரண மனிதனைப் போல் ஒருவனை அனுப்பி, அவர்கள் ரூபத்தினாலும், பேச்சினாலும், செய்கையினாலும், மற்ற உபாயங்களினாலும் சுத்தமான மனமுடையவர்களா வென்று பரீக்ஷித்து வரச் செய்ய வேண்டும். அவ்வாறு சென்று வரத் தக்கவர் உன்னைத் தவிர வேறு யாரிருக்கின்றனர்?" என்று வினவினான்.

இவ்வாறு வினவியதைக் கேட்ட அநுமான், சுக்கிரீவனை நோக்கி, "அண்ணலே, இவர்கள் தோற்றத்தைக் கவனித்துப் பாருங்கள்: பிரம விஷ்ணு உருத்திராகிய மூன்று தேவர்களும் இரு வடிவம் கொண்டு வந்தாற் போலக் காணப்படுகிறார்கள். உலகில் இவரை யொப்பாரும் மிக்காரும் யாருமில்லை. மனித சரீரம் பெற்ற வானவர்கள் போலவும் காணப்படுகிறார்கள்; சிந்தையில் சிறிது துயரம் உள்ளவர்களைப் போலவும் காணப்படுகிறார்கள்; கவலையோடு ஒரு பொருளைத் தேடி வருபவர்கள் போலவும் தோன்றுகிறார்கள். தருமமும், பெருமையும் வடிவு கொண்டு வந்தது போல விளங்குகின்ற இவர்கள், அருமருந்தன்ன பொருள் ஒன்றை இடையே தவறி விட்டிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். அதையே தேடிக்கொண்டு இரு புறமும் பார்த்த வண்ணமாய் வந்துகொண்டிருக்கிறார்கள். கோப மில்லாதவராயும், கருணை நிரம்பியவராயும், யாவருக்கும் நன்மை செய்தலையே இயற்கைக்குணமாகக் கொண்டவராயும் விளங்குகிறார்கள். இவர்களைக் காணும்பொழுது என் மனம் கரைகின்றது; எப்பொழுது மில்லாத ஓர் அன்பு தோன்றுகிறது. சிங்கம் யானை முதலிய வன விலங்குகளெல்லாம் தம் கன்றுகளைப் பார்த்தாற்போல மன முருகி நிற்பதை நீங்களே பாருங்கள். மயில் முதலிய பறவைகள் தம் சிறகுகளை விரித்துப் பந்தலைப்போல அமைத்து, இவர் மேனியில் வெயிற் படாமல் காக்கின்றன. மேகங்களும் இவர் களைப்புத் தீருமாறு இருபுறங்களிலும் சிறு திவலைகளைத் தூவிக்கொண்டு தொடர்ந்து வருகின்றன. நெருப்பைப் போலக் காலில் உறுத்தி

வெம்மை செய்யும் பருக்கைக் கற்களும், இவர்கள் வருகையைக் கண்டு, தாமரை மலர்போல் மென்மை கொண்டு விளங்குகின்றன. இவர் செல்லு மிடந்தோறும் மரங்க ளெல்லாம் சாய்ந்து இவர்களைத் தொழுவன போலக் காணப்படுகின்றன. நன்றாய்ப் பாருங்கள்: தரும வடிவானவர்கள் என்பதற்கு ஐயமில்லை. பிறவிப் பிணியை யறுத்து முத்தி யளிக்கும் முதல்வரே யிவர்கள். என் மனம் நெகிழ்ந்து உருகுகின்றது. அன்பிற்கு ஓர் அளவில்லாமல் இருக்கிறது. ஆதலால், நான் சென்று பார்த்து வருகின்றேன். நீங்கள் இங்கேயே அச்சமின்றி அமர்ந்திருங்கள்," என்று கூறி, விடை பெற்றுச் சென்றான்.

சிறிது தூரஞ் சென்று, பிரமசாரிய வேடந் தாங்கி, இராம லக்குமணர்கள் இருக்கு மிடத்தை யணுகினான். தலைமேல் கை குவித்தவனாய், மெய்ம்மயிர் சிலிர்க்கத் தாமரை மலர்போன்ற அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். "சுவாமிகளே, உங்கள் வரவு நல்வரவாக வேண்டும். நீங்கள் பெருவலி படைத்தவர்களாகக் காணப்படுகிறீர்கள்; மனோகரமான வடிவம் உடையவர்களாக விளங்குகிறீர்கள்; இராஜ ரிஷிகளையும் தேவர்களையும் போன்றவர்களாய் இருக்கின்றீர்கள்; கடுமையான விரதங்களை யனுஷ்டிக்கும் தவசிகளைப் போலவும் காணப்படுகிறீர்கள்; இந்த ரிசிய முக பர்வதமானது உங்களுடைய காந்தியால் விளங்குகிறது. பெரிய இராஜ்யங்களை யாளத் தகுந்தவர்க ளல்லவா நீங்கள்? உங்களுடைய கண்கள் தாமரை மலர்களைப் போல விளங்குகின்றன. மலைபோல அகன்றுயர்ந்து விரிந்த தோள்களைப் பார்க்

கும்பொழுது நீங்கள் இப்புவனம் அனைத்தையும் மிக எளிதாய் ஆளத்தகுந்த வன்மை யுடையவர்கள் என்பது விளங்குகிறது. விசாலமான மார்புகளையும், சிங்கம் போன்ற கம்பீரமான தோற்றத்தையும், மதங் கொண்ட யானையையும் விருஷபத்தையும் போன்ற நடையையும் பார்த்தால், அணிகளால் அலங்கரிக்கப்பட்டு விளங்க வேண்டிய அவயவங்கள் ஏன் வறிதே யிருக்கின்றன வென்று சந்தேக முண்டாகிறது. பூலோகத்தில் இறங்கி வந்த சந்திர சூரியர்களைப்போல விளங்குகிற நீங்கள், சகல இராஜ லக்ஷணங்களும் பொருந்திய நீங்கள், மகா வீரர்களான நீங்கள், சடை முடி தரித்து ஈண்டு வரக் காரண மென்ன?" என்று பணிவுடன் கேட்டான்.

இராம பிரான் அவனை நோக்கி, "நான்கு வேதங் களையும் கற்றுணர்ந்த அந்தணனே, நீ யார்? எங்கேனும் வழிதப்பி ஈண்டு வந்துவிட்டாயோ?" என்றான். அதற்கு அநுமான், "சுவாமி, சுக்கிரீவர் என்ற ஒரு குரக்கரசர் இருக்கிறார். அவர் மகா வீரர்; வாலியினால் வஞ்சிக்கப் பட்டுத் துக்கமடைந்து திரிகிறார். அவரே என்னைத் தங்க ளிடத்திற்கு அனுப்பினார். என் பெயர் அநுமான். நான் வாயுவின் புதல்வன்; சுக்கிரீவருடைய மந்திரி; அவ ரிஷ்டப்படியே இங்கு மாறு வேடம் பூண்டு வந்திருக் கிறேன்," என்று நயமாய்ப் பதில் கூறிவிட்டு, அவர்க ளுடைய மறு மொழியைக் கேட்க வேண்டு மென்ற விருப்ப முடையவனாய் வணங்கி நின்றான்.

அப்பொழுது இராம பிரான் இளையோனை நோக்கி, "தம்பி, இவன் வேதங்களை யெல்லாம் நன்கு கற்றவன் என்று நினைக்கிறேன். அங்ஙனம் கற்றிரா விட்டால்,

இவ்வளவு சாமர்த்தியமாய்ப் பேச முடியுமா? உலகத்தில் பெரும்பாலார் பேசும் பொழுதும் காரியங்களைச் செய்யும் பொழுதும் முகத்திலும் அங்கங்களிலும் ஏதாவது விகாரம் தோன்றும்படி நிற்பர். இவனை அதிக ஜாக்கிரதையாகக் கவனித்துப் பார்த்தும், அப்பேர்ப்பட்ட குற்றம் ஒன்றும் இவனிடம் காணப்படவில்லை. நீயே இவனுக்குத் தகுந்த விடை யளிப்பாயாக," என்று புகழ்ந்து கூறினான். இலக்குமணனும் தங்களுடைய வரலாறுகளை யெல்லாம் கூறி முடித்தான்.

உடனே இராமபிரான் அநுமானை நோக்கி, "நீ கூறிய கவிக்குலத் தலைவன் எங்கே யிருக்கிறான்? அவன் இருக்கு மிடத்தை யுடனே தெரிவிக்க வேண்டும். நாங்கள் அவனைப் பார்க்க வேண்டு மென்ற பேரவா வுடையவர்களாக இருக்கிறோம்," என்று கூறினான். அநுமானும் முன் உருவத்தை மாற்றி, வானர ரூபம் கொண்டு, இராம லக்குமணர்களைத் தன் தோளில் ஏற்றிக்கொண்டு, சுக்கிரீவன் இருக்குமிடம் சென்றான்.

மலை முழையில் ஒளிந்துகொண்டிருந்த சுக்கிரீவன், சந்தோஷமான இவர்கள் வரவைக் கண்டதும், மகிழ்ச்சி யடைந்தான். பயம் நீங்கிவிட்டது. வெளியே வந்து நின்றான். 'இதுவே ஒரு நல்ல நிமித்தம்,' என்று நினைத்தான். இராம லக்குமணர்களும் சமீபித்து விட்டார்கள். விரைந்தோடினான்; 'யானும் இவ்வுலகும் உய்ந்தோம்,' என்று கூறிப் பணிந்தான். அநுமானும் அவர் வரலாற்றைக் கூறினான். கேட்ட சுக்கிரீவன் இரகு நாயகனை நோக்கி, 'இரவிகுலத்திலகரே, என்னினும் உம்மை யடையத் தவஞ் செய்தவர்கள் இவ்வுலகில் யாருமில்லை

யென்பது உறுதி. உலகுக்கெல்லாம் தனி நாயகராய் விளங்கும் உம்மையே விதி கூட்டுவிக்குமாயின், இனி யானடையத்தக்கது யாது? என் முன் வந்தவரான வாலி யான் ஓட ஓடத் தொடர்ந்துவந்து என்னை அடித்தார். அவர் வலியைப்பற்றி நீங்கள் கேள்விப்பட் டிருப்பீர்கள். அவருடைய வால் செல்லாத இடத்தில்தான் இராவணனுடைய செங்கோல் செல்லும் என்றால், அவரைப்பற்றி வேறு கூற வேண்டுவதில்லை. அவரடி பொறுக்க மாட்டாமல் உலகெங்கும் ஓடித் திரிந்தேன்; புகலிடம் எங்கும் காணாமையால், இம்மலையையே புகலிடமாகக் கொண்டு பிழைத்திருக்கிறேன். இம்மலைக்கு மாத்திரம் அவர் வரமாட்டார். ஆதலாலேயே என் உயிர் இன்றுவரை பிழைத்திருக்கிறது. இனி உம்மையே புகலிடமாக அடைந்தேன். நீரே என்னைக் காப்பாற்ற வேண்டும்,'' என்று தன் முடி இராம பிரானுடைய மலரடிகளிற் பட வீழ்ந்து, தன் வரலாற்றைக் கூறி முடித்தான்.

அவ்வாறு கூறக் கேட்ட இராகவன், குரக்கரசை நோக்கி, "அன்ப, இனி, நான் உனக்குள்ள இன்ப துன்பங்களை யெல்லாம் என்னுடையனவாகவே நினைக்கிறேன். இனிச் சொல்ல என்ன இருக்கிறது? இன்று முதல் உனக்குப் பகைவராயிருப்போர் எனக்குப் பகைவர். கொடியவராயினும், உன்னை யடைந்தவர் என்னை யடைந்தவர். உன் சுற்றம் என் சுற்றம். நீயே என் ஆருயிர்த் தோழன்,'' என்று கூறித் தன் கையை நீட்டி, அவன் கையோடு சேர்த்து, அவனை இறுகத் தழுவிக்கொண்டான். பிறகு இருவரும் அன்பின் பெருக்

கால் ஒருவரை யொருவர் இமை கொட்டாமல் பார்த்து மகிழ்ந்திருந்தனர். குரக்குச் சேனைகள் ஆரவாரித்தன. அநுமானும் அகமகிழ்ந் திருந்தான்.

இவ்வாறு சந்தோஷத்தில் மூழ்கியிருந்து, சிறிது நேரஞ் சென்ற பிறகு, இரகு நாயகனும் சுக்கிரீவனும் மற்றவர்களும் எழுந்து, சந்தன மரங்களும் அகில் மரங்களும் அடர்ந்து, பளிக்கறை யளாவித் தெய்வ மகளிர் ஊசலாடும் இடங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டே ஒரு சோலையை யடைந்தார்கள்; பல நிறப் புஷ்பங்கள் விரிந்துதிர்ந்து இரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டது போல விளங்கும் ஓரிடத்தில் அமர்ந்தார்கள். வானரங்கள் காய் கனி கிழங்குகளை யெல்லாம் கொணர்ந்து கொடுத்தன. அவற்றை நீராடி யாவரும் அருந்தியிருந்தார்கள். சிறிது நேரம் சென்று, இராம பிரான் சுக்கிரீவனை நோக்கி, " நீயும் என்னைப்போல மனைவியை யிழந்து வருந்தி யிருக்கிறாயே!" என்று கூறி வருத்தப் பட்டான்.

உத்தமக் குணத்தனாகிய சுக்கிரீவன் இராம பிரானைப் பார்த்து, "சுவாமி, என் முன்னவரான வாலி என்னை வஞ்சித்து, என் மனைவியையும் அபகரித்துக் கொண்டு, என்னையும் துரத்திவிட்டார். நானோ, தீனன்; தாங்களோ, தீன ரக்ஷகர். எனக்கு உற்ற தோழரும் தாங்களே. ஆனதால், என்னுயிரைக்காட்டிலும் தாங்கள் எனக்கு அதிகமானவர்கள். நான் இதுவரை அடக்கிக் கொண்டிருந்த துக்கத்தை யெல்லாம் இனி வெளியிட்டுச் சொல்லுகிறேன். சற்றே செவி சாய்க்க வேண்டும்," என்று சொல்லத் தொடங்கினான்.

அவன் கண்களில் நீர் ததும்பிற்று. அவன், "வள்ளலே, வாலியை நினைக்கும்போது என்னுள்ளம் நடுங்குகிறது. அவர் ஒவ்வொரு நாளும் சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன்னர் எழுந்திருப்பார் ; காலைக் கடன் முடிக்கும்பொருட்டு நாற்றிசைக் கடல்களுக்கும் சென்று வருவார். அதனால், அவருக்குக் கொஞ்சமாவது சிரமமிருக்காது. பெரிய மலைகளின் உச்சியிலே நின்றுகொண்டு அவற்றின் சிகரங்களை ஆகாசத்தில் எடுத்தெறிந்து பந்தாடுவார் ; இக்காட்டிலுள்ள மரங்களை வேரோடு பறித்தெறிவார். இத்தொழில்களெல்லாம் அவருக்குத் தேகத்திலுள்ள கொசுவைத் தட்டுவது போல ஆகும். துந்துபி என்று எருமை வடிவு கொண்ட ஓரசுரன் இருந்தான். அவன் ஒருவராலும் வெல்ல முடியாதவன். அப்பேர்ப்பட்டவனை வென்று கொன்று ஓர் எற்றாய் எற்றினார். அவன் எலும்புக்கூடு மலைபோல இதோ கிடக்கிறது. பாருங்கள். இங்கிருக்கும் ஏழு மரா மரங்களையும் பாருங்கள். இவைகள் ஆதிசேஷனுடைய தலைக்கு அப்புறமும் சென்று வேரூன்றப் பெற்றவைகள் ; தெய்வ லோகத்துக் கப்பாலும் சென்று பரந்த கிளைகளை யுடையவைகள். இவற்றில் ஒன்றைப் பிடித்து அவர் அசைப்பாரானால், கனி காய் இலை முதலியவைகளெல்லாம் உதிர்ந்து மொட்டையாய் நிற்கும். அவர் தேவேந்திரனால் கொடுக்கப் பெற்ற ஒரு மாலையைத் தரித்திருக்கிறார்.* அவர் தம்மோடு யுத்தம் செய்கிறவர்கள் பாதி வலியை யிழந்துபோகும்படியான வரத்தைப் பெற்றிருக்கிறார்," என்று கூறி, மயங்கி நின்றான்.

---

*முன்னொரு காலத்தில் காஸ்யப ராஜர் கடுந்தவத்தோடு பரம சிவனை ஆராதித்து அம்மாலையைப் பெற்றார். அதை அவர் தேவேந்திரனுக்குக் கொடுத்தார். இந்திரன் அதைத் தன் குமாரனை வாலிக்கு ஈந்தான்.

இவ்வாறு கூறிய சொற்களைக் கேட்ட இரகு நாயகன், நம் வலிமையைத் தெரிந்து கொள்ளவே இவன் இவ்வரலாறுகளை யெல்லாம் கூறுகிறான் என்று நினைத்து, ஆண்டுக் கிடந்த துந்துபியின் எலும்புக் கூட்டை ஓரே எற்றாய் எற்றி வீசி விட்டு, "சுக்கிரீவ, இந்த அம்புகளைப் பார்த்தாயா? சூரியனைப் போல ஒளி வீசுகின்றன. இவை மிகவும் கூர்மையானவை; கோபத்தால் சீறும் சர்ப்பங்களைப் போன்றவை; வீண் போகாத இவ்வம்புகள் அவ்வாலியின் மார்பைத் துளைக்காமல் விடா," என்று கூறி, வில்லை வளைத்து, மரா மரத்தின்மீது ஓர் அம்பெய்ய, எல்லா மரங்களும் துளைக்கப்பட்டுக் கீழே விழுந்தன. மேலும், அவ்வம்பு கீழ் ஏழுலகினும் ஊடுருவிச் சென்று, அவற்றிற்கும் கீழ் ஏழெனப்படும் பொருள்க ளின்மையால், மீண்டு அம்பறாத் தூணியை யடைந்தது.

ஏழு கண்டங்களும், மேல் ஏழுலகமும், ஏழு குதிரைகளும், ஏழு முனிவரும், ஏழு மாதரும், 'இவ் வம்புக்கு ஏழென்பதுதான் இலக்கமோ!' என்று நடுங் கிக்கொண்டிருக்கக் கண்ட சுக்கிரீவன், இராம பிரானுடைய அடிகளில் வீழ்ந்து வணங்கி, "இன்று ஓரே அம்பால் ஏழு மரங்களையும் தாங்கள் வீழ்த்தியதை நினைக்குந்தோறும் அடங்காத மகிழ்ச்சி யுண்டாகிறது. இன்றே என் துன்பங்க ளெல்லாம் ஒழிந்தன," என்று மகிழ்ந்து கூறினான்.

பின்பு அவன், "சுவாமி, நாங்கள் இவ்விடத்தில் வசித்துக்கொண்டிருக்கும் பொழுது, இராவணனால் தூக்கிக்கொண்டு போகப்பட்ட ஓர் அம்மையார், தங்களை

யும், இளைய பெருமாளையும் அழைத்த வண்ணமாய் ஆபரணங்களை யெல்லாம் கழற்றி எண்டெறிந்து சென்றார். அவைகளெல்லாம் இதோ இருக்கின்றன," என்று கொணர்ந்து முன் வைத்தான். அவற்றைக் கண்ட இராம பிரான், 'சீதைக்கு என்னுற்றதோ!' என்று மயங்கி வீழ்ந்துவிட்டான். சுக்கிரீவனுக்கும் கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகிற்று. ஆனாலும், ஒருவாறு தெளிந்து, "இரவிகுல நாயகரே, அடியேன் இவ்வாபரணங்களை வரவழைத்துத் தேவரீரை வருந்தும்படி செய்து விட்டேன். தங்களைக் கை கூப்பி வணங்குகிறேன். ஆண்மையைக் கைவிடக் கூடாது. துன்பத்துக்கு இடம் கொடுக்க லாகாது. துன்பம் மேலிட்டால், உயிருக்கே அபாயம் வரும். நானும் மனைவியைப் பறி கொடுத்தவன் தானே! இப்படி வருத்தப் படுகிறேனா? ஒரு காலும் தைரியத்தைக் கைவிட மாட்டேன். தாங்கள் ஒன்றுக்கும் பயப்பட வேண்டா. மனைவியைப் பிரிந்த துன்பத்தை நெடுங்காலம் தாங்கள் அநுபவிக்கும்படி விடமாட்டேன்; ஈரேழுலகத்திலும் சென்று தேடுவேன்; மது கைடபர்களால் அபகரிக்கப்பட்டுப் பாதாளத்தில் கொண்டு போய் வைக்கப்பட்ட வேதத்தைப் பகவான் மச்சாவதாரம் எடுத்து, கொண்டு வந்ததைப் போல, சீதா பிராட்டியாரை இராவணன் பாதாளத்தில் வைத்திருந்தாலும், சுவர்க்கம் முதலிய லோகங்களில் ஒளித்திருந்தாலும், இன்னும் எங்கேனும் பிறரால் காணக் கூடாத இடத்திலிருந்தாலும், எப்படியாவது தங்களிடத்தில் கொண்டு வந்து சேர்ப்பேன். விஷம் கலந்த பண்டத்தை எப்படி ஒருவன் தின்று ஜீரணிக்

கச் செய்ய முடியாதோ, அதுபோலவே சீதா பிராட்டியாரையும் அவன் ஆண்டிருக்கச் செய்ய முடியாது. என்னிடத்தில் எழுபது வெள்ளம் குரக்குச் சேனைகள் இருக்கின்றன. யுக முடிவில் ஏழு கடல்களும் உலகைப் பரந்து மூடிக்கொள்வது போல, அவை ஒரு நொடியில் எங்கும் சென்று பரந்து நின்றுவிடும்; மகா மேரு கிரியையும் வேண்டுமானால் வேரோடு பிடுங்கி ஒடித்துவிடும்; காற்றையும் கூற்றையும் கைகளாற் பிடித்துவிடும்; வானகத்தையும் ஓர் இடியில் இடித்துத் தள்ளிவிடும்; ஏழு கடல்களையும் குடங்கையால் அள்ளிக் குடித்துவிடும்; இன்னும் மற்றவர்களால் செய்வதற் கியலாத வேலைகளையும் செய்யும் வல்லமை வாய்ந்தவைகளாயும் இருக்கின்றன. சந்தேக மில்லாமல் சீதா பிராட்டியாரை மீட்டுக் கொடுக்கிறேன். அதை முதலில் முடித்த பிறகே மற்றவைகளைக் கவனிக்க வேண்டும். கவலைப்படவேண்டா," என்று கூறிச் சேனைகளை யெல்லாம் திரட்டிக்கொண்டு வருமாறு புறப்பட்டான்.

உடனே அநுமான் இராமனை நோக்கி, "சுவாமி, முதலில் வாலியைக் கொன்று சுக்கிரீவருக்கு மணி முடி புனைந்தால்தான் சேனைக ளெல்லாம் நம் வயத்தவாய் நிற்கும். பெரும்பாலான சேனைகள் வாலிக்கு அடங்கினவைகளாய் இருக்கின்றன. அவைகள் இல்லாமல் சீதா பிராட்டியாரைத் தேடுவது சிரமமான காரியம். ஆதலால், வாலி வதமே முதலில் செய்யத் தக்கது," என்று விண்ணப்பம் செய்துகொண்டான்.

அது கேட்டு இராம பிரானும் அப்படிச் செய்வதே உத்தம மென்று கொண்டு, "சுக்கிரீவா, இனி நாமெல்

லாரும் ஈண்டிருத்தல் கூடாது. இப்பொழுதே கிட்கிந்தைக்குச் செல்வோம். புறப்படு. நீ மாத்திரம் சற்று முன்னரே சென்று வாலியை யுத்தத்திற்கு அழை. நான் அதற்கு மேல் நடக்க வேண்டிய காரியங்களைப் பார்த்துக் கொள்கிறேன்,'' என்று கூறினான். அவன் கூறியபடி சுக்கிரீவன் ஒரு கணமும் தாமதிக்காமல் கிட்கிந்தை சென்று வாலியைப் போருக் கழைத்தான்.

துயிலறையில், ஒரு பாற்கடல் கிடந்தது போலப் படுத்திருந்த வாலி, இவ்வோசையை,யானை பிளிறுவதைச் சிங்கம் தன் காதில் ஏற்பது போல ஏற்றான்; கோபத்தோடு சிரித்தான். அவ்வோசை ஈரேழுலகினும் பட்டது. ஊழிக் காலக் கடல் போல அவன் எழுந்தவுடன் அம்மலை பாதாளம் வரை அழுந்தி விட்டது.கோபக் கனலைக் கண்டு வடவைக் கனலும் ஒளி மழுங்கிற்று. கையோடு கையைத் தாக்கிய ஓசையால் திசை யானைகளும் நடுக்கம் கொண்டன. தேவர்கள் என்ன நிகழுமோ வென்று வருந்தினார்கள். அவன் சரீரத்தினின்றும் தோன்றிய காற்றினால் மரங்க ளெல்லாம் வேரோடு வீழ்ந்தன. 'இதோ வந்தேன்! வந்து விட்டேன்!' என்று கூறிய மொழிசாற்களைக்கேட்டு இரு சுடர்களும்,வான் மீன்களும் நிலை தடுமாறின. இந்நிலையைக் கண்ட தாரை, நாயகனுக்கு என்ன தீங்கு விளையுமோ வென்று பயந்து, போருக்குச் செல்ல வேண்டா வென்று வாலியைத் தடுத்தாள். அவள் வார்த்தையைப் பொருட் படுத்தாமல், அவள் கூந்தலும் தீயுமாறு புகையெழ வெகுண்டு, ஒரே ஓட்டமாய் ஓடி, சுக்கிரீவன் இருக்கு மிடத்தை நெருங்கி விட்டான்.

வாலி விரைந்து வருவதையும் அவன் கோபத்தையும் கண்ட சுக்கிரீவன், அசையாது நின்றுகொண்டிருந்தான். ஓடிவந்த வாலி, சுக்கிரீவனை ஒரே கட்டாய்க் கட்டினன். யுத்தம் பார்க்க வந்த தேவர்கள் பயந்து ஓடிவிட்டார்கள். இவர்களிருவரும் கட்டிப் புரண்டார்கள்; மலைச்சிகரத்தில் குதித்தார்கள்; ஒருவரை யொருவர் உதிரம் சிந்த அடித்தார்கள். இவர்கள் உடலிலிருந்து உதிரம் சிந்தித் தெறித்ததால், எல்லா நக்ஷத்திரங்களும் செந்நிறமாய் விளங்கின. மேகங்களும் கருநிறம் மாறிச் செந்நிறத்தோடு தோன்றின. இவ்வாறாக ஒருவரையொருவர் மார்பா லூந்தியும், காலா லுதைத்தும், கையால் எடுத்தெறிந்தும், கடித்தும், இடித்தும், மரங்களை வேருடன் பறித்து அடித்தும், மலைகளைப் பிடுங்கி வீசியும், அதட்டியும், கனைத்தும், கண்ணில் தீயெழ விழித்தும், ஒருவரையொருவர் தூக்கி வீசியும் சண்டை செய்தார்கள். இலக்குவன் வாலியின் உடலமைப்பையும், அவன் போர் செய்யும் திறத்தையும் கண்டு வியந்திருந்தான்.

இராம பிரான் தான் கூறியவாறு வாலியின்மேல் அம்பெய்யுமாறு நோக்கினன். நெடுநேரம் நோக்கியும், உடலமைப்பில் இருவருக்கும் வித்தியாச மில்லாமல் இருந்த படியால், மயங்கி, அம்பெய்யாது நிறுத்தி விட்டான். நெடுநேரம் போர் செய்து வாலியினால் கீழே தள்ளப்பட்ட சுக்கிரீவன், பிழைத்தாற் போது மென்று எண்ணி, இராம பிரானிடம் ஓடி வந்து, "சுவாமி, தங்களால் நான் இன்று மோசம் போக இருந்தேன். வாலி மேல் அம்பெய்து கொல்வதாக ஏன் இவ்வளவு உறுதி

கூறவேண்டும்? சும்மா விருந்திருந்தால், நான் சண்டைக் கே போயிருக்கமாட்டேன்," என்று வருந்தி யுரைத்தான்.

அவ்வாறு அவன் கூறிய வார்த்தைகளைக் கேட்ட இராம பிரான், "சுக்கிரீவ, அலங்காரங்களினாலாவது, ரூபத்தினாலாவது, உயரத்தினாலாவது, நடையினாலாவது உனக்கும் வாலிக்கும் வேற்றுமை காணக் கூடவில்லை. ஒரு வேளை தவறி உன்மேல் அம்பெய்து விட்டால் என்ன செய்வது? ஒருவனைப் பாதுகாப்பதாகச் சொல்லிவிட்டு, அவனையே கொன்றால், அதைக்காட்டிலும் மிகுந்த பாவம் இல்லை யென்று சாஸ்திரங்களில் கூறப்பட்டிருப் பதை நீ யறியாயோ? என் கையிலுள்ள அம்புகளோ, மிக வேகமானவைகள். தெரியாமலாவது அஜாக்கிரதை யினாலாவது எய்துவிட்டால், நம் இருவருடைய காரி யங்களும் கெட்டு விடுமல்லவா? இனிமேல் அவ்வாறு சந் தேகம் நேராமலிருக்கும்படி ஒரு மாலையை நீ கழுத்தில் அணிந்துகொண்டு போருக்குச் செல். கண்ணிமைக்கும் நேரத்திற்குள் அவன் உடலம் தரைமிசைக் கிடந்து புர ளுமாறு என் அம்புகள் அவன் மார்பிற் றைப்பதை நீ பார்க்கப் போகிறாய்," என்று கூறினான்.

இவ்வாறு இராமபிரான் கூறியதைக் கேட்டுத் தெளி வடைந்த சுக்கிரீவன், மறுபடியும் கிட்கிந்தை யடைந்து, தங்கத் தோரணங்களாலும் கொடிகளாலும் அலங்கரிக் கப்பட்டு வானர வீரர்களால் பாதுகாக்கப்படும் கோட்டை மதில்களை யெல்லாங் கடந்து சென்றான்; அங்கங்கே யிருந்த பசுக்களும், மான்களும், பறவைகளும் நடுங்கு மாறு கர்ஜித்தான்.

ஒரு நாளுந் தான் கேட்டிராத பெருமுழக்கத்தைப் பெருமகிழ்ச்சியோடு அமர்ந்திருந்த வாலி கேட்டு, எழுந்திருந்து, "இனி நான் இவனை விடுகிறதில்லை; இரண்டு முறை சும்மா விட்டு விட்டேன். அதனாலேயே இவன் அடிக்கடி என்னைப் போருக்கழைக்கிறான்," என்றுகூறிக் கோபத்தோடு புறப்பட்டான். உத்தமியான தாரை அவனை நோக்கி, "அன்பரே, சுக்கிரீவனுடைய கர்ஜனையையும், சந்தோஷத்தையும், தைரியத்தையும் சிறிது ஆராய்ந்து பாரும். சிறந்த மனிதர்களுடைய சகாயமில்லாமல் அவன் இங்கே வந்திருக்க மாட்டான். அயோத்தி யரசனான இராமனுடன் அவன் சிநேகம் செய்துகொண்டிருக்கிறதாக நான் கேள்விப்படுகிறேன். உம்முடன் பிறந்தவனோடு நீர் இனிப் போருக்குச் செல்ல வேண்டா. அவனோ, சிறுவன். உடனே அழைத்து வரச் செய்து, இளவரசனாக முடி சூட்டி, ஆதரியும்," என்று கூறினாள்.

கேடுமதியாளனான வாலி, அவற்றைப் பொருட்படுத்த வில்லை. வெளியில் வந்தான்; சுக்கிரீவனைக் கண்டான்; தோள்களைக் கொட்டி யாரவாரித்தான்; கட்டிப் புரண்டான். சிறிது நேரத்துக்கெல்லாம் சுக்கிரீவன் சண்டை செய்ய மாட்டாதவனாய் இராம பிரானிருக்கும் திசையை நோக்கிய வண்ணமாய்க் கலங்கி நின்றான். ஆண்டுள்ளோ ரனைவரும் இவர்கள் போர் செய்யும் திறத்தையும், உலகை யழிக்க உதிரக் கடல் வந்தது போல எங்கும் இரத்தம் பாய்ந்து பரந்திருத்தலையும் கண்டு, மயங்கி நின்றார்கள். விண்ணவர்களும், 'என்ன நிகழுமோ!' என்று திகைத்தார்கள்.

கருணைக் கடலான இராமபிரான், 'இனித் தாமதித்தல் கூடாது,' என்று நினைத்துக் கோதண்டத்தை வளைத்து, நாணேற்றி, ஓரம்பு தொடுத்தான். அவ்வம்பு வாழைப் பழத்தில் ஊசி நுழைவதுபோல வாலியின் உடலைத் துளைத்து விட்டது. அவ்வலி பொறுக்க மாட்டாத வாலி, காற்றினால் வீழ்த்தப்பட்ட மேரு மலை போல விழுந்தான். ஆனால், அவன் மனத்திலுள்ள வீரம் மட்டும் குறையவில்லை. அண்ட கோளகைகளும் இடிந்து விழுமாறு கூவினான்; கோபத்தோடு கையினால் நிலத்தை யறைந்தான்; "இத்தகைய தீச் செயலை யார் செய்திருப்பார்கள்? தேவர்கள் செய்திருப்பார்கள் என்று நினைத்தால், அவர்களுக்கு இவ்வளவு தைரியமும் வலிமையும் ஏற்பட்டு விட்டனவா? அவர்களால் இது செய்ய இயலவே இயலாது. சக்கராயுதத்தைக் கையிற் கொண்ட மகா விஷ்ணுதான் செய்திருப்பானோ? முத்தலைச் சூல மேந்திய முன்னவன்தான் செய்திருப் பானோ? மலை பிளவுபட வெறிந்த வேலோன்தான் செய்திருப்பானோ? யாராக இருந்தாலும் சரி. அவர்கள் தன்மைகளை யெல்லாம் இப்பொழுது ஒரு நொடிக்குள் பார்த்து விடுகிறேன். இயமன் நம் நகரத்துக்கு வந்தல்லவோ நம் உயிரைக் கவர்தல் வேண்டும்? பிறத்தலை யொழிய இறப்பென்பதே யில்லாத நம் நகரத்துக்கு இன்னொரு புதுமை யெய்துமா?" என்று பலவாறு கூறித் தன் காலினாலும் வாலினாலும் பற்றி யிழுத்து, அம்பைக் கையில் எடுத்தான். இரத்த வெள்ளம் நாற்புறமும் பெருகி யோடியது. 'இவ்வம்பு யாருடையதாக இருக்கலாம்?' என்று பார்த்தான்.

"மும்மைசா லுலகுக் கெல்லாம்
மூலமந் திரத்தை முற்றும்
தம்மையே தமக்கு நல்குந்
தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே யெழுமை நோய்க்கு
மருந்தினை யிராம னென்னும்
செம்மைசேர் நாமந் தன்னைக்
கண்களிற் றெரியக் கண்டான்."

*கார் முகில் வில்லேந்தி நிற்பது போல ஆண்டு நின்று கொண்டிருந்த இராம பிரானையும் கண்ணுற்றான். "இராமா, உண்மை நிலை நிறுத்தி மரபொழுக்கம் தவறாமல் உலகாண்ட தசரத சக்கரவர்த்தியின் மகனை பரதனுக்கு முன் நீயும் தோன்றினையே! பிறர் தீமை செய்யாமல் தடுக்க வேண்டுமென்று நினைப்பவர் தாமுமல்லவா தீமை செய்யாமல் இருக்க வேண்டும்? அரச நீதி யென்பது, உங்கள் குலத்துதித்தோர்கட் கெல்லாம் பிறவியிலேயே யமைந்த தல்லவோ? மூவுலகும் காக்கும் முதல்வனே, இத்தீமையைச் செய்து உங்கள் குலத்துக்கே யோர் வசையைத் தேடிக்கொண்டு விட்டாய்! அரக்கர் செய்த தீமையைப் பொறாது வந்த நீ, குரக்கினத்தைக் கொல்லலாமோ? இஃது எங்கேனும் நீதி நூல்களில் கூறப்பட்டிருக்கின்றதா? என்மீது ஏதேனும் குற்றமிருக்கக் கண்டனையா? நீ மாத்திரம் முறையிலாக் காரியம் செய்துவிட்டு, முறையிலாக் காரியம் செய்த அரக்கனை முனியலாமா? இருவர் போர் செய்யும் காலத்து, நடு நிலையில் நின்று நோக்குவதே நியாயமான வழி. இச்செயல் வீரமு மன்று; விதியு மன்று. நான் உனக்குப்*

பகைவனு மல்லேன். வீரர் இது கேட்டால், 'நகை யாதிரார். நீ வாலியைக் கொன்றதாக நினைக்க வேண்டா; அற வேலியைக் கொன்றதாக நினைத்துக் கொள்,'' என்று தன் பற்கள் பொடி படுமாறு நறநற வென்று கடித்து, வெடி சிரிப்பாகச் சிரித்துக் கூறினான்.

அது கேட்ட இராம பிரான், "வாலி, நீ உன் தம்பியா கிய சுக்கிரீவனைப் பிலத்தின் வாயிலில் இருக்கச் செய்து சென்றாய். அவன் நெடுநாள் வரை உன் வரவைக் காணாது மயங்கி நிற்க, வானர வீரர்கள் அவனை அரசேற்றுக் கொள்ளச் செய்தார்கள். நீ திரும்பி வந்தவுடன் அவன் உண்மையைக் கூறி மன்னிக்குமாறு வேண்ட, அவனைத் துரத்திக்கொண்டு உயிர் கவரச் சென்றா யல்லவா? அஃ திருக்கட்டும். நீங்கள் விலங்கினத்தைச் சேர்ந்தவர்களென் றும், உங்களுக்கு மானிடர்களைப்போல் கலியாணம் முதலிய சடங்குகளில்லை யென்றும், மனம்போல் திரியும் உரிமை பெற்றவர்களென்றும் கூறுகின்றாய்; விலங்குகளை வேட்டையாடிக் கொல்வது மன்னர்களுக்குரிய கடமை யென்பதை மட்டும் மறந்து விட்டாய்போல இருக் கிறது! யான் உன்னை மறைந்து நின்று அம்பெய்தது ஏனென்றால், முன்னமே உன் தம்பி என்னைச் சரண் புகுந்தான். முறை தவறிய உன்னைத் தென் புலத்திற் கனுப்பி, அவனுக்கே நாடளிப்பதாக யான் கூறி விட் டேன். என்னை நேரிற் கண்டால், நீயும் சரண் புகுவாய்; முன் கூறியதை நிறைவேற்றுவதா? பின் கூறியதை நிறைவேற்றுவதா? தரும சங்கடம் நேருமல்லவா? அத னாலேயே அவ்வாறு நின் றெய்தேன்,'' என்று கூறினான்.

சிறிது நேரத்திற் கெல்லாம் பிறவி நோய்க்கு மருந்தான இராம நாமத்தை அம்பின் மூலமாகக் கூற நேர்ந்ததால், நல்லுணர்வு வரப் பெற்ற வாலி, இராம பிரானை நோக்கி, "சுவாமி, என் தம்பியான சுக்கிரீவன் வெற்றரசாகிய இவ்வரசாங்கப் பொறுப்பைத் தானேற்று, வீட்டரசை யெனக் களித்தான். எனக்கு அவன் செய்தது நன்மைதான். ஆதலால், அறியாமலேனும், நறவு மாந்திய மயக்கத்தாலேனும் சிறிது குற்றம் செய்ய நேரினும், அவனை மன்னித்தருள வேண்டும்," என்று வேண்டிக்கொண்டான்.

பின்பு, தன் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த சுக்கிரீவனை நோக்கி, "தம்பி, தருமமே, வேதங்களாலும் மும்மூர்த்திகளாலும் கொண்டாடப்படும் இராமன் என்னும் திருப்பெயரோடு தோன்றி யிருக்கிறது. நீ ஒரு சிறிதும் சந்தேகப்படாதே.

" நிற்கின்ற செல்வம் வேண்டி
நெறிநின்ற பொருள்க ளெல்லாம்
கற்கின்ற இவன்றன் நாமம்
கருதுவ இவனைக் கண்டாய்
பொற்குன்ற மனைய தோளாய்!
பொதுநின்ற தலைமை நோக்கின்
எற்கொன்ற வலியே சாலும்
இதற்கொன்றும் ஏது வேண்டா.

" பாலமை தவிர்நீ யென்சொற்
பற்றுதி யென்னி னைய!
மேலொரு பொருளு மில்லா
மெய்ப்பொருள் வில்லும் தாங்கி,'

கால்தரை தோய நின்று
கணை கட்புலக் குற்ற தம்மா,
மூவ்தரும் பிறவி நோய்க்கு
மருந்தென வணங்கு மைந்த !
" என்னுயிர்க் கிறுதி செய்தா
னென்பதை யிறையு மெண்ணு
துன்னுயிர்க் குறுதி செய்தி ;
இவற்கம ருற்ற துண்டேல்,
பொன்னுயிர்த் தோளிரும் பூணாய்!
போதுதி நிலைமை நோக்கி
மன்னுயிர்க் குறுதி செய்வான்
மலரடி சுமந்து வாழ்தி."

"எப்பேர்ப்பட்ட தீமை புரிந்தவர்களானாலும், இவ்வள்ளலின் வாளிக் கிலக்காய் மடிவரேல், பிறவா நெறியை யடைவார்களென்றால், இணையடி யிறைஞ்சி யேவல் செய்பவர்கள் எத்தகைய இன்பம் பெறுவார்களென்பதைச் சொல்ல முடியுமோ? எம்பெருமான் ஏவிய ஏவல்களை ஒருகாலும் செய்யத் தவறாதே. அரச செல்வம் கிடைத்து விட்டதென்று மகிழ்ச்சி கொண்டு மயங்கியிருந்தால், பெற்ற பயனை யிழந்து விடுவாய். 'பேறலருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்,' என்று ஆன்றோர் கூறும் வாக்கிற் கிலக்காய் விடாதே," என்று பல நன்மொழிகளைக் கூறி, "இராமா, கட்புலனாய் வந்து கருணை செய்த கடவுளே, நான் முன்னொருகால், இராவணனை என் வாலால் கட்டிப் பத்துத் தலைப் பூச்சிபென்று ஆட்டிய செய்தியை நீ கேட்டிருப்பாய். இப்பொழுதும் அதுபோல அவனைக் கட்டிக் கொணர்ந்து

உன் குறையை முடிக்கும்படியான புண்ணியம் நான் செய்திலாமையால், இன்றோடு இறக்க நேர்ந்து விட்டது. அக்குறையை இந்தச் சக்கிரீவனே முடித்து வைப்பான். இவ்வருமனை உன் கை வில்லென்று நினைத்துக்கொள். என் குமாரனான அங்கதன் மிகச் சிறியன். அவன் உனக் கடைக்கலம்," என்று சொல்லி, வானவர்க் கிறைவன் ஆனான்.

உடனே சக்கரவர்த்தி திருமகன், சுக்கிரீவனையும் அங்கதனையும் அழைத்துக்கொண்டு உள்ளே புகுந்தான். அங்கிருந்த தாரையானவள், கணவனாகிய வாலி யிறந்ததைக் கேட்டு, "மன்னவோ! மங்கை பாகனை வணங்கிப் பெற்றவரங்களெல்லாம் மாண்டுபோயினவோ? நெருக்கிச் சென்றால் மகா மேரு மலையும் தூளாய்ப் பறந்து விடுமே! இயமன் இவ்விடம் வர அஞ்சுவானே! இன்று மட்டும் எப்படி வந்தான்? ஈங்கிறந்து கிடப்பது வேறொரு வாலி தானோ!" என்று பலவாறு அவன் வீரச் செயல்களை யெல்லாம் சொல்லிச் சொல்லி அழுதுகொண்டிருந்தாள். சுக்கிரீவனும் துக்கக் கடலுள் ஆழ்ந்தான்.

இராம இலக்குவர்கள், தாரையையும் சுக்கிரீவனையும் நோக்கி, "வாலி உத்தமமான பதவியை யடைந்து விட்டான். நீ வருந்தற்க," என்று சமாதானம் கூறி, ஈமக்கடனைச் செய்வித்தார்கள். பின்னர், இலக்குவன் இராமபிரான் உத்தரவுப்படி முடிசூட்ட வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து முடிக்க, மாருதி புண்ணிய தீர்த்தங்களை யெல்லாம் கொண்டு வந்து சேர்த்தான். கஜன், கவாக்ஷன், கவயன் முதலிய வானர வீரர்கள், சுக்கிரீவனை யழைத்து நீராடச் செய்து, நறுமலர் தூவி, ஆசி

கூறி, சிங்கம் சுமந்த செழுமணித் தவிசில் இருத்தி,மணிமுடி கவித்தார்கள்.

சுக்கிரீவன் மகிழ்ந்து, இராம பிரான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான்.கருணைக் கடலான இராம பிரான் அவனை நோக்கி, "நீ நின் முன்னோன் மகனான அங்கதனை யழைத்துச் சென்று, இளவரசாக முடி சூட்டி, இனிது வாழ்வாயாக; தரும நெறியினின்றும் ஒரு போதும் தவற லாகாது ; இன்னார் பகைவர், இன்னார் நண்பர் என்பதைத் தெரிந்துகொண்டு, அவரவர்களுக்குத் தகுந்தபடி நடந்துகொள்ள வேண்டும். கூனியால் எனக்கு நேர்ந்தவை யெல்லாம் உனக்குத் தெரிந்திருக்கும். ஆதலால், மங்கையர் திறத்து நீ இருக்க வேண்டிய தன்மையையும் நன்கு தெரிந்துகொள். மங்கையரால் மரணமும் நேரும் என்பதற்கு வாலியே சிறந்த சான்றாவான். மந்திரிகளுடைய சொல்லை ஒருபோதும் தட்டி நடவாதே. உனக்கு நான் அதிகமாகச் சொல்ல வேண்டுவதில்லை. பிரம்மாவுக்கானாலும் அறத்தி னிறுதியே ஆயுளி னிறுதியாகும். உலகத்திற்கே அடிப்படையாகவுள்ள அறத்தில் நின்று ஒருகாலும் தவறி நடக்க நினையாதே," என்று பலவாறு கூறினான்.

பின்னும் சுக்கிரீவனை நோக்கி, "சுக்கிரீவா, இப்பொழுது கார் காலம். இக்கார் காலம் கழிந்த பின்னரே சீதையைத் தேடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதுவரை நாங்கள், துஷ்ட மிருகங்கள் சஞ்சரிப்பதும், நல்ல நீரூற்றுக்களை யுடையதும், அநேகம் குகைகளை யுடையதும், நல்ல காற்று வீசப் பெறுவதுமாகிய பிரஸ்ரவண மலையில் இருக்கிறோம்; கார் காலம் கழித்து, சேனைகளோடுவந்து சேருவாயாக," என்று சொல்லிச்சென்றான்.

சுக்கிரீவனும் அங்கதனும் இராம பிரானைப் பல வாறு புகழ்ந்து பேசினர். வானரர்கள் களிப்படைந்து தேகம் பூரிக்கப் பெற்றார்கள். கிட்கிந்தா நகரம் பல வகையாக அலங்கரிக்கப்பட்டது. சுக்கிரீவன், இந்திராணியுடன் இருந்து களிக்கும் தேவேந்திரனைப் போல மன மகிழ்ந்து, அந்தப்புரத்திலேயே இருந்துவிட்டான்.

கார் காலம் முடியும் சமய மாயிற்று. சுக்கிரீவன் இராச்சிய காரியங்களை ஒரு சிறிதும் கவனியாமல், மந்திரிகளிடம் ஒப்புவித்துவிட்டுப் பேசாமல் இருந்துவிட்டான். சாஸ்திரங்களை யறிந்தவனும் கால தருமங்களையுணர்ந்தவனுமான அநுமான், இனித் தாமதித்தல் கூடாதென்று சென்று, "சுக்கிரீவ மகா ராஜாவே, உமக்கு அரச செல்வம் கிடைத்துவிட்டது; கீர்த்தியும் மேன் மேலும் வளர்ந்து வருகிறது. நற்குண சீலரான நீர், நண்பருக்கு வேண்டியதைச் செய்ய மறந்துவிட்டீர் என்று நினைக்கிறேன். நண்பருக்கு வேண்டிய காரியத்தை உரிய காலத்தில் முடித்துக் கொடுப்பவனே உத்தம நண்பனாவான். செய்யத் தகுந்த காலம் கழித்துச் செய்தல் நன்மை பயவாது. இதை ஞாபகப்படுத்தவே ஈண்டு வந்தேன்," என்று கூறினான்.

அது கேட்ட இரவி புதல்வன், "அநுமானே, தகுந்த காலத்தில் நினைப்பூட்டியதற்கு மகிழ்கின்றேன்; நீலன் முதலியவர்களை யழைத்து வரச் செய்து, இன்னம் ஒரு பக்ஷத்திற்குள் வானர வெள்ள மெல்லாம் இவ்விடம் வந்து சேர ஆணை யிட்டு அனுப்புக; அங்கதனையும் அழைத்துச் சென்று, வேண்டும் ஏற்பாடுகளைச் செய்க,"

என்று கூறிவிட்டுத் திரும்பவும் அந்தப்புரத்திற்குச் சென்றுவிட்டான்.

ஈங்கிவ்வாறிருக்க, மேகங்களெல்லாம் கேட்போரச்சமுற முழங்கி நீரைப் பொழிந்து இளைப்பாறும் மலையின்கண் மனைவியை யிழந்து துன்புற்றுக் கார் காலத்தைக் கழித்த இராமபிரான், 'சுக்கிரீவன் காலம் கழிந்தும் வந்து சேரவில்லையே!' என்று நினைத்து, "இளையோய், நம் நண்பன், 'மழைக்காலம் கழிந்து வருவேன்,' என்று நம்மிடம் கூறி யிருந்தா னல்லவா? மழைக்காலம் கழிந்துவிட்டது. இன்னம் வரக் காணோம். மறந்துவிட்டானோ! மந்திரிகளோடும் சேர்ந்து விளையாடிக் களியாட்டால் மயங்கி யிருக்கிறானோ! தெரியவில்லை; நீ உடனே சென்று அழைத்து வருவாயாக," என்று கூறி யனுப்பினன்.

புத்தியால் தேவ குருவை யொத்தவனும், அண்ணன் சொன்ன வண்ணம் நடப்பவனுமான இளையோன், தனது வேகத்தால் மலைகளை யெல்லாம் தாண்டி, வேண்டுவார் வேண்டியதை யளிக்கும் மலர் மரங்கள் நிழல் செய்வதும், படைக் கையர்களாய் வானர வீரர்கள் நின்று காவல் புரிவதுமான கிட்கிந்தா நகரத்தை யடைந்தான். அங்குள்ள வானர வீரர்களெல்லாம் பயந்து அவன் வருகையை அநுமானிடம் தெரிவித்தார்கள். அநுமானும் விரைந்து வந்து, அவனை அழைத்துச் சென்று, சுக்கிரீவனிருக்கு மிடத்தை யடைந்தான். இலக்குவன் வருகையைக் கண்ட சுக்கிரீவன், புத்திர மித்திரர்களோடும் எழுந்து பணிந்து, ஆசனத்தமரச் செய்தான்.

அநுமான் சுக்கிரீவனை நோக்கி, "மன்னரே, இப்போது என்ன கால மென்பதை நீர் அறிந்துகொள்ள

வில்லை. சரற்காலம் வந்துவிட்டது. நாம் காரியம் நிறை வேற்றும்படியான காலம் வந்தும், நீர் அதை அறிந்து கொள்ளாமலிருக்கிறீர். நான் முன்னமே ஞாபகப்படுத்தி விட்டேன். நீர் களித்து மயங்கி யிருக்கிறீர் என்று உம் மிடம் ஞாபகப் படுத்தவே இவர் வந்திருக்கிறார்,'' என்று கூறினன். அங்கதனும், இளையோன் வருகையைத் தெரி வித்துத் தான் முன்னமே நினைப்பூட்டியும் வாளா விருந் தமைக்கு வருந்தினன். இனி வாளா விருத்தல் கூடா தென்று, தாரை யெழுந்து வந்து, இளையோனை நோக்கி, "வீரரே, உமது நன்மையை விரும்பி யிருக்கிற நண்பன் செய்த குற்றத்தைப் பொறுத்தல் உமது கடன். நீர் நற் குண சீலர். சிறிதும் கோபம் கொள்ள மாட்டீர்,'' என்று சமாதானப் படுத்தினாள்.

உடனே சுக்கிரீவன் வானர வீரர்களை நோக்கினான். அங்கதன், மயிந்தன், துவிதன், அநுமான், கவயன், கவா க்ஷன், கஜன், சரபன், வித்தியுன்மாலி, சம்பாதி, சூர்யா க்ஷன், வீரவாகு, சுவாகு, நளன், குமுதன், சுஷேணன், தாரன், ஜாம்பவன், ததிவக்கிரன், நீலன், சுபாடலன், சுநேந்திரன் முதலிய பெரிய வானரத் தலைவர்கள் வந்து சேர்ந்தார்கள். விரைவில் சிவிகை கொணர வேண்டு மென்றான். வீரர்களும் விரைந்து சென்று ஓரழகிய சிவிகை கொணர்ந்தார்கள். வெண் கொற்றக் குடை நிழல் செய்ய, நாற் புறத்தும் வெண் கவரி வீச, நால் வகை வாத் தியங்களும் முழங்க, அநேகம் வீரர்கள் ஆயுத பாணிக ளாய்ச் சூழ்ந்துவர, சுக்கிரீவனும் இலக்குவனும் சிவிகையி லமர்ந்து, இராம பிரானிடம் சேர்ந்தனர். இத்தகைய ஆடம்பரங்களோடும், வானர வீரர்களோடும் சுக்கிரீவன்

வந்து சேர்ந்ததைக் கண்ணுற்ற இராம பிரான், அவனை வரவேற்று, ஆசனத் திருக்கச் செய்தனன். வானர வீரர்களும் நாற்புறமும் சூழ்ந்துகொண்டார்கள்.

சுக்கிரீவன் வானரப் படைகளை யெல்லாம் இராம பிரானுக்குக் காட்டி, "இவர்களெல்லாம் கைலாச மலையிலிருந்து வந்தவர்கள். இவர்களெல்லாம் இமய மலையிலிருந்து வந்தவர்கள். இவர்களெல்லாம் விந்த மலையிலிருந்து வந்தவர்கள். இடி முழக்கம் போன்ற குரலுடையவர்கள்; வேண்டிய போது வேண்டிய ரூபத்தை யெடுக்க வல்லவர்கள்; நதிகளையும் மலைகளையும் சிரம மின்றிக் கடக்கு மாற்ற லுடையவர்கள்; இளஞ்சூரியன் போன்ற நிற முடையவர்கள்; இடிக்க வேண்டு மென்றால், வான முகட்டையும் இடித்து விடுவார்கள். இவர்களை எண்ணிப் பார்க்க வேண்டுமானால், எழுபதினாயிரம் பிரம தேவர்களாலும் ஆகாது. இவர்கள் சேனைப் பரப்பைக் கண்டு பிடிக்க வேண்டு மென்றால், முக்கண் படைத்த முன்னவனாலும் முடியாது. இதோ சதவலி யென்பவன் நிற்கின்றான் பாருங்கள்; இவன் நூறு கோடி சேனைகளுடன் வந்திருக்கிறான். தாரையின் தந்தை பதினாயிரங் கோடி சேனைகளோடு வந்திருக்கிறான். சீமானும் கேசரியும் கணக்கிட முடியாத ஆயிரக் கணக்கான சேனைகளுடன் வந்திருக்கிறார்கள். கவாக்ஷன் ஆயிரம் கோடி சேனைகளுடன் வந்திருக்கிறான். தூமிரன் இரண்டாயிரங் கோடி சேனைகள் சூழ வந்திருக்கிறான். பனசன் மூன்று கோடி சேனைகளுடன் வந்திருக்கிறான். நீலன் பத்துக் கோடி சேனைகளோடு வந்திருக்கிறான். கவயன் ஐந்து கோடி சேனைகளோடு வந்திருக்கிறான். மயிந்தனும், துவிதனும்

பல்லாயிரம் கோடி சேனைகளோடு வந்திருக்கிறார்கள். கஜன் மூன்று கோடி சேனைகளோடு வந்திருக்கிறான். ருமண்வான் நூறு கோடி சேனைகளோடு வந்திருக்கிறான். கந்தமாதனன் நூறாயிரம்கோடி சேனைகளுடன் வந்திருக்கிறான். அங்கதன் பதுமம் என்ற எண்ணிக்கையைக் கொண்ட சேனைகளோடு வந்திருக்கிறான். மற்றும் பல வானர வீரர்கள் அளவில்லாத சேனைக் கடல்களோடு வந்திருக்கிறார்கள்," என்று கூறினன். இராம பிரான், சுக்கிரீவன் இவ்வாறு கூறியதைக் கேட்டுச் சீதையைப் பெற்றது போன்ற அவ்வளவு மகிழ்ச்சி யடைந்தான்.

உடனே சுக்கிரீவன் இமைப் பொழுதும் தாமதிக்காமல், விந்தன் என்னும் வானரத் தலைவனை நோக்கி, "வானர உத்தம, நூறாயிரம் வானரர்களோடு கீழ்த் திசைக்குச் செல்; மலைகளிலும் வனங்களிலும் நதி தீரங்களிலும் சீதா பிராட்டியாரைத் தேடு; பாகீரதி, சரயு, காளிந்தி, சரஸ்வதி, யமுனே, கௌசிகி முதலிய ஆறுகளையெல்லாம் கடந்து சென்று பார்; விதேகம், மாளவம், காசி, கோசலம், மகதம், வங்கம் முதலிய நாடுகளில் எல்லாம் ஆராய்ந்து பார்; மந்தர மலைக்கும் செல். அங்கே கொடூரமான நோக்குள்ளவர்களாயும், இரும்பு போன்ற சரீர முள்ளவர்களாயும், நீரினுள் புகுந்து வசிக்கும் ஆற்றலுள்ளவர்களாயும், சிலர் இருக்கிறார்கள். அவ்விடங்களில் எல்லாம் நன்கு தேடிப் பார்; மலைகளினுள்ள குகைகளிலும், பூஞ்சோலைகளிலும், சமுத்திரத் தீவுகளிலும் பார். அங்கங்கே சில அசுரர்கள் இருப்பார்கள். அவர்கள் நிழலின் மூலமாகவே, செல்பவர்களை யிழுத்துத் தின்று விடுவார்கள். அதற்கு மேல் வைனதேயனுடைய

பட்டண மிருக்கிறது. அதையும் பார்; அதன்மேற் பாற் கடலிற் சென்று பார். அதன் நடுவில் வெள்ளி ரிஷபம் என்ற ஒரு மலையும், சுதரிசனம் என்னும் ஒரு குளமும் இருக்கின்றன. அதையும் கடந்து சென்றால், சாதரூபம் என்னும் மலை யிருக்கிறது. அம்மலை முடியில் ஆதி சேஷன் இருக்கிறான். அதற்குமேல் உதய பர்வதம் இருக்கிறது. அதன் சிகரம் எண்ணிறந்த யோசனை தூரம் இருக்கும். திருமால் இவ்வுலகை யளக்குங் காலத்தில், மகா மேருவில் ஒரு காலையும், அதில் ஒரு காலையும் வைத்து அளந்தார். அதற்கப்பாலுள்ள மலைகளிலும், குகைகளிலும், வனங்களிலும் சென்று தேடு. உனக்கு நன்மை யுண்டாகட்டும்," என்று வாழ்த்தி யனுப்பினான்.

அங்கதனை நோக்கி, "அங்கதா, நீ உன் சேனைகளோடு தென்றிசையை நோக்கிச் செல். தண்டகாரணியம், கோதாவிரி முதலியவற்றை யெல்லாம் கடந்து செல்; ஆந்திரம் சேர சோழ பாண்டியம் முதலிய நாடுகளையும் தாண்டிச் செல்; தேவ அரம்பையர் நீராடிச் செல்கின்ற காவிரி யாற்றையும் கடந்து செல்; மலைய மலைக்குச் சென்றால், அகத்தியரையும் பார்க்கலாம். அவரைக் கண்ட பின் தாம்பிர வர்ணி நதியையும் தாண்டிச் செல்; அதன் பின் தென் கடலைக் காணுதி. அங்கொருபால், சித்தர் சாரணர் வசிக்கின்ற மகேந்திர மலை யிருக்கிறது. அதையும் கடந்து சென்றால், மனிதரால் அடைய முடியாத தான ஒரு தீவு இருக்கிறது. அங்கேதான் சீதா பிராட்டியாரை நன்றாய்த் தேடிப் பார்க்க வேண்டும். அங்கே, கொடுந்தொழி லரக்கனான இராவணன் இருக்கிறான். கடலின் நடுவில் அங்காரகை யென்னும் ஒரு பெண்

இருக்கிறாள். அவள் ஓர் அரக்கி; மேலே யாராவது பறந்து சென்றாலும், நிழலின் மூலமாகவே அவர்களைப் பற்றி யிழுத்துத் தனக்கு வேண்டும் உணவைப் பெறுவாள். அப்பக்கங்களிலும் நன்றாய்த் தேடிப் பார். அதற்கப்பால் புஷ்பிதம் என்னும் ஒரு மலை யிருக்கிறது. அதன் பொற்சிகர மொன்றில் சூரியனும், வெள்ளிச் சிகர மொன்றில் சந்திரனும் தங்குவார்கள். அவற்றை நன்றி மறந்தவர்களும், நாஸ்திகர்களும் காண முடியாது. அவற்றை யெல்லாம் கடந்து, அங்கங்கே யுள்ள மலைகளிலும் நதிகளிலும் தேடு. பிதிர் லோகம் வரை செல்லலாம். பிதிர் லோகத்துக்குள் மாத்திரம் போய் விடாதே. அஃது இயமனுடைய இராஜதானி. அது மிகுந்த இருள் சூழ்ந்திருக்கும். அதற்கப்பால் செல்ல முடியாது. நன்கு ஆராய்ந்துகொண்டு ஒரு மாதத்திற்குள் வந்துவிட வேண்டும். எவன் விரைவில் ஜானகியார் இருக்கு மிடம் தேடி வந்து சொல்கிறானோ, அவனே எனக்குச் சிறந்த நண்பன். என் செல்வ மெல்லாம் அவன் செல்வமாகும். அவன் பல குற்றங்களைச் செய்த போதிலும், அவனை என் உறவின னாகவே மதிப்பேன். சென்று வா," என்று கூறி யனுப்பினான்.

சுஷேணனை நோக்கி, "சுஷேணா, நீ இரு நூறாயிரம் சேனா வீரர்களோடு மேற்றிசையை நோக்கிச் செல். சௌராஷ்டிரம், சூரதேசம், பீமதேசம் முதலிய கண் கவரும் இயற்கை யழகு வாய்ந்த தேசங்களையும், நகரங்களையும், வனங்களையும், ஆறுகளையும் கடந்து செல். மேல் கடற் பக்கங்களிலெல்லாம் தேடுங்கள். சிந்து நதி சங்கமமாகிற இடத்தில் நூறு கொடு முடிகளையுடைய ஏம கூடம்

என்னும் ஒரு மலை யிருக்கிறது. அக்கொடு முடிகளெல்லாம், பலநிற இலைகளடர்ந்த மரங்கள் நெருங்கியனவாய்த் தோன்றும். அவ்விடங்களிலெல்லாம் நன்கு தேடிப் பார். அதற்கப்புறமுள்ள மலைகளில் கோடிக் கணக்கான கந்தருவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மிகக் கொடியவர்கள். அங்கே செல்ல வேண்டா; அங்குள்ள காய் கனிகளையும் பறித்துத் தின்னவும் வேண்டா. அவ்விடத்தில் இயன்ற அளவு தந்திரமாகவும், ஜாக்கிரதையாகவும் தேடு. அங்கே வச்சிரம் என்னும் மலை யிருக்கிறது. அங்கும் பார். சமுத்திரத்தில் ஆறு யோஜனை தூரத்திற் கப்பால் வராகம் என்னும் ஒரு மலை யிருக்கிறது. அதில் பிராக்ஜோதிஷம் என்னும் ஒரு நகர மிருக்கிறது. அங்கே நாகன் என்னும் ஓர் அசுரன் இருக்கிறான். அங்கெல்லாம் தேடிப்பார். அம்மலையிலேதான் இந்திரனுக்குமுடிசூட்டினார்கள். அதைக்கடந்து மேருமலைக்குச் செல். அங்கே தேடிக்கொண்டு சிறிது தூரஞ் சென்றால், மேரு சாவர்ணி என்னும் ஒரு முனிவரைக் காண்பாய். அவரை வணங்கு. அதற்கப்பால் செல்ல வேண்டா அதுவரைக்குந்தான் பார்க்க வேண்டும். அதற்கு அப்பால் இருள் மூடியிருக்கும். செல்லலாகாது. ஒரு மாதத்திற்குள் திரும்பி வந்துவிட வேண்டும்,'' என்று கூறியனுப்பினான்.

சதவலியை நோக்கி, "சதவலி, நீ உன் மந்திரிகளோடும், நூறாயிரம் வானர வீரர்களோடும் வட திசையை நோக்கிச் செல். மிலேச்சம், புளிந்தம், காம்போஜம், யவனம், பௌரவம், இடங்கணம், சீனம் முதலிய நாடுகளில் எல்லாம் தேடி, இமய மலையிலும் தேடு. அவற்றை

யெல்லாம் கடந்து நெடுந்தூரஞ் சென்றால், நூறு யோஜனை தூரம் விரிந்ததொரு வெளி தோன்றும். அதைக் கடந்தால், கைலாய மலை தோன்றும். பின் கிர வ்ஞ்ச மலையையும் அடையலாம். பதறாமல் தேடிப் பார். அங்கே நுழைந்து செல்லற்கரிய அநேகம் குகைகள் இருக்கும். அங்கெல்லாம் கவனமாகத் தேட வேண்டும். அவற்றைக் கடந்தால், மைநாகம் என்னும் மலை யிருக்கிறது. அங்கே சித்தர்களெல்லாம் வசிக்கின்ற சித்த ஆச்சிரமங்கள் இருக்கின்றன. ஆண்டுள்ள சித்தர்களை யெல்லாம் கேட்டுப் பார். அதற்கப்பால் சென்றால், சந்திர சூரியர்கள் சஞ்சார மற்று, நக்ஷத்திரங்களு மில்லாமல், முனிவர்களின் சரீர ஒளியால் விளங்கும ஓரிட மிருக்கிறது. அதற்குமேல் புண்ணியாத்துமாக்கள் வசிக்கின்ற உத்தர குரு இருக்கிறது. அங்கு வசிப்பவர்கள் எல்லாரும், எப்பொழுதும் இயலிசைகளைக் கேட்டு மகிழ்ச்சியுள்ளவர்களாகவே இருப்பார்கள். சந்தோஷ மில்லாதவர்களாய் ஒருவரும் இருக்க மாட்டார். அந்த இடத்தையும் கடந்து சென்றால், சோமகிரி என்னுமொரு மலை யிருக்கிறது. அதைச் சூழ்ந்த இடங்க ளெல்லாம் அதனாலேயே பிரகாசிக்கின்றன. அதைப் பார்த்தவுடன் திரும்பிவிடு. அதற்கப்பால் செல்ல முடியாது. இன்னும் என்னால் கூறப்படாத இடங்களிருந்தாலும், அவற்றை யெல்லாம் நன்றாய்த் துருவிப் பார்த்துக்கொண்டு ஒரு மாதத்திற்குள் திரும்பி வந்துவிட வேண்டும். நற்குண முடையவனே, எஜமானனுடைய நலத்தைத் தன்னல மென் றெண்ணுபவனே, விரைந்து செல்,'' என்று கூறி யனுப்பினான்.

பின்னும் சுக்கிரீவன் அநுமானை நோக்கி, "பேராண்மை யுடையாய், பேராற்ற லுடைய வாயு குமாரனே, சகல லோகங்களினும் தடையின்றிச் சஞ்சரிக்கும் ஆற்றல் உன்னிடத்திலேயே இருக்கிறது. நீரிலாயினும், வனத்திலாயினும், வானத்திலாயினும் விரைந்து பறந்து செல்லும் ஆற்றலுடையாய், இராமர் பெயர் பொறிக்கப்பட்ட மோதிரம் இது. நீ இதைக் கையில் வைத்துக்கொள். இந்த அடையாளத்தினால் ஜானகியார் நீ இராம தூதன் என்று நன்கு தெரிந்துகொள்ளுவார். இந்த மோதிரம் இல்லாவிட்டால், நம்பிக்கை யேற்படாது. எங்கிருந்தாலும் சீக்கிரம் தேடிக்கொண்டு வரவேண்டும்," என்று கூறலும், அநுமான் சுக்கிரீவனை நோக்கி, தலைமேற் குவித்த கையனாய் வணங்கி, "சுவாமி, எப்படியாவது சீதா பிராட்டியாரைக் கண்டு வரலாமென்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுவிட்டது. என்னுடைய தொழில் வல்லமைகளை யெல்லாம் இது சம்பந்தமாக உபயோகப் படுத்திச் சீதா பிராட்டியாரைத் தேடிக்கொண்டு வருவேன்," என்று கூறிச் சென்றான்.

சுக்கிரீவன், இராம இலக்குமணர்களோடு பிரஸ்ரவண மலையிலேயே ஒரு மாத காலத்தையும் கழிக்க வேண்டுமென் றெண்ணி, ஆண்டே தங்கி, அவர்களுக்கு வேண்டிய நன்மையான காரியங்களையெல்லாம் செய்துகொண்டிருந்தான்.

இராம பிரான் சுக்கிரீவனை நோக்கி, "நண்ப, நீ வானர வீரர்களுக்கு நாற்றிசையிலும் செல்ல வேண்டிய வழிகளையும், ஆங்காங்குள்ள நாடுகள், நகரங்கள், மலைகள், வனங்கள் முதலியவற்றையும் எடுத்துக் கூறினையே!

அவைகளை யெல்லாம் நீ எப்படி யறிந்தாய்?'' என்று கேட்டனன்.

உடனே சுக்கிரீவன், "சுவாமி, முன்னொரு காலத்தில் மாயாவி யென்னும் ஓர் அசுரன் போருக்கு வந்தான். வாலி அவனைத் துரத்திக்கொண்டு ஓடினார். அம்மாயாவி ஆற்றாது பிலத்தில் புகவே, வாலியும் புகுந்தார். அப்பில வாயிலில் ஒரு வருஷம் வரையில் நான் காத்துக்கொண்டிருந்தேன். வாலி வரவில்லை. இரத்த வெள்ளம் மேலே வந்தது; வாலியே யிறந்து விட்டாரென்றெண்ணி, மிக வருந்தினேன். மற்ற வானரர்களும் நடுக்கங் கொண்டு, அந்தப் பில வாயிலை அடைத்துவிட்டு என்னை அரசனாக இருக்கும்படி வேண்டினார்கள். அரசனில்லாத இராஜ்யம் பாழாகு மென்றும் எடுத்துக் கூறி வற்புறுத்திய படியால், நான் அதை யேற்றுக்கொண்டேன். இவ்வாறு சில நாட்கள் செல்ல, வாலியே மாயாவியைக் கொன்று திரும்பி வந்தார்; பில வாயிலில் அடைக்கப்பட்டிருந்த மலைகளை யெல்லாம் காலால் எற்றினார்; நான்தான் அவ்வாறு செய்திருக்க வேண்டு மென்று நினைத்துக்கொண்டார்; பிரளய கால ருத்திரனும் கண்டு நடுங்குமாறு வெகுண்டார். உடனே, நான் நிகழ்ந்தவற்றைச் சொல்லி, இருக்கையை விட்டெழுந்து பணிந்து, 'இவ்வரசை யேற்றுக்கொள்ளுங்கள்,' என்று வேண்டினேன். அவர் என்மீது நம்பிக்கை யற்றவராய்ச் சேனைகளோடு என்னைத் துரத்தினார். அப்பொழுது, நாநா பக்கங்களிலும் ஓடித் திரிந்து, ஆங்காங்குள்ள இடங்களில் தக்கவாறு மறைந்துகொண்டேன். அவரும் அவ்விடங்களை யெல்லாம் அறிந்து பின் பற்றி வந்தமை

யால், புகலிட மின்றி, அலைந்து தவித்தேன். அப்பொழுது புத்திமானாகிய அநுமான், 'மதங்கமுனிவர் சாபத்தால் வாலி அவர் இருக்கு மிடத்திற்கு வரமாட்டார். நாம் ஆண்டுச் சென்றிருத்தலே தக்கது,' என்று கூற, ஆண்டுச் சென்று தங்கி யிருந்தேன். இதனாலேயே நான் இவ்வுலகங்களை யெல்லாம் பார்க்க நேர்ந்தது,'' என்று கூறினான்.

ஏவலை மேற்கொண்டு சென்ற வானர வீரர்களெல்லாம், நாடுகள், நகரங்கள், மலைகள், ஆறுகள், குளங்கள் முதலியவற்றை யெல்லாம் ஒன்றும் விடாமல் தேடினார்கள். குறித்த காலம் வந்துவிட்ட படியால், கீழ்த்திசை சென்றிருந்த விந்தனும், வட திசை சென்றிருந்த சதவலியும், மேற்றிசை சென்றிருந்த சுஷேணனும் சேனைகளோடும் திரும்பி வந்து, சுக்கிரீவனடியில் வீழ்ந்து பணிந்து, 'நாங்கள் தேடிச் சென்ற திசைகளில் சீதாபிராட்டியாரில்லை,' என்று கூறிவிட்டார்கள்.

தென்றிசை சென்றிருந்த அங்கதன் முதலியவர்கள், சம்பாதியின் மூலமாகச் சீதை யிலங்கையில்தான் இருக்கிறாள் என்று தெரிந்துகொண்டார்கள். சாஸ்திரங்களை யறிந்தவனும், எஜமானனிடத்தில் விசுவாசமுள்ளவனும், பகைவர்களால் ஊறு செய்யக் கூடாதவனுமான அநுமான், இராம நாமத்தை யுச்சரித்துக் கொண்டு, 'நானே இலங்கைக்குச் செல்கிறேன்,' என்று கூறிக் கடலைத் தாண்டி, இலங்கையை யடைந்தான். பல விடங்களிலும் தேடிக் காணாமையால், அசோக வனத்தை யடைந்தான். ஆண்டு அவள் நிலைமையை நோக்கி, 'இவளே சீதை,' என்று நினைத்து, முன்னின்று,

இராம இலக்குமணர்களுடைய வரலாறுகளைக் கூறி, தான் இராம தூதன் என்பதையும் மெய்ப்பித்துத் தான் கொணர்ந்த கணையாழியை யீந்தான். சீதையும் மகிழ்ந்து, தன் சூடாமணியை அவனிடங் கொடுத்தாள். அதைப் பெற்ற அநுமான், அசோக வனத்தை யழித்து, இலங்கையை யெரித்து, சுக்கிரீவனிருக்கு மிடத்து அங்கதன் முதலியவர்களோடும் வந்து சேர்ந்தான். இதற்குள் குறித்த காலம் கடந்துவிட்டது.

சுக்கிரீவன், வருத்தப்பட்டுக்கொண்டு இருக்கின்ற இராம பிரானைத் தேற்றி, "அன்பரே, வருந்த வேண்டா. வானரர்கள் நிச்சயமாய்ச் சீதையைக் கண்டே யிருப்பார்கள்; இல்லாவிட்டால், குறித்த காலம் கடந்திருக்க மாட்டார்கள். அங்கதன் முதலியவர்கள் வந்து என் மதுவனத்தை யழித்துவிட்டதாகக் கேள்விப்படுகிறேன். முன்னோர்கள் காலம் முதல் நெடுங்காலமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிற அம்மதுவனத்தை மகிழ்ச்சி மிகுந்தாலொழிய அவர்கள் அழிக்க மாட்டார்கள். அங்கதன் வெற்றி பெறுமல் இதுவரை வந்ததில்லை. இப்பொழுதும் அவன் வெற்றி பெற்று வருவான் என்பதற் கையமில்லை. புத்திமானாகிய அநுமானும் சென்றிருப்பதைக் கவனியுங்கள்," என்று சமாதானப் படுத்தினான். அச்சமயத்தில் அநுமான் விரைந்து ஓடி வந்து, தென்றிசையை நோக்கி வணங்கிய கையனாய்ச் சீதையின் வரலாற்றை யெல்லாம் கூறி, அவள் கொடுத்த சூடாமணியைக் கையிற் கொடுத்தான். அதைப் பெற்ற இராம பிரான், சீதையின் நிலையை யெண்ணிச் சிறிது நேரம் வருந்தி யிருந்தான்.

உடனே சுக்கிரீவன் இராமபிரானைப் பார்த்து, 'அரசரே, இனி மனத்தில் சிறிதும் கலக்கம் வேண்டா. வீரச் செயலையும் தந்திரத்தையும் பார்த்தீர்களா? இப்படிப்பட்ட பலசாலி இந்தப் பூமியில் வேறு யாரும் இல்லை யென்பது நிச்சயம். வேறு யாரும் இப்பேர்ப்பட்ட காரியத்தை மனத்தால் நினைக்கவும் முடியாது. இலங்கையானது, தேவர்களாலும், யக்ஷர்களாலும், தானவர்களாலும், உரகர்களாலும் அணுகக் கூடாதது; இராவணனால் காவல் செய்யப் பெறுவது. அப்பேர்ப்பட்ட இலங்கையுள் எவரேனும் செல்ல நேர்ந்தால், சத்துருக்களால் தாக்கப்படாமல் மீள்வது கஷ்டம். இவன் தன்னோடு எதிர்த்த அரக்கர்களை யெல்லாம் வென்று திரும்பியிருக்கிறான். இனி நமக்கு வெற்றியே யுண்டாகப் போகிறது. பிராட்டியார் இருக்குமிடம் தெரிந்த பின்னரும் வருத்தப்படலாமா? இனி வரப் போகும் காரியங்களையும் யூகித்தறியும் சாமர்த்தியசாலியல்லவா நீங்கள்? நீதி சாஸ்திரங்களை யெல்லாம் கற்றுத் தேர்ந்தவர்க ளல்லவா நீங்கள்? இஃது இப்படி ஆகும் என நிர்ணயிக்கும்படியான ஆற்றல் படைத்தவர்க ளல்லவா நீங்கள்? இனிக் கவலை வேண்டா. 'கடலை யெவ்வாறு கடப்போம்? இலங்கையுள் எப்படிப் புகுவோம்? பகைவர்களை யெங்ஙனம் வெல்வோம்?' என்ற கவலையும் தங்களுக்கு வேண்டுவதில்லை. ஊக்கம் குறைந்தால், எல்லாம் குறைந்துவிடும். நம் வீரர்கள் எல்லா விதத்திலும் தேர்ச்சி பெற்றவர்கள். அவர்களைக் கொண்டே இலங்கையுள் செல்வதற்கு வேண்டும் காரியங்களை யெல்லாம் செய்து, அதனுள்

நுழைந்து, இராவணனைத் தொலைத்து, சீதா பிராட்டியாரை மீட்டுக்கொண்டு வரும்படியான முயற்சிகளைச் செய்கிறேன். தாங்கள் மன மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும்,'' என்று கூறினான்.

இனித் தாமதிக்கக் கூடாதென்றெண்ணி, எல்லாரும் புறப்பட்டுக் கடலருகே சென்று, கடலரசனை வழி வேண்டி நின்றனர். ஒருவாறு வழி பெற்று, அணை கட்டி அக்கரை சென்றனர். இவர்கள் வந்திருப்பதைக் கேட்ட இராவணன், "சுக்கிரீவனை நாம் எப்படியாவது பிரித்துவிட வேண்டும்,'' என்று எண்ணித் தூதனை யனுப்பி, "சுக்கிரீவா, நீ உயர்ந்த குலத்திற் பிறந்தவன்; உனக்கும் எனக்கும் யாதொரு விதமான பகையுமில்லை. நீ ருக்ஷரஜஸின் புத்திரனாகையால், எனக்கு உறவினனு மாகிறாய்; உன் அண்ணனான வாலியும் எனக்கு நண்பன்; நண்பனுடைய தம்பி யாதலால், நீயும் எனக்கு நண்பனே. உத்தம வீரனாகிய நீ, கேவலமான மனிதர்களோடு சேரலாமா? அவர்களைச் சேர்ந்தால் உனக்கு என்ன இலாபம் கிடைக்கப் போகிறது? வானரர்களுக்கும் இராக்ஷஸர்களுக்கும் என்ன பகை வந்தது? பகை யில்லாமல் நீ சண்டைக்கு வரலாமா? புத்திசாலியாகிய நீயே யோசித்துப் பார்த்து, என்னோடு வந்து சேர்; இல்லாவிடில் திரும்பிச் செல்,'' என்று சொல்லச் செய்தான்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட சுக்கிரீவன் அடங்காக் கோபம் கொண்டவனாய்த் தூதனைக் கொல்ல எழுந்தான். ஒருவாறு தெளிந்து, 'நீதி நூல்களுக்கு விரோதமாகத் தூதனைக் கொல்லலாகாது,' என்று எண்ணி,

"அடா பதரே, இராவணன் எனக்கு நண்ப னல்லன். எனக்கு அவன் யாதொரு உபகாரமும் செய்யவில்லை. சிநேகிதராகிய இராம பிரானுக்குப் பகைவனாகையால், எனக்கும் அவன் பகைவன்தான். அவனிடம் நான் தயை காட்ட வேண்டுவதில்லை. அவன் எனக்குச் சத்துருவே. ஒன்று மறியாத மூடனாகிய அவனைத் தொலைத்துச் சீதா பிராட்டியாரை மீட்கப் போகிறோம் என்று அறியச் சொல்," என்று கூறி யனுப்பினான்.

தூதன் இவற்றைக் கேட்டுப் பொருது விரைந்தோடி இராவணனிடம் கூறினான். அவன் மிகுந்த கோபத்தோடு போருக்கு வந்தான் சுக்கிரீவன் இராம பிரான் முதலியவர்களோடும் போருக்கு எழுந்து, சேனைகளோடும் சென்று, இராவணன் மகுடத்தைத் தானே பறித்துக் கொணர்ந்து, இராம பிரான் திருவடிகளில் வைத்துப் பணிந்து நின்றான்.

கருணைக் கடலாகிய இராம பிரான், அங்கதனைத் தூதாக விடுத்து, 'சீதையை விடுகிறாயா? அல்லது உயிரை விடுகிறாயா?' என்று கேட்டு வருமாறு செய்தனன். இராவணன் சீதையைவிட உடன்படாமையால்; எல்லாரும் போருக்குச் சென்றனர். பாவியாகிய இராவணன், சில நாள் போர் புரிந்து, சேனைகளை யெல்லாம் இழந்து மடிந்தான். இதற்குள் பதினான்கு வருடங்கள் கழிந்துவிட்டபடியால் சுக்கிரீவன், விபீஷணன், குகன் முதலியவர்களோடும் இராம பிரான் அயோத்தி யடைந்தான். குறித்த நன்னாளில் வசிட்டர் திருமுடி புனைந்தார். சுக்கிரீவன் இராம பிரான் அருள் பெற்றுத் தன்னகரடைந்து, எழுபது வெள்ளம் சேனைகளோடும் இனிது வாழ்ந்திருந்தான்.

# விபீஷணன்

உலகத்தில் அவரவர்கள் செய்த நன்மை தீமைகளுக்குத் தக்கவாறு அளந்து நுகர்விக்கும் பிரமனுடைய சாபத்தால், இராக்ஷஸர்களுள் ஹேதி, பிரஹேதி எனும் இருவர், உடன் பிறந்தார் இருந்தனர். பிறக்கும் போதே நல்லறிவோடு பிறந்து, எல்லாம் தெரிந்தவனாய் விளங்கிய பிரஹேதி என்பான், பொருள்களைத் தேடிக் காப்பாற்றுவதாலும், மனைவி மக்களைப் பேணுவதாலும் எப்பொழுதும் துன்பத்தையே விளைக்கும் இவ்வில் வாழ்க்கையை வெறுத்து, துறவறத்தை மேற்கொண்டான். ஹேதி என்பவன், பசியைப் பொறுத்து, ஐம்பொறிகளையும் அடக்கித் தவம் செய்து, தான் மட்டும் வீடு பெறுவதற்கேதுவாகிய துறவறத்தைக்காட்டிலும், அத்தகையாரையெல்லாம் பாதுகாக்கும் நல்லறமாகிய இல்லறத்தை மேற்கொள்ள எண்ணி, பயை என்பவளை மணந்து, இல்லறம் நடத்திக்கொண்டிருந்தான். சிலநாட் கழித்து, அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். அவர்கள் அவனுக்கு வித்தியுத் கேசன் என்று பெயரிட்டு, அன்போடு வளர்த்து வந்தார்கள்.

வித்தியுத் கேசன் நன்கு வளர்ந்து, மணம் செய்து கொள்ளத் தக்க பருவமடைந்தான். பெற்றோர்கள், தங்கள் மகனுடைய குணாதிசயங்களையும் வீரத்தையும் கண்டு மகிழ்ந்து, சால கடங்கடை யென்னும் ஒரு

பெண்ணை மணம் செய்து வைத்தார்கள். கணவனும் மனைவியும், ஒத்த அன்பும் அறிவும் உடையவர்களாகி வாழ்ந்து வரும் நாட்களில், சால கடங்கடை கரு வுற்ருள். அவள் ஒரு நாள் உலாவி வர எண்ணி, மந்தர மலையை யடைந்தாள்; கருப்பம் முதிர்ந்துவிட்டதால், ஆண்டே ஓர் ஆண் மகவை யீன்ருள். 'தொடர்ந்த மும்மல முறுக்கிவெம் பவக்கடல் தொலையக், கடந்த ஞானியும் கடப்பரோ மக்கள்மேற் காதல்?' என்ற ஆன்ருேர் வாக்கு அவளிடத்தில் பொய்த்தது. அவள் அவ்விடத் திலேயே மகவைக் கிடத்திவிட்டுத் திரும்பிப் பாராமல் தன் கணவனிருக்கு மிடத்தை யடைந்தாள். அவனும், அக்குழந்தையைப் பற்றி யொன்றும் கவனிக்கவில்லை.

அம்மலையிற் படுத்திருந்த அக்குழந்தை, சிறிது நேரஞ் செல்லவே, பசியால் அழத் தொடங்கிற்று. 'திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணையாம்,' என்பது பொய்யாகா தன்றே? அவ்வமயம் உலக மாதாவான பார்வதி, தன் கணவரோடு இடப மீதேறி வந்துகொண் டிருந்தாள். அவள் பாதுகாப்பா ரற்றிருக்கும் அக் குழந்தையைப் பார்த்து, மன மிரங்கிக் கணவரிடம் கூறி னள். பரம சிவனும் மன மிரங்கி, சால கடங்கடையின் வயது அப்பொழுதே அக்குழந்தைக்கு வர வேண்டும் என்றும், அக்குழந்தை தேவர்களைப்போல மரணமின்றி யிருக்க வேண்டு மென்றும் அருள் செய்து, ஒரு சிறந்த விமானத்தை யளித்துச் சென்ருர். செல்லும் பொழுது, மற்ற அரக்கர்களும் இவ்வாறுதா னிருப்பார்க ளென்ற ஓர் எண்ணந் தோன்றிற்று. உடனே, அரக்கிகள் கரு வுற்ற நாளே கருவுயிர்க்கவும், பிறந்த வுடனேயே அக்

குழந்தைகளுக்குத் தாயின் வயது வரவும் அருள் செய்தார்.

பரம சிவனால் அருளைப் பெற்ற சுகேசன் என்பான், விமானத்தின்மீதேறித் தன் மனம் போனபடியெல்லாம் உலாவித் திரிந்தான். அவன் சில காலம் கழித்து, மிகுந்த அழகுள்ளவளான தேவவதி யெனப் பெயர் கொண்ட ஒரு கந்தருவ மாதை மணம் புரிந்து, இல்லறம் நடத்திக்கொண்டிருந்தான். நாளடைவில், தேவவதி கருப்ப முற்று, மாலியவான், சுமாலி, மாலி யென்னும் மூன்று குமாரர்களை யீன்றாள்.

அம்மூவரும், ஆகுதி பொங்கும் முத்தீ வளர்வது போலவும் மருந்துண்ணாமையால் நோய் வளர்வது போலவும் வளர்ந்து, நன்கு கற்றுத் தேர்ந்தனர்; 'நம் தந்தையைக்காட்டிலும் நாம் சிறந்த தவத்தைச் செய்து மேம்படல் வேண்டும்,' என்று நினைத்தனர்; மகா மேரு மலையே தவஞ் செய்யத்தக்க இடமென் றெண்ணி, ஆண்டுச்சென்று, மெய், வாய், கண், மூக்கு, செவிகளாகிற ஐம் பொறிகளையு மடக்கித் தவம் செய்யத் தொடங்கினர். அவர்கள் செய்யும் தவத்தைக் கண்டு, தேவர்களும், அசுரர்களும், தாபதர்களும், 'என்ன நேருமோ!' என்று நடுங்கினார்கள் என்றால், அவர்கள் தவத்தின் வலிமையைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

இவ்வாறு நெடு நாள் தவம் செய்த பின், அவர்கள் தவத்தைக் கண்டு மகிழ்ந்த நான் முகன், பரிசுத்தமான மாமணித் தேரின்மீதேறி வந்து, முன்னின்று, "மாதவத்தீர், நுமக்கு வேண்டுவதைக் கூறுவீராக," என, அவர்கள்,

"தேவ ராதி திரிபுவ னத்துளோர்
ஏவ ரேனும் எமக்கமர் தோற்கவும்
தேய்வில் காலங்கள் செல்லவும்,

அருள் செய்ய வேண்டும்," என்று கேட்டுக்கொண்டார்கள். தவம் புரிந்து சித்தி பெற்ருேர் வேண்டியதை வேண்டிய படியே கொடுக்க வேண்டுவது முறையாதலின், நான்முகன் அவர் வேண்டியவற்றை யெல்லாம் கொடுத்து மறைந்தான்.

வரம் பெற்ற மூவரும், அளவிலா ஆனந்தத்தால் தோள்கள் பூரிக்கப் பெற்றவராய், வாத பித்த கபங்களைப் போல உலகை வருத்தத் தொடங்கினர். அவர்கள் செய்கையைக் கண்டு தேவேந்திரன் முதலாகவுள்ள தேவர்களும் நடுங்கிஞர்கள். நாகர்க ளெல்லாம் மயங்கிஞர்கள். பூலோக மாந்தர்க ளெல்லாம் புலம்பித் தவித்தார்கள். இவ்வாறு நடுங்கி நிலை குலையுமாறும் பத்துத் திக்குகளையும் அடக்கித் தங்கள் ஆளுகையே சிறந்து விளங்குமாறும் செய்துகொண்டார்கள். 'இனி நாம் ஓரிடத்தி லிருந்துகொண்டு அரசுசெய்ய வேண்டும்' என்று விரும்பித் தேவ தச்சனை யழைத்து, "விசுவகர்மா, மூவுலகங்களிலும் ஒப்பும் உயர்வும் இல்லையென்று சொல்லும்படியாகவும், அயன், அரன், அரி என்னும் முத்தேவரும் சேர்ந்து போர் புரிய வரினும் தாக்க அரியதாக இருக்கும்படியாகவும், ஒரு மாளிகை யமைப்பாயாக," என்று கட்டளை யிட்டார்கள். விசுவகர்மன் அம்மூவரையும் நோக்கி, "அரக்கர் தலைவரே, முன்ஞெரு காலத்தில், ஆதி சேஷனுக்கும் வாயுவுக்கும் போர் நேர்ந்தது. அக்காலத்தில் ஆதி சேஷனல் பற்றிக்

கொள்ளப்பட்ட மகா மேருவை வாயுவினால் பெயர்க்க முடியாமற் போயிற்று. அதனால், உலகில் வாயு சஞ்சார மின்றி நின்றுவிட்டது. உலகோர் மூச்சு விட முடியா மல் திகைத்தனர். தேவர்கள், வாயு வெட்கப்பட்டே அவ்வாறு செய்தானென்றெண்ணி, ஆதிசேஷனை வேண் டிக்கொள்ள, அவன் மூன்று தலைகளை மட்டும் சிறிது நழுவ விட்டான். உடனே வாயு அப்பக்கமாக அடித் துக்கொண்டு சென்று, மகாமேருவின் மூன்று சிகரங்களை யும் கடலில் எறிந்து விட்டான். இவ்வரலாறு நீங்களும் கேட்டிருப்பீர்கள். அவ்வாறு அடித்துக்கொண்டு போகப்பட்ட மூன்று சிகரங்களும் கடலில் வானத்தை யளாவி விளங்கிக்கொண் டிருக்கின்றன. சந்திர சூரியர் களும் நக்ஷத்திரங்களும் அவற்றைக் கடந்து செல்ல முடியாது. மேகங்களும் அவற்றைத் தாண்டிப் போகா. அவை உலகத்திலுள்ள மலைகள் எல்லாவற்றினும் முயர்ந் தவை. அப்பேர்ப்பட்ட இடத்தில் ஒரு பொன் மயமான நகரம் அமைத்திருக்கிறேன். அதில் நீங்கள் எல்லாரும் குடியேறி யிருக்கலாம்," என்று தெரிவித்தான். மூவரும் மன மகிழ்ந்து, பொன்னாற் செய்து, இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டு, இரவு பகலென்கிற வேறுபாடின்றி விளங்குகின்ற அந்நகரத்தில் குடி புகுந்து, வாழ்ந்திருந் தார்கள்.

அவர்கள் இவ்வாறு செல்வச் செருக்குடன் வாழ் தலைக் கண்ட தருமதை யென்னும் கந்தருவ மாதானவள், தன் மக்களான சவுந்தரி, கேது மதி, வசுதை யென்னும் மூவரையும் முறையே மாலியவான், சுமாலி, மாலி யென் னும் அம்மூவருக்கும் மணஞ் செய்து கொடுத்தாள்.

காளடைவில், மூத்தவனை மாலியவானுக்குச் சவுந்தரியி னிடமாக வச்சிர முஷ்டி, விரூபாட்சன், சதுமுகன், சுபதக்நன், யஞ்ஞ கோபன், மத்தன், உன்மத்தன் என்ற ஆண் மக்கள் அறுவரும், அநலை யென்ற ஒரு பெண் மணியும் பிறந்தார்கள். இரண்டாமவனை சுமாலிக்குக் கேது மதியினிடமாக, பிரகஸ்பதன், அகம்பனன், விகடன், காலகார்முகன், தூமிராக்கன், தண்டன், சுபாரிசன், சங்கிராதி, பிரகசன், பாசகர்னன் எனும் ஆண்மக்களும், இராகை, புஷ்போத்கடை, கைகசி, கும்பீசினி என்னும் பெண் மக்களும் பிறந்தார்கள். மூன்றுமவனை மாலிக்கு வசுதை யென்பவளிடமாக அநிலன், அநலன், அரன், சம்பாதி * யென்னும் நான்கு குமாரர்கள் பிறந்தார்கள். புத்திரப் பேற்றை யடைந்த மூவரும் எல்லாரோடும் சேர்ந்து கொண்டு, கூற்றம் போலவும், கனல் போலவும், கொதிக்கும் விஷம் போலவும், கொடியோர் கோபம் போலவும், ஆறிலொரு கடமை கொள்ளாது அளவுகடந்து குடிகளை வருத்தி யிறைகொள்ளும் அரசன் பாவம் போலவும் மேன்மேலும் உயர்ந்து, தங்களோடு போர் செய்யத் தக்கவர் எவருமில்லை யென்று செருக்கடைந்து, யாகங்கள் முதலான நல்ல காரியங்களுக் கெல்லாம் இடையூறிழைத்து, தேவர் கோன் முதலாகவுள்ள தேவர்களையும் வருத்தத் தொடங்கிவிட்டார்கள்.

இந்திரன் முதலிய தேவர்களெல்லாம், அரக்கர்கள் செய்யும் துன்பத்தைப் பொறாது, நகரத்துள்ளே கிடந்தழுந்தி நடுங்கு முயிர்போல நடுங்கி, ஆலகாலத்தை யமிழ்தாக வுண்டு உலகங் காத்த பரமசிவனை யடைந்து,

---

* இந்நான்கு உத்தமர்களுமே விபீஷணனுக்கு மந்திரிகளானார்கள்.

" எந்தாய்! போற்றி; ஏறேறும்
இறைவா! போற்றி; ஏழுலகும்
தந்தாய்! போற்றி; அணிகொன்றைத்
தாராய்! போற்றி; சகமுய்ய
வந்தாய்! போற்றி; வஞ்சகர்முன்
வாராய் போற்றி."

என்று கூறிப் பணிந்து நின்று, "அண்ணலே, மாலிய வான் முதலாகவுள்ள அரக்கர்களால் நாங்கள் படும் துன்பம் சொல்லும் தரத்த தன்று. இன்றே தேவரீர் எழுந்தருளி, அரக்கர் குலத்தை வேரோடறுத்து விட்டால், இன்னம் இரண்டொரு நாட்களில் உலகங்களெல்லாம் அழிந்துவிடுவது திண்ணம். இவ்விடரினின்றும் எங்களைக் காத்தருளல் வேண்டும்," என்று இரந்து நின்றார்கள்.

தேவர்கள் இவ்வாறு கூறக் கேட்ட கைலைநாதர், "தேவர்களே, சுகேசன் வழித் தோன்றிய அரக்கர்கள் முன்னமேயே வரம் பெற்றிருக்கிறபடியால், என்ன பிழை செய்தாலும் யான் அவர்களைக் கொல்லேன். அவர்களைக் கொல்ல வல்லவர் மகா விஷ்ணு ஒருவர்தான். ஆதலால், அவரை யடைந்து குறை தீர்த்துக்கொள்ளுங்கள்," என்று கூறி யனுப்பிவிட்டார். தேவர்கள் விரைந்து சென்று, பாற்கடலை யடைந்து,

" உலகினை யெல்லாம் படைத்தளித் தழித்தும்
உண்டுமிழ்ந் தளந்திடந் தாண்டும்,
நிலையுடை வானாய் வாயுவாய்க் கனலாய்
நீருடன் நிலனுமா யெண்ணில்,

தோலேவிலா வுயிராய்ச் சுடர்களாய்த் தோன்றாச்
சுருதியாய்ச் சிவனய ஞகி,
அலகிலா விளையாட் டாடுவா யகண்டம்
ஆயிஞய் யாருனை யறிவார்? ''

என்று தோத்திரம் செய்து, உற்றது கூறினார்கள்.

அடியார்க் கெளியவராய் ஆபத்தில் உதவிக் காக்கும் அரியானவர், 'பாது காக்கிறேன்,' என்று அபயந் தந்து, அமரர்களை யனுப்பினர். அவர்களும், 'இனி நமக்குப் பயமில்லை,' என்று சந்தோஷம் கொண்டு, இருப்பிடம் சேர்ந்திருந்தார்கள்.

இவ்வாறு எல்லாத் தேவர்களும் அறி துயிலமர்ந்த எம்பெருமானிடஞ் சென்ற செய்தியையும் அவர் அரக்கர்களைத் தொலைத்துப் பாது காப்பதாகக் கூறிய வார்த்தைகளையும் மாலியவான் சாரணர் மூலமாகத் தெரிந்து கொண்டான்; தன் தம்பியர்க்கும் தெரிவித்தான். இன்னது செய்வதென்று தோன்றவில்லை. தன் தம்பிமார்களை நோக்கினன். "தம்பிகாள், தேவேந்திரன் முதலாகவுள்ள தேவர்க ளெல்லாம் நம்மை அடியோடு தொலைத்துவிட வேண்டுமென்று முயல்கிறார்களாம். இப்பொழுதே நாம் படை யெடுத்துச் சென்று, அவர்களை வேரோடு தொலைத்துவிட வேண்டும். சேனைகளை யெல்லாம் முதலில் அனுப்புங்கள். தேர்களோடு விரைவாக நீங்களும் வந்து சேருங்கள்," என்று கூறித் தானும் தேர் மீதேறிப் போர் புரியப் பொன்னுல கடைந்தான். தேவர்கள் வெருண்டோடி யொளித்துக்கொண்டார்கள்.

இவற்றை யெல்லா மறிந்த திருமால், கருடன்மீது வந்து தோன்றிப் படைக் கலங்களை யேவினர். வந்திருப்

பவர் திருமாலென்றறிந்தும், இலக்ஷியம் பண்ணாத அரக்கர்கள், எதிர்த்து நின்று போர் புரிந்தார்கள். இனித்தாமதித்தலாகா தென்றறிந்த ஆதி மூர்த்தி, ஓர் அம்பால் மாலியின் தலையை யறுத்து வீழ்த்தினர். அரக்கர் படைகளெல்லாம் முதுகு காட்டி யோடின. மாலியவானும், சுமாலியும், 'இனி யுயிர் தப்பினால் போதும்,' என நினைத்து, இலங்கைக் கோடினர். "நம்முடைய சேனைகளெல்லாம் மடிந்துவிட்டன. இனி நாம் ஈண்டிருத்தல் கூடாது. ஒருக்கால் மாயவன் கடலைத் தாண்டி இங்கு வந்து பொருதாலும் பொருவான்," என்று நினைத்துப் பாதாள லோகத்தில் சென்று வசிக்க லானார்கள். சின்னாள் வரை இலங்கை பாழாய்க் கிடந்தது.

உலக முண்டுமிழ்ந்த மணி வண்ணரது உந்திக் கமலத்தில் தோன்றிய பிரமன் மகன் புலஸ்தியன் என்று பெயர் கொண்ட ஓர் உத்தமன் இருந்தான், அவன் தவம் செய்தலே தக்கதென் றெண்ணித் தகுந்த இடமாகிய மேரு மலையை யடைந்து, தவம் செய்து கொண்டிருந்தான். தம்மிடத்தே வந்தடைந்தவர்களுக்கு இன்ப மளிக்கும் தன்மை வாய்ந்த சோலைகள் நிறைந்த அம்மலையில், நாக கன்னியர்களும், நான்மறை முனிவர் கன்னியர்களும், பொன்னுலகத்து மங்கையர்களும், தங்கள் தோழிமார்களோடு வந்திருந்து, ஆடிப் பாடிப் பொழுது போக்குவா ரானார்கள். இச்செய்கை புலஸ்தியன் தவத்திற்கு இடையூறாய் இருந்தது. அதைப் பார்த்த அவன், "மங்கைமீர், இனி இவ்விடத்தில் யாரும் வந்து ஆடிப் பாடி யிருத்தல் கூடாது. விளையாடுவீரேல் கருத்தரித்து விடுவீர்கள். ஓடி விடுங்கள்!" என்று கண்

களில் தீப்பொறி பறக்க விழித்தான். கன்னியர்களும் வெருவி யோடிவிட்டார்கள்.

ஒருநாள், இவ்வாறு சாபமிட்டதை யறியாத திரணபிந்து முனிவருடைய மகள், உடன் விளையாடும் கன்னியர்களைத் தேடிக்கொண்டு வழக்கம் போல அம்மலைச் சாரலை யடைந்தாள். உடனே அவள் கருத் தரித்து விட்டாள். அவள் மேனி யெல்லாம் வெளுத்தது. அவள் பிறரைப் பார்க்கவும் நாணம் கொண்டாள்; விரைந்து தந்தையார் இருக்குமிட மடைந்தாள்; அவரை வணங்கி நின்று, "தந்தையீர், யான் பாங்கிமார்களைத் தேடிக் கொண்டு புலஸ்தியர் அருந்தவ மியற்றும் மலைச் சாரலை யடைந்தேன். என்னுடல் நிறம் மாறி இக்கோலமாய் விட்டது. என் செய்வேன்!" என்று கூறினாள்.

நிகழ்ந்தவற்றை ஞானக் கண்ணா லுணர்ந்த திரணபிந்து முனிவர், கன்னியை யழைத்துக்கொண்டு புலஸ்திய னிருப்பிட மடைந்து, "நிறைந்த கேள்வியாய், நினக்கிவள் தாரமாகத் தகுந்தவள்; நல்ல குணவதி; இன்சொல் லுடையவள்; பேரழ குடையவள்; வெகுளி யில்லாதவள்; மாமி மாமனார்க்கு இதஞ் செய்யும் நல் லியல்பு வாய்ந்தவள்; விருந்தினரை யாதரிக்கும் விருப்ப மிக்கவள். இவளை நீ மணந்துகொள்ள வேண்டும்," என்று கூறினர். புலஸ்தியனும் அவர் சொற்படி அவளை மணம் செய்துகொண்டான். அம்மங்கையும் கணவன் உவக்குமாறு வேண்டிய குற்றேவல்களைச் செய்து கொண்டு, தவத்திற் குதவியா யிருந்தாள்.

இங்ஙனம் சில நாட்கள் சென்ற பின், ஒரு நாள் புலஸ்தியன் மனைவியை நோக்கி, "நீ உன் பாங்கியர்

களைத் தேடிக்கொண்டு வரும்பொழுது நான் கூறிய வேத வோசையைக் கேட்டமையால், விச்சிரவா என்னும் நீதி நெறியை யறிந்த குமாரன் ஒருவன் உன் வயிற்றிற் றோன்றுவான்,'' என்று கூறினன். சில நாட்களுக் கெல்லாம் முனிவன் வாக்கின்படியே ஓர் உத்தமக் குமாரன் றோன்றினன். தந்தையைப் போலவே அவனும் உத்தமனாய் விளங்கினன்; தகுந்த பருவம் வரப் பெற்ற பின், பாரத்துவாசருடைய மகளை மணம் புரிந்தான். கணவனும் மனைவியும் ஒத்த அன்பினராய் இல்லறம் நடத்தி வரும் காலத்தில், உலகி லுள்ளோர் யாவரும் கண்டு மன மகிழ்ந்திடும் அழகு பொருந்திய ஒரு புதல்வன் பிறந்தான். பிரமன், இந்திரன் முதலியவர்க ளெல்லாம வந்து அக்குழந்தையைப் பார்த்து, உளம் பூரிக்கப் பெற்றவர்களாய், அவனுக்கு வைச்சிரவணன் எனப் பெயரிட்டுச் சென்றார்கள்.

வைச்சிரவணன், நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து, கற்றுத்தேர்ந்து, தந்தையைப் போலத் தவம் செய்யத் தொடங்கி விட்டான். பல்லாண்டுகள் தவம் செய்த பின், அவன் தவங் கண்டு உவகை கொண்ட பிரமன், அவன் முன் தோன்றி, "அன்பனே, உன்னை யொப்ப அருந்தவம் செய்தவர் எவரும் இல்லை. உன் தவத்தினால் மகிழ்ச்சி யடைந்தேன். வேண்டுவதைக் கேட்பாயாக,'' என்று கூற, வைச்சிரவணன் பிரமனை வணங்கி, "அண்ணலே, இந்திரன், இயமன், வருணன் ஆதியோரை யொப்ப உலக பாலகனாகவும், சிறந்த நிதிக்குத் தலைவனாகவும் இருக்கும் தன்மை வேண்டும்,'' என்றான். பிரமன், 'அவ்வாறே யாகுக,'

என்றருள் செய்து, மனோ வேகமாகப் பறந்து செல்லத் தக்கதும், இரவி தேரினும் சிறந்ததும், ஈரேழுலகத்துள்ள வர்களும் ஏறி யிருப்பினும் இடம் விரிந்து கொடுக்கக் கூடியதும், புரவி யின்றியே நினைத்த இடங்களுக்குச் செல்லக் கூடியதுமான ஒரு புஷ்பக விமானத்தையும் கொடுத்தான்.

இவ்வாறு பெறற்கரிய வரங்களையும் புஷ்பக விமானத்தையும் பெற்ற வைச்சிரவணன், தந்தை தவஞ் செய்யு மிடத்தை யடைந்து, "தந்தையீர், நான் நெடுங் காலம் தவம் செய்து வேண்டிய வரங்களைப் பெற்றிருக் கிறேன்; ஒரு புஷ்பக விமானமும் கிடைத்திருக்கிறது. நான் இருந்து அரசாளத் தக்க சிறந்த இடம் இன்ன தென்று கட்டளை யிட்டருள வேண்டும்," என்று பிரார்த்தித்தான். தந்தை, மன மகிழ்ந்து, "மைந்த, பகைவர்கள் நெருங்குவதற் கரியதாய், ஆகாயம் வரை அளாவியதாய்த் திரி கூடமலையில் ஒரு மாளிகை விளங்கு கிறது. அதிற் குடியேறி யிருந்த அரக்கர்க ளெல்லாம் ஆழி மாயனோடெதிர்த்து அமர் பொருது, தோற்றோடிப் பாதாளத்தில் ஒளித்துக்கொண்டார்கள். அந்த இடம் இப்பொழுது வாளா விருப்பதால், நீ அதிற் குடியேறி யிருக்கலாம்," என்று கூற, அவனும் அவ்வாறே சென்று இருந்தான்.

நாராயணரால் தோல்வி யுற்று ஓடிப் பாதாளத்தில் மறைந்திருந்த சுமாலி, தன் மகளான கைகசிக்குத் தக்க வரனைத் தேடவெண்ணி வந்துகொண்டிருந்தான். அச்சம யம் புஷ்பக விமானத்தின்மீதேறிக்கொண்டு, விண்ணோர் எல்லாம் சூழ்ந்து வர, சங்க நிதி, பதும நிதி முதலிய நிதி

எல்லாம் சேவித்து நிற்க, வைச்சிரவணன் வருதலைக் கண்டான். "வலியார் கீழ்ப்படவும், மெலியார் மேற்படவும் காலம் வந்துவிட்டதே! புலி வாழிடத்திற் பசு இருந்ததுபோல அலியாம் இவனே ஆளுகி, அஞ்சாமல் இலங்கைக்குட் புகுந்து, நலிவார்யாருமின்றி, அரசாளத் தொடங்கிவிட்டானே!" என்று வருந்திப் பாதாளம் புகுந்து, மாலியவானோடு யோசித்து, தன்மகளைப் புலத்தியன் மகனாகிய விச்சிரவசுவுக்கு மணம்புரிந்து கொடுத்து, அவளுக்குப் பிறக்கும் மக்களாலேயே தன்குலம் விளங்க வேண்டுமென்று தெளிந்தான்; தன் மகளை நோக்கினான். "என் அருமை மகளே,

"தக்க குணத்தோய்! பெண்பிறக்கத்
தந்தை குலமும் தாய்குலமும்
புக்க குலமு மிவைவிளங்கும்;
பூமே லிருந்த பொற்பாவை
யொக்கு முருவ முடையாய்! இங்
குன்னா லேநம் குலம்விளங்கும்
மக்க ளுண்டாம் புலத்தியன்றன்
மகனை வரனாய் வரி."

என்று கூறினான்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட கைகசி தந்தை யுரையைத் தலைமேற் கொண்டு புறப்பட்டு, விச்சிரவசு தவம் செய்யு மிடத்தை யடைந்து, ஒன்றும் கூறாது தலை குனிந்த வண்ணமாய்க் காலால் நிலங் கீறிக்கொண்டு நின்றாள். தவம் செய்துகொண்டிருந்த விச்சிரவசு, நிஷ்டை கலைந்து, தன்னெதிரில் நின்றுகொண்டிருந்த

மங்கையைப் பார்த்து, "நீ எக்குலத்தினள்? யார் மகள்? உன் பெயர் என்ன? நீ இங்கு வந்த காரிய மென்ன? தனித்து வந்திருக்கிறாயே! உண்மையை யுரைப்பாயாக," என்று வினவினான். உடனே கைகசி, "சுவாமி, நான் சுமாலியின் மகள். என் பெயர் கைகசி. இனி நான் ஒன்றும் சொல்ல வேண்டுவதில்லை. நீங்களே தெரிந்து கொள்வீர்கள்," என்று வணங்கி நின்றாள்.

முக்காலமு முணர வல்ல முனிவன், "இவள் மக்கட் பேறு கருதியே வந்திருக்கிறாள். நம்மை மணம் புரிந்து கொள்ள வேண்டுமென்ற எண்ண முடையவளாய் இருக்கிறாள்," என்றறிந்துகொண்டு, "பெண்ணே, நீ புத்திரப் பேறு கருதி என்னை அடைந்த காலம் தீது. ஆதலால், உனக்குப் பிறக்கும் பிள்ளைகள் குணத்தினாலும் வரத்தினாலும் கொடியோராய் இவ்வுலகை வருத்திக்கொண்டு இருப்பார்கள்," என்று கூறினன். கைகசி மனம் வருந்தி, "அன்பரே, உம்மை யடைந்து உமதருள் பெற்ற என் வயிற்றில் உம்முடைய குணத்துக் கொவ்வாத மக்கள் பிறக்கலாமா? தேவரீர் அருள் செய்யவேண்டும்," என்று பிரார்த்திக்க, முனிவன் அருள் கூர்ந்து, "பெண்ணே, உன் வயிற்றிற் பிறக்கும் மூன்றாங் குமாரன் உத்தமக் குணத்தனாய், ஆன்றோர்களிடத்தில் அன்புடையவனாய், பேரறிவுடையவனாய்ப் பிறப்பான். நீவருந்தற்க," என்று அருள் செய்தனன்.

சில நாட் சென்ற பின் கைகசி கருவுற்றாள். பத்துத் தலைகளோடும் இருபது தோள்களோடும் கூடியவனாய் இராவணன் தோன்றினான். இரண்டாம் மைந்தனாக,

" நறையார் குழலாள் தன்வயிற்றில்
ஞால மடங்க விழுங்கிடினும்
நிறையா வயிற்றின் நெடுவரைபோல்
நீண்ட வுருவன், நிமிர்கையன்,
பிறையா ரெயிற்றுப் பில வாயன்,
பெருத்த விழியன், ஒருக்காலும்
குறையா தெழுவெம் பசியினொடும்
கும்ப கன்னன் பிறந்தனனால்."

*மூன்றாங் குழவியாக,*

" பண்ணார் மொழியா ளவள் வயிற்றிற்
பருத்த விடையும் பருங்கழுத்தும்
விண்ணார் மேகத் திடியென்ன
வெடித்த குரலு முடையவளாய்,
கண்ணார் கனலும் புகையுமெழக்
கனன்று காலன் கருக்குலையப்
பெண்ணைப் பிறந்தா ளெனவந்து
பிறந்தாள் பெரிய சூர்ப்பநகை."

*முனிவன் வாக்கின்படியே கொடியோர் இம்மூவரும் தோன்றிய பின்னர், நான்காம் மைந்தனாக,*

" மன்னு தவத்துப் புலத்தியன்றன்
மரபு விளங்க மறைவிளங்க,
தன்னே ரில்லாத் தந்தைக்குத்
தக்க மகவாய்ச் சண்டாளர்
அன்னோர் முன்னோ ரவதரித்த
அந்த வயிறு சுத்தமுற
மின்னே ரிடையாள் தன்வயிற்றில்
விளங்கு புகழ்வீ டணன்பிறந்தான்."

தக்கபருவம் வந்தபின், இராவணனும் கும்பகன்னனும் காட்டில் தவஞ் செய்யும் முனிவர் இருப்பிடங்களிற் சென்று, தவத்திற்கிடையூறாய்ப் பேரிடரிழைத்து வந்தனர். உத்தமனான விபீஷணன், பொல்லா வொழுக்கங்களை வெறுத்து, நல்லொழுக்கத்தை மேற்கொண்டு, தருமத்துக்கும் பொறைக்கு மிருப்பிடமாய், முனிவர்களை யெல்லாம் போற்றி, வேதத்திற் கூறப்பட்டபடி தவ வொழுக்கத்தை மேற்கொண்டு விளங்கினான்.

இவர் இவ்வாறிருக்க,தன் தந்தையைப் பணிந்துவர வெண்ணி விமானத்தின்மீதேறிச் சென்றுகொண்டு இருந்த தனபதியைப் பார்த்த கைகசி, மனம் பொறாது, இராவணனைப் பார்த்து, "இராவணா, பார்த்தாயா? இதோ விமானத்தின் மீதூர்ந்து செல்லும் இவன் யார் தெரியுமா? தவம் செய்து நிதிகளை யடைந்ததுமல்லாமல், இவன் இப்புட்பக விமானத்தையும் பெற்றிருக்கிறான். இவன்றான் உன் அண்ணன். நம் முன்னோர்கள் முன் ஆண்டுகொண்டிருந்த இலங்கா புரியை இப்பொழுது ஆண்டுகொண்டு இருக்கிறான். குபேரன் என்று பெயர் படைத்தவன்," என்று கூறினாள்.

தாய் கூறிய வார்த்தைகளைக் கேட்டவுடன் இராவணனுக்கு வருத்தமும் கோபமும் தோன்றின. எயிற்றினால் இதழதுக்கி விழித்தான். 'தவத்தால் இத்தகைய மேம்பாடடையலாமாயின், யானும் என் தம்பிமார்களோடு சென்று, தவம் செய்து, பெறற்கரிய வரங்களைப் பெற்று வருகிறேன்," என்று கூறி, விடை பெற்றுக் கொண்டு, தம்பியரோடு வனம் சென்றான்.

விபீஷணன் ஒரு காலூன்றி, இரவியை நோக்கி இரு கைகளையும் விரித்து, கடவுளை மனத்திலிருத்தித் தவஞ் செய்வா னாயினன். கும்ப கன்னன் கொதிக்கும் காலத்தில் ஐந்தீயிடை நின்றும், கார் காலத்தில் தண்ணீரில் நின்றும், உம்பரும் நடுங்குமாறு தவஞ் செய்தான். இராவணன் ஓராயிர மாண்டுக் கொரு முறை கண் விழித்து, தன் தலைகளை ஒவ்வொரு தலையாக அரிந்து தீயிலிட்டு ஓமம் புரிந்து, ஒன்பதினாயிரம் வருடம் தவம் செய்தான். கடைசியாகப் பத்தாவது தலையையும் அரிந்திட வேண்டிய காலம் வந்துவிட்டது. அப்பொழுது பிரமன் தோன்றி, அவனை நோக்கி, "இராவணா, உனக் கொப்பாகத் தவம் செய்தவர்கள் இவ்வுலகில் யாருமில்லை. உன் தவத்தால் மகிழ்ந்தேன். நீ அரிந்து தீயிலிட்ட சிரங்களெல்லாம் முன்போல முளைத்து விடும். வேண்டிய வரங்களைக் கேட்பாயாக," என்ன, இராவணன், மனிதர்களை மதியாதவனாதலால், மனிதர்களல்லாத மற்றவர்களால் தனக்கு மரணம் நேரிடாதிருக்க வேண்டினன். பிரமன் அவ்வாறே அருள் செய்தான். கும்ப கன்னன், தேவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி நாமகள் செய்த சூழ்ச்சியினால், நித்யத்வம் வேண்டுமென்று கேட்க விரும்பியவன், நித்ரத்வம் வேண்டுமென்று கேட்டுப் பெற்றான். விபீஷணன், மலரவனைப் பணிந்து, 'எவ்வளவு துன்பம் நேரினும், அறத்தைக் கைவிடாதிருக்கவும், பிறருக்குத் தீங்கு செய்யாதிருக்கவும், போரில் யாரும் என்னை வெல்லாதிருக்கவும் வேண்டும்,' என்று வேண்டிப் பெற்றான்.

திருமாலொடு போர் செய்து தோற்றுப் பாதாளம் புகுந்து மறைந்திருந்த மாலியவான் முதலிய அரக்கர்க

ளெல்லாம், இராவணனுதியர் வரம் பெற்றதை யறிந்து மகிழ்ந்து, வெளியேறி வந்துவிட்டார்கள். ஒரு நாள் சுமாலி இராவணனைக் கட்டித் தழுவி, "அப்பா, நீயே பாக்கியவான். உன்னைப் போலத் தவம் செய்து பெறற்கரிய வரங்களைப் பெற்றவர்கள் இவ்வுலகத்தில் யாரிருக்கிறார்கள்? இனிச் சிறிதும் தாமதித்தல் ஆகாது. நம்முடைய பழைய நகராகிய இலங்கையை மீண்டும் பெற்று நீயே மணி முடி புனைந்துகொள்ள வேண்டும்," என்று முன்னடந்தவற்றை யெல்லாம் நவின்றான்.

தனக்கு மூத்தவனான குபேரனோடு போர் செய்ய இராவணனுக்குச் சம்மதமில்லை. எனினும், சுமாலியின் வார்த்தைக் கிணங்கவேண்டியதாயிற்று. ஆனதால், குபேரனிடத்தில் ஒரு தூதனை யனுப்பி, நகரத்தை விட்டுவிட வேண்டுமென்று தெரிவித்தான். குபேரனும் தந்தையைக் கேட்க, அவன், 'விட்டுவிட்டு வேறிடம் தேடிக் கொள்,' என்று சொன்னபடியால், இமய மலையின் ஒருபுறம் ஒரு மாளிகை யமைத்துக்கொண்டு, இலங்கையை விட்டுவிட்டான். அரக்கர்களெல்லாம் இலங்கையிற் குடி புகுந்தார்கள். இராவணன் மாமணி மண்டபத்தில் மந்திரிமார் சூழ்ந்து நிற்க, மணி முடி புனைந்து, மன்னர் மன்னனாய் விளங்கினான்.

கொடுங்கோலனாகிய இராவணன் அரசாண்டு வருங்காலையில், மயன் வந்து, 'இராவணேஸ்வரா, யான் தவம் செய்து பெற்ற ஒரு மகள் இருக்கிறாள். அவளை உனக்கே மணம் செய்து கொடுக்கலாமென்று நிச்சயித்திருக்கிறேன். உலகத்தில், ஒரு பெண்ணை மணம் புரிந்து கொடுக்குங்கால்,

"குலம்வேண்டு மென்றிருப்பார் குலத்துள்ளார்;
கல்வியினுற் குறையா ஞானப்
பலம்வேண்டு மென்றிருப்பார் தந்தைமார்;
பரந்தபெருஞ் செல்வ முள்ள
தலம்வேண்டு மென்றிருப்பார் தாய்மார்கள்;
யவ்வனமும் அழகும் சார்ந்த
நலம்வேண்டு மென்றிருப்பார் நாறுகுழல்
கன்னிமார் நலத்தின் மிக்கார்."

இக்குணங்க ளெல்லாம் நின்னிடத்தே யிருக்கின்றன," என்று கூறி, மண்டோதரியை மணம் புரிந்து தந்து, மலரவன்மீதேவினுலும் உயிர் கொண்டன்றி மீளாத தான ஒரு வேலும் கொடுத்தான். கும்ப கன்னன் வச்சிரச் சுவாலை யென்ற ஒரு பெண்ணை மணந்தான். உத்தமக் குணத்தனுகிய விபீஷணன், சைலூஷணன் என்ற கந்தருவனுடைய மகளான சரமை யென்பவளை இல்லறத் துணைவி யாக்கிக்கொண்டான்.

இவ்வாறு வரத்தினுலும் வலிமையினுலும் எல்லாரினும் மிக்கு விளங்கும் இராவணன், தன்னை நலிய வல்லார் யாவருமில்லை யென்று தருக்கி, தேவர்களையும் முனிவர்களையும் வருத்தினன். அவர்கள் செய்யும் யாகங்களை யெல்லாம் கெடுத்தான். வேதமோதலைத் தடுத்தான். உலகத்தவர்க ளெல்லாம் செய்வதறியாது திகைத்து, இருக்குமிடம் தெரியாது ஒளித்துக்கொண்டார்கள். தேவர்க ளெல்லாம் அவன் செய்யும் துன்பத்தைப் பொறுக்கமாட்டாதவர்களாய், அயனிடம் சென்று முறையிட்டார்கள். அவன் ஒன்றும் செய்ய இயலா

தென்று கூறி, எல்லாரையும் அழைத்துக்கொண்டு, பரமசிவனிடம் சென்முன்.

அவர் தாம் முன்னரே வரம்கொடுத்த செய்தியைக் கூறினர். இனித் திருமாலிடம் செல்வதே தக்கதென் றெண்ணித் திருப்பாற்கடலை யடைந்து, தங்கள் குறை யைச் சொல்லி எல்லாரும் முறையிட்டார்கள். ஆபத் துக் காலத்தில் காக்கும் அடியார்க் கெளியரான அண் ணல், அவர்களை நோக்கி, "நான் அயோத்தியில் தசரதன் மதலையாக வந்தவதரித்துக் காக்கின்றேன்," என்றருள் செய்ய, எல்லாரும் சிறிது காலம் அமைதியோடு இருந் தார்கள்.

அயோத்தியில் தசரதச்சக்ரவர்த்தி மக்கட்பேறின்றி யாகம் செய்ய, திருமால், சங்கு சக்கரங்களெல்லாம் இளை ஞர்களாய் அடிபரவ இராமனாக வந்து தோன்றி, விசுவா மித்திரருடைய வேண்டுகோளுக்கிணங்கிக் காடு சென்று, அவருடைய யாகத்தைக் காத்து, மிதிலையை யடைந்து, வில்லை யொடித்துச் சானகியை மணந்து, நகருக்குத் திரும்பிவந்து, பட்டாபிஷேகம் செய்துகொள்ள இருக் கும் சமயம், சிற்றன்னையான கைகேசியினால் தடுக்கப் பட, தந்தை சொல்லைக் காப்பதே கடனென்றெண்ணி, இலக்குவனோடும் மனைவியோடும் பதினான்கு வருடம் காடுறைதலை மேற்கொண்டு சென்று, சித்திரகூடத்தில் தங்கியிருந்தனர்.

சூர்ப்ப நகையின் மூலமாகச் சீதையின் அழகைக் கேட்ட இராவணன், உயர்ந்தோர் சொற்களைக் கேளா மல், மாரீசனை மாய மானாகச் செய்து, சீதையின் முன் விளையாடச்செய்தான். அதைக்கண்ட சீதை, அம்மானைப்

பிடித்துத் தரல் வேண்டுமென்று கேட்க, இராமபிரான் அதைப் பிடிக்குமாறு வெளியே செல்ல, பின்னர் இளையோனும் சென்றனன். அந்தச் சமயத்தில் வஞ்சக மாறுவேஷம் பூண்டு வந்த இராவணன், அவளிருந்த பன்னசாலையோடும் பெயர்த்தெடுத்துக்கொண்டு, வழியில் நேர்ந்த பல இன்னல்களையும் விலக்கி, இலங்கையிற் புகுந்து, அசோகவனத்தில் அரக்கியர் காவலில் வைத்து விட்டான்.

மாய மானைப் பின் பற்றிச்சென்ற இராமபிரானும் இளையோனும், அதைக் கொன்று திரும்பி வந்து, சீதையைக் காணாது தேடிச்சென்று, சடாயு மூலமாகச் செய்தியறிந்து, சுக்கிரீவனைக் கண்டு அவனோடு நட்புக்கொண்டு, வாலியை வதைத்து, சுக்கிரீவனோடும் அவனுடைய சேனைகளோடும் இலங்கையை யடைய வெண்ணிக் கடற் கரையில் தங்கி, இராவணனிடம் ஒரு தூதனையனுப்பினார்கள்.

இஃதிவ்வாறிருக்க, இராவணன், அரம்பையர்கள் கவரி வீசவும், திலோத்தமை, ஊர்வசி முதலானவர்களெல்லாம் ஏவின செய்து நிற்கவும், சுற்றத்தாரோடும் மந்திரிமார்களோடும் கொலு மண்டபத்தை யடைந்து, சிம்மாசனத்தமர்ந்து, சபையோரை நோக்கி, "இவ்வுலகில் ஒருவரும் எனக்கு நிகரில்லை என்று சொல்லுமாறு இவ்வளவுகாலம் அரசு புரிந்தேன். இப்பொழுது, கேவலமான ஒரு மனிதனால் ஏவப்பட்ட குரங்கு வந்து, நம்மில் அநேகரைக்கொன்று, நம் நகரத்தையும் நிலைகுலையச் செய்துவிட்டது. இதைக்காட்டிலும் வேறு இழிவு

நமக்கு என்னவேண்டும்? தீர யோசித்துச் செய்ய வேண்டுவதைச் செய்வீர்களாக," என்றனன்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட மந்திரிமார்கள், இராவணனை நோக்கி, "வெள்ளியங்கிரியை விடையின் பாகனோடெடுத்து விண்டொட வீசி ஆர்த்த வீரரே, கரன் முதலான வீரரைக்கொன்று சூர்ப்பநகையை மூக்கரிந்த கள்வர்களை நாம் முன்னமே விண்ணுலகத்திற் கனுப்பியிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல், வஞ்சனை செய்து சீதையைக் கவர்ந்துகொண்டு வந்தமையால், இத்தகைய இன்னல்கள் நேர்ந்தன. இனித் தாமதித்தல் கூடாது. விரைந்து சென்று கோறலே தக்கது. நம்மரசியலுக்கு இழிவு வந்துவிட்டதே யென்றெண்ணி வருத்தப்பட்டிருந்தால், பெருமை வந்துவிடுமா? ஈண்டு வந்து போன குரங்கையும், அதை யேவினவர்களையும் கொல்லத் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டும்," என்று கூறினார்கள்.

இவற்றை யெல்லாம் அமைதியோடு கேட்டுக்கொண்டிருந்த விபீஷணன், இராவணனை நோக்கி, "எந்தை நீ ; யாயும் நீ ; எம்முன் நீ ; வந்தனைத் தெய்வம் நீ ; மற்றும் நீ; முற்றும் நீ," என்று ஸ்தோத்திரித்து வணங்கி, "நீ இந்திரப் பதத்தை யிழக்கத் துணிந்துவிட்டாய். நான் கூறுவதைச் சற்றுக் கேட்பாயாக : நின் நகரும், நின் வெற்றியும் சானகி யென்னும் உலக மாதாவின் கற்புத் தீயினால் வெந்தனவே யல்லாமல், வானரம் வந்து சுட்டதென்று எண்ணாதே ; கைலையைத் தூக்கிய நாளில் நந்தியிட்ட சாபத்தை மறந்துவிடாதே. தீயிடைக் குளித்த தெய்வக் கற்பினளான வேதவதி யிட்ட சாபம்

வீண் போகுமோ? வந்திருப்பவர்கள் யாரென்று நீ நன்றாய்த் தெரிந்துகொள்ளவில்லை. அவர்கள், யாகக் குதிரையைத் தேடிக்கொணரும் பொருட்டு இவ்வுலகைத் தோண்டிக் கடலாக்கிய சகரன் வழித் தோன்றியவர்கள்; இறந்த மூதாதையர்களை உய்விக்கவேண்டிச் செயற்கருந் தவம் செய்து கங்கையைக் கொணர்ந்த பகீரதன் வழியில் வந்தவர்கள்; சம்பராசுரனை ஜயித்து, விண்ணாட்டைத் தன்னுடாக்கி, இந்திரனுக்கு அளித்து வந்த தசரதன் மக்கள்; ஒத்தாரும் மிக்காரும் இன்றி விளங்குபவர்கள்; தேவர்களாலும், முற்று முணர்ந்த ஞானிகளாலும் நினைவருந்தன்மையர்கள்; சாபாநுக்கிரக சக்தி வாய்ந்த முனிவர்களால் அருளப் பெற்ற படைகளைக் கொண்டவர்கள். ஆதலால், அவர்களோடு எதிர்த்துப் போர் செய்தல் ஆகாது. நாம் செய்தது கேவலமான செய்கை. நம்முடைய கீர்த்தியும் வலிமையும் குறைந்து, பழி மிகுந்து, நம் கிளைகள் அழிவுபடுதற்கு முன்னமே, அசைவில் கற்பினளான அணங்கை விட்டுவிட்டால், நன்மையடையலாம்,'' என்று கூறினன்.

இராவணனுக்கு இவ்வார்த்தை, காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியதுபோலிருந்தது. அவன், கையோடு கைபுடைத்து, உடல் குலுங்கச் சபைநடுங்கச் சிரித்தான். விபீஷணனை நோக்கி, நெருப்பெழ விழித்தான். "விபீஷணா, நீ அரக்கர் குலத்தில் எனக்குத் தம்பியாகப் பிறந்தும், இம்மானிடர் செயலுக்குப் பயந்து பேசுகிறாய். பரமசிவனும், கொண்டல் வண்ணனும் கூட என் பெயர் கேட்ட வளவில் நடுங்குகிறார்கள். இம் மனிதர்கள் எனக்கு எம்மாத்திரம்? இவர்கள் உத்தம

வீரர்களாக இருந்தால், குரக்கினத்தவனாகிய வாலியை மறைந்து நின்று எய்திருப்பார்களா? தந்தை கொடுத்த நாட்டை இல்லையாக்கின கைகேசியைச் சும்மா விட்டிருப்பார்களா? சற்று யோசித்துப்பார். உன்னைத் தவிர இம்மானிடரைப் புகழ்பவர்கள் இவ்வுலகில் வேறு யாருமிருக்க மாட்டார்கள். போருக்கு அஞ்சி இவ்வண்ணம் கவல்கின்றாயென நினைக்கிறேன்," என்றான்.

விபீஷணன், பின்னும் தேற்ற முயன்று, "இராமன் மஹா விஷ்ணுவின் அவதாரம் என்பதை மறந்து விடாதே. முன்னாளில் அவன் வெகுளிக்கு இலக்காகிக் கிளையொடு முடிந்தார் பலர். அவர்களுள் இரணியன் என்பவனும் ஒருவன். அவனைப்பற்றிச் சிறிது சொல்கிறேன். கேட்ட பின்னர் உனக்குத் தோன்றுவதைச் செய்," என்று கூறத் தொடங்கினான்:

"அவ்விரணியன் நித்தியர்களான பிரமன், விஷ்ணு, உருத்திரர்கள் உலகத்திலும்கூட என்றும் தன் பெயரே வழங்கும்படி அரசாண்டான்; அம்மூவர்களும் தன் ஆணை கொண்டே முத்தொழிலையும் செய்ய நியமித்திருந்தான்; அவன் ஆற்றலுக்கோ ரளவில்லை. ஏழு கடல்களும் அவனுக்கு முழந்தாளளவே யாகும். குளிக்க வேண்டின், ஆற்று நீர் குறைவென்றும், கடல் நீர் உவர்ப்பென்றும், அவற்றிற் படியாது அண்டத்தைக் கடந்து சென்று, பெரும்புறக் கடலில் படிந்து மீள்வான்; வேண்டுமேல், அஷ்ட குல பர்வதங்களையும் பந்துபோலெடுத்தெறிந்து விளையாடுவான்; சந்திரனிடத்தில் வெம்மையும் சூரியனிடத்தில் தண்மையும் தோன்றுமாறு செய்வான்; நீரில் வெம்மையும், நெருப்பில் தண்மையும்

விளங்கச் செய்வான் ; அஷ்ட திக்குப் பாலகர்களையும் திசைமாற்றி வைத்துவிடுவான்; தேவர்கள் தினந்தோறும் அவன் தாளிலேயே அருச்சனை செய்வார்கள். தினந் தோறும் காலையில் எழுந்திருந்து பெரும்புறக் கடலில் மஞ்சனமாடி நாகலோகத்தில் இன்னமுதருந்தி, இந்திர லோகத்தில் பகற்பொழுது கழித்து மாலையுலாவப் பிரம லோகம் செல்வான். அவன் பூமியில் காலை வைத்தால், ஆதிசேஷன் நடுங்குவான்; நிமிர்ந்து நின்றால், அவன் முடிசெல்லும்வரை வானமும் உயர்ந்துசெல்லும். தேவர் களும் அசுரர்களும் சேர்ந்து பாற் கடல் கடையுமாறு கொண்ட மந்தர மலையைத் தண்டெனக் கொள்ள வெண்ணி, ஒருக்கால் கையில் தூக்க, நொய்தாக இருந் தமையின், எறிந்துவிட்டான் ; பிரம ருத்திராதிகளெல் லாம்கூட அவன் பெயரையே பாராயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். இனி யுனக்குச் சொல்ல வேண்டு வதில்லை. அவன் பெற்ற வரத்தைக் கேள்:

" பெண்களாலும் அவன் சாகமாட்டான் ; ஆண்க ளாலும் சாகமாட்டான் ; தேவர்களாலும் சாகமாட் டான் ; இயக்கர்களாலும் சாகமாட்டான் ; மண்ணிலும் சாகமாட்டான் ; விண்ணிலும் சாகமாட்டான்.

"நீரிற் சாகிலன்; நெருப்பிலும் சாகிலன்; நிமிர்ந்த
மாரு தத்தினு மண்ணின்மற் றேவற்றினும் மாளான்;
ஒருந் தேவரும் முனிவரும் பிறர்களு முரைப்பச்
சாருஞ் சாபமும் மற்றவன் றனைச்சென்று சாரா;

"உள்ளிற் சாகிலன்; புறத்தினும் உலக்கிலன்; உயர்ந்த
கொள்ளைத் தெய்வவான் படைக்கலம் யாவையும் [கொள்ளா;

நள்ளிற் சாகிலன்; பகலிடைச் சாகிலன்; நமனார்
கொள்ளச் சாகிலன்; யார்இனி அவன்உயிர்கோள்வார்?"

"இத்தகைய வரமும் வலியும் பெற்ற இரணியனுக்கு, தருமசொரூபியாய், தாயைப்போல உயிர்களிடத் தன்புள்ளவனாய், ஒரு குமாரன் தோன்றினான். உரிய பருவம் வரப்பெற்ற பின், ஓர் ஆசிரியனிடம் ஒப்புவித்துக் கலைகளைக் கற்கச் செய்தான். ஆசிரியன் மற்றவர்களுக்குக் கற்பிக்கும் முறைப்படி, 'இரணியாய நம:' என்று முதலில் சொல்லுமாறு கூறச் சிறுவன் மறுத்து, 'வேதத் துச்சியில் விளங்குவதாய், மெய்ப்பொருளோடு கூடியதாய் விளங்கும் நாராயணனுடைய நாமத்தையன்றி வேறொன்றும் கூறேன்,' என்றனன். ஆசிரியன் நடுக்கம் கொண்டு, இரணியனிடம் சென்று கூறினன். அவன், மகனை யழைத்துத் தான் பெற்ற வரத்தையும் வலிமையையும் கூறித் தன் பெயரையே கூறுமாறு நல்லுபதேசங்கள் செய்தான். பிரகலாதன் ஒன்றையும் பொருட்படுத்தவில்லை. அதனால், வெகுண்டு, இரணியன் தன் மகனைக் கடலில் தள்ளும்படி செய்தான்; வாளால் வெட்டுவித்தான்; பாம்பினாற் கடிக்கச் செய்தான்; மலையி னுச்சியினின்றும் உருட்டுவித்தான்; நஞ்சூட்டிக் கொல்லச் செய்தான்; ஒன்றினாலும் அம்மைந்தன் இறக்கவில்லை. இனியாவது அறிவு வந்திருக்குமென் றெண்ணி, "மகனே, நீ எல்லாரும் சொல்வது போலச் சொல்ல மாட்டேன் என்கிறாய். நீ கூறுபவன் எங்கிருக்கிறான்? அவனை நீ காட்டுவாயா?" என, பிரகலாதன், "தந்தையீர், உம் விருப்பப்படி காட்டுவேன்.

அவன் தூணினும் இருப்பன் ; துரும்பினும் இருப்பன் ; எங்கு மிருப்பன்,'' எனக் கூறினன். இரணியன் பொருது, 'அப்பேர்ப்பட்டவன் இங்கு வருவானானால், சிங்கம் யானையைக் கொன்று வீழ்த்துவது போல ஒரு நொடிப் பொழுதில் கொன்று வீழ்த்துவேன்,' என்று பக்கத்திலிருந்த தூணில் ஓர் உதை உதைத்தான். உடனே அடியார்க் கெளியனான எம்பெருமான், பாதி உடல் சிங்கமாகவும், பாதி உடல் மனிதனாகவும் இருக்கு மாறு வடிவு கொண்டு தோன்றி, இரணியனை வயிற்றிற் குத்திப் பிளந்தெறிய, அவன் உயிர் துறந்தான். உத்தமனான பிரகலாதனே மணி முடி புனைந்து அரசாண்டான்

"அண்ணா, இனி நான் சொல்லத் தக்கதாக ஒன்றும் இல்லை. முன் நடந்தவற்றை யெல்லாம் எண்ணிப் பார். இரணியன் பெற்ற வரமும் வலியும் என்னாயின ? கற்பரசியான சீதையை விட்டு விடாமல் வைத்துக் கொள்ள வேண்டுமென்று நினைப்பது, தீயைத் துகி லிடைக் கட்டி வைக்க விரும்புவதை யொத்திருக்கிறது. உடனே விட்டு விடு. கார்மேக வண்ணன் நம்மைக் காப் பான்,'' என்று கூறினன்.

அது கேட்ட கொடுமதியனான இராவணனுக்கு அள விறந்த கோப முண்டாயிற்று. 'நீயும் அப்பிரகலாதனோடு சேர்ந்தவன்றான். நீ நான் தோற்றுப் போன பின், அவ னைப்போல அரசெய்தி வாழலாமென்று நினைத்துவிட் டனை ; வந்த மனிதர்களிடத்தில் அன்பு கொண்டனை ; மன முருகுகின்றனை ; என்னை வெல்ல வேண்டு மென்று நினைவு கொண்டனை. அன்று வானரம் வந்து நம் சோலையை யழிக்கும்போது கொன்று தின்று விடுங்க

ளென்று தூதரை யனுப்பினேன். தூதரைக் கொல்லுதல் வெற்றியன்றென்று கூறித் தடுத்துவிட்டனை. அம்மனிதரைத் துணையாகக் கொண்டு அரசடைய வெண்ணியே இவ்வாறு நீ சொன்னதாக நினைக்கிறேன். மனிதர்பால் வைத்த அன்பினனாய் வஞ்சக மனத்தோடு கூடிய உன்னை உடன் வைத்து வாழ்தல் நஞ்சைக் கொண்டு வாழ்தலை யொக்கும். பழி வருமே யென்று உன்னைக் கொல்லாது விடுத்தேன். என் கண்ணெதிரில் நிற்காதே; நின்றால், உயிரை யிழந்து விடுவாய். விரைந்தோடுவாயாக,'' என்று உரப்பினான். விபீஷணன் அதையும் பொருட்படுத்தாமல், வானிடைச் சென்று நின்றுகொண்டு,

"வாழியாய் கேட்டியால் வாழ்வு கைம்மிக
ஊழிகாண் குறுநின துயிரை யோர்கிலாய்
கீழ்மையோர் சொற்கொடு கெடுதல் நேர்தியோ?
வாழ்மைதான் அறம்பிழைத் தவர்க்கு மாகுமோ?

"புத்திரர் குருக்கள்நின் பொருவில் கேண்மையோர்
மித்திரர் அடைந்துளோர் மேலியர் வன்மையோர்
இத்தனை பேரையு மிராமன் வெஞ்சரம்
சித்திர வதஞ்செயக் கண்டு தீர்தியோ?

"எத்துணை வகையினும் உறுதி யெய்தின
ஒத்தன உணர்த்தினேன் உணர கிற்றிலை!''

என்று கூறி, அனலன், அனிலன், அரன், சம்பாதி யென்ற அமைச்சர் நால்வரும் பின் தொடர, 'எல்லையில் பெருங்குணத்தனாகிய இராம பிரானை யடைந்து, நம் பிறவியைப் போக்கிக் கொள்ளுதலே மேல்,' எனத் துணிந்து, தவம் செய்து பிரமனிடம் பெற்ற வரம் பலிக்

கும் காலம் வந்ததென்று சந்தோஷம் கொண்டு, இராம னிருக்குமிடம் சார்ந்து, "எந்தையே, இராகவா, சரணம் புகுந்தேன் ; நீ என்னைக் காப்பாற்ற வேண்டும்," என்று கதறினான். இச்சொற்களைக் கேட்ட சேனை வீரர்கள், 'நம்மிடத்தில் ஓரரக்கன் வந்துவிட்டான். உடனே பற்றுங்கள் ; ஏற்றுங்கள் ; சிறையி லடைத்துவிட்டு, எம்பெருமானிடம் தெரிவிப்போம்," என்று ஆரவாரம் செய்தார்கள்.

உள்ளிருந்து இவ்வார்த்தைகளை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த இராம பிரான், மயிந்தன், துமிந்தன் என்ற இரு வீரர்களை யனுப்பி, நடந்தவற்றை யறிந்து கொண்டான். சுக்கிரீவன் முதலியவர்களை யெல்லாம் விசாரித்தான். ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குத் தோன்றியவாறே கூறினர். விபீஷணனுடைய நடையுடை பாவனைகளை யெல்லாம் நன்கு தெரிந்த அநுமான் அவனுடைய உத்தமமான தோற்றத்தையும் செய்கைகளையும் கூறினான். இராம பிரான், "அடைக்கலம் புகுந்தவர்களைப் பாதுகாத்தலைப் போன்ற தருமமும், தள்ளி விடுதலைப் போன்ற பாவமும் இல்லை. ஒரு புறுவானது, மழையில் நனைந்து, பசியா லலைந்து திரிந்து, பேடையைப் பிடித்துத் தன்னையும் பிடிக்க வேண்டுமென்று வந்து அடைந்த வேடனைக் காக்க வேண்டி, தழல் கொணர்ந்து தீ மூட்டித் தானும் அதில் வீழ்ந்திறந்து வேடனுக் குணவாகி வீடு பெற்ற வரலாறு மறைந்துவிடுமா? யானையை முதலை பற்றி யிழுக்கத் துன்பம் பொறாது யானையானது 'ஆதி மூலமே! காக்க வேண்டும்,' என்று அழைத்த காலத்தில், விலங்கென்று

நினைத்துக் கடவுள் தள்ளி விட்டாரா? சரண் புகுந்தாராஞல், யாராயிருந்தாலும், அவர்களைக் காப்பாற்ற வேண்டும்,'' என்று கூறி, விபீஷணனை யழைத்து வருமாறு கட்டளை யிட்டான். உடனே சுக்கிரீவன் விரைந்து சென்று, விபீஷணனைத் தழுவி, இராமனெதிரில் அழைத்து வந்து நிறுத்திஞன்.

விபீஷணன் இராமனைத் தன் கண் குளிரக் கண்டு, "சுவாமி, சீதையைப் பிரித்து வனத்திடை வைத்த பாவியான இராவணனுடைய தம்பியென்று தள்ளிவிடாமல் என்னையும் ஏற்றுக்கொண்டீரே! பரமசிவன் உண்ட நஞ்சு போல நானும் உயர்வை யடைந்தேன். என் தவம் பலித்தது; பிறவி யழிந்தது; பெறத் தக்க பேறும் பெற்றேன்,'' என்று கூறி, மெய்ம்மயிர் சிலிர்க்கக் கால்களில் வீழ்ந்தான்.

இராம பிரான் கருணை கூர்ந்து, ஆண்டிருக்கச் செய்து, "விபீஷணு, பதினுலுலகங்களும் என் பெயரும் எத்துணை நாள் வாழுமோ, அவ்வளவு காலம் வரை வாளெயிற்றரக்கர் வாழும் இலங்கைச் செல்வம் நின்னதே யாகும்; கொடுத்து விட்டேன்.

"குகனேடும் ஐவ ரானேம் முன்பு;பின் குன்று சூழ்வான்
மகனேடும் அறுவ ரானேம்; எம்முழை யன்பின் வந்த
அகனமர் காத லைய! நின்னேடும் எழுவ ரானேம்;
புகலருங் கானம் தந்து புதல்வராற் பொலிந்தான் நுந்தை.''

என்று கூறி, இளையவனை விபீஷணனுக்கு மகுடம் சூட்டும்படி கூறினன். மகுடம் சூடப் பெற்ற விபீஷணன், தீய அரக்கனேடு கூடப் பிறந்த பாவம் நீங்கப் பரதனுக்குக் கொடுத்தது போலப் பாதுகையைத் தரச் செய்து,

தன் தலையில் அணிந்துகொண்டு, ஆனந்தம் கொண்டிருந்தான்.

"இற்றை நாளளவும் இவ்வுலகில் உள்ள எல்லோரும், இருடிகளும், இமையோர்களும், ஞானிகளும், பக்தர்களும், அநேகம் யாகங்களைச் செய்தவர்களும், மகா தவசிகளும் அடைய முடியாத திருவடிக் கமலத்தை இலங்கை வேந்தன் பெற்ற பாக்கியமே பாக்கியம்!" என்று கூறிப் பெரியோ ரெல்லாம் வியந்து கொண்டாடினர்.

இராமபிரான் விபீஷணனை நோக்கி, இலங்கையின் தோற்றத்தையும், இராவணன் வலிமையையும் கூற வேண்ட, அவனும் எல்லாவற்றையும் ஆதியோடந்தமாகக் கூறினன். உடனே இராமபிரான் வருணனை வழி வேண்டிப் பெற்றுக் கரையை யடைந்து, மறுபடியும் அங்கதனைத் தூதனுப்பிச் சீதையை விடுமாறு வேண்ட, இராவணன் விடாமையால், போருக்கெழுந்தான். பல நாட்களாகப் போர் நடந்தது. புதல்வர்களோடும் சேனைகளோடும் கொடுந்தொழிலனுகிய இராவணன் மடிந்தான். எவ்வளவு தீமை செய்தாலும், உடன் பிறந்த அன்பு நீங்குமா? இராவணன் இறந்தவுடன் விபீஷணன் மன முருகி,

"உண்ணுதே யுயிருண்ணு(து) ஒருநஞ்சு ;
சனகியெனும பெருநஞ் சுன்னைக்
கண்ணுலே நோக்கவே போக்கியதே
யுயிர்!நீயும் களப்பட் டாயே!
எண்ணுதேன் எண்ணியசொல் இன்றினித்தா
னெண்ணுதியோ வெண்ணி லாற்றல்
அண்ணுவோ! அண்ணுவோ! அசுரர்கட்குப்
பிரளயமே! அமரா கூற்றே!"

" அன்றெரியின் விழுவேத வதியிவள்காண்
உலகுக்கோர் அன்னை யென்று
குன்றனைய நெடுந்தோளாய்! கூறினேன்
அதுமனத்துக் கொள்ளா தேயே
உன்றனது குலமடங்க உருத்தமரிற்
படக்கண்டு முறவா காதே
போன்றினையே! இராகவன்றன் புயவலியின்
றறிந்துதான் போகின் றுயே!"

என்றேங்கி யழுது, அரற்றினன். சாம்பவன் அவனை எடுத்துத் தேற்றினன். ஒருவாறு தெளிந்த விபீஷணன், இராவணனுக்கும், மற்ற அரக்கர்களுக்கும் நீர்க்கடன் முதலியவைகளைச் செய்து முடித்து, இராம பிரான் இருக்கையை யடைந்தான்.

இராம பிரான் இளையவனை நோக்கி, 'நீயே விபீஷண னுக்கு மகுடம் புனைய வேண்டும்,' என, இளையோனும் வேத விதிப்படி மகுடம் சூட்டினன். தேவர்களெல்லாம் ஆர்த்தெழ, விபீஷணன் அரியணைமீதமர்ந்து விளங்கி னன்.

பதினன்கு வருடங்கள் கழிந்ததால், இராம பிரா னுக்குப் பரதன் நினைவு வந்தது. உடனே அக்குறிப் பறிந்த விபீஷணன், புட்பக விமானம் கொணர்ந்து, எல்லாரையும் இருக்கச் செய்து, அழைத்துக்கொண்டு, வழியிலுள்ள முனிவர்களை யெல்லாம் தரிசித்து, குக னையு மழைத்துக்கொண்டு, பரதனைக் கண்டு, அயோத்தி யடைந்தான். நகரமாந்த ரெல்லோரும் பெருநிதி பெற் றது போல மகிழ்ந்தனர். நல்ல நாளில் வசிட்டர் மகு டஞ் சூட்ட, இராம பிரான் அரியணை வீற்றிருந்து அர சாண்டனன். விபீஷணனும் உத்தரவு பெற்றுத் தன் நகரடைந்து, ஜனங்களை அன்போடு ஆண்டு, பேரின்ப மடைந்தான்.

சுபம்

THE B. N. PRESS, MADRAS.